# தமிழரசு

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

மலர் : 52 இதழ் : 9

மார்ச் 2022

விலை ரூ.20/–

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு





## ‘நான் முதல்வன்’ திட்டம் தொடக்கம்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 12.03.2022 அன்று,
சென்னை விமான நிலையத்தில், உக்ரைனிலிருந்து தமிழகம் திரும்பிய மாணவ, மாணவிகளைப் பூங்கொத்து வழங்கி வரவேற்றார்.

மார்ச் 8 :
சர்வதேச மகளிர் தினம்



# அடிமைத்தனத்தைத் தகர்த்தெறியும் வலிமைமிகு போர்க்குரல் பெண்களே...



**பு**த்துலக ஆக்கத்திற்கு இன்றியமையாது இருக்கும்
மகளிர் அனைவருக்கும் மகளிர் நாள் நல்வாழ்த்துக்கள்!

இரத்த பேதம், பால் பேதம் கூடாது என்ற முழக்கத்தோடு,
ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவருக்கான, சமூக விடுதலைக்காகப் போராடும்
இயக்கம்தான் திராவிட இயக்கம். "பெண் ஏன் அடிமையானாள்?" என்று கேள்வியெழுப்பி,
அறிவொளிப் பாய்ச்சிய அறிவாசான் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா,
முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரது வழி நடைபோடும் நமது 'திராவிட மாடல்' அரசு,
மகளிர்க்கான எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

பெண்களுக்குச் சொத்தில் சமவுரிமை,
அரசு வேலைவாய்ப்புகளில் 30 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கப்பட்டு
இப்போது 40 விழுக்காடாக உயர்வு,
தொடக்கப் பள்ளிகளில் முழுவதும் பெண் ஆசிரியர்கள் நியமனம்,
உள்ளாட்சி அமைப்புகளில் இடஒதுக்கீடு, பேறுகால விடுப்பு ஓராண்டாக உயர்வு,
மகளிர் சுய உதவிக் குழு, இலவச எரிவாயு அடுப்பு,
ஈ.வெ.ரா. மணியம்மையார், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, மூவலூர் இராமாமிருதம் அம்மையார்,
டாக்டர் தர்மாம்பாள் ஆகியோர் பெயரில் திருமண நிதியுதவி
உள்ளிட்ட மகளிர் நலத் திட்டங்கள், கல்விக் கட்டணச் சலுகைகள்,
நகரப் பேருந்துகளில் இலவசப் பயணம் என்று பட்டியலிட்டுக் கொண்டே செல்லலாம்.
இத்திட்டங்கள் பெண்களுக்கான
சமூக, பொருளாதார உரிமைகளை மீட்டளிக்கும் திட்டங்கள்.

முன்னத்தி ஏராகத் திராவிட முன்னேற்றக் கழகம் செயல்படுத்திய திட்டங்கள்,
இன்றைக்கு நாட்டுக்கே வழிகாட்டியாக அமைந்துள்ளன.

சொற்களால் பெண்களைப் போற்றி செயல்களால்
அவர்களை அடிமைப்படுத்திய பழமைவாத காலம் மிக வேகமாக மாறி வருகிறது.
பெண்களது நலனும் உரிமையும் காக்கப்படும். மகளிர் முன்னேற்றத்திற்கு
நமது 'திராவிட மாடல்' அரசு என்றும் துணை நிற்கும்.

அடிமைத்தனத்தைத் தகர்த்தெறியும் வலிமைமிகு போர்க்குரல் பெண்களே!

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

# தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2053
பிலவ வருடம் : மாசி – பங்குனி
மார்ச் 2022

மலர் : 52 விலை ரூ.20 இதழ் : 9

ஆசிரியர் - வெளியிடுபவர்
முனைவர் **வீ.ப. ஜெயசீலன்,** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
**த. ஹரிராம்**
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
**அ. மகேஸ்வரி**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
**சு. தீபா**
**எஸ். உதயா கதிரவன்**
**ச. மஞ்சுளா**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
**அ. சுகுமார்**
**மு. மணிமேகலை**
**அ. மதன்**
**கு. சுபாஷ்**

கணினி வடிவமைப்பு
**தி. ஜெய்சங்கர்**
**க.இரா. உமாமகேஸ்வரி**

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
**கோ. சந்திரசேகர்**

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
**தொலைபேசி : 22542224 / 22542221**
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தாத் தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.


**இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட**
**பெயலும் விளையுளுந் தொக்கு.** *(குறள் : 545)*

*நீதி வழுவாமல் ஓர் அரசு நாட்டில் இருக்குமேயானால் அது, பருவகாலத்தில் தவறாமல் பெய்யும் மழையினால் வளமான விளைச்சல் கிடைப்பதற்கு ஒப்பானதாகும்.*

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

## இந்த இதழில்...


★ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்களின் பிறந்த நாள் ......... 5

★ 'நான் முதல்வன்'– பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டுத்திட்டம் ......... 9

★ உக்ரைனில் சிக்கித் தவித்த தமிழர்களை மீட்கும் பணியில் மாண்புமிகு முதலமைச்சர் ......... 14

★ 45ஆவது சென்னை புத்தகக் காட்சி 2022 ......... 24

★ விருதுநகர்–பந்தல் குடியில் ராம்கோ சுற்றுச்சூழல் சீரமைப்புப் பூங்கா ......... 34

★ தூத்துக்குடியில் "சர்வதேச அறைகலன் பூங்கா" ......... 38

★ செயின்ட்–கோபைன் – சிப்காட் நகர்ப்புர வனம் ......... 51

★ வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டியாகச் செயல்பட வேண்டும் (மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் 11.03.2022 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கான மாநாட்டில் ஆற்றிய உரை) ......... 58

★ தமிழக மக்களிடையே அமோக வரவேற்பைப் பெற்ற குடியரசு தின அலங்கார ஊர்திகள் ......... 71


## முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 01.03.2022 அன்று, சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 'நான் முதல்வன்' என்கிற பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்கி வைத்து, இத்திட்டத்திற்காகப் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டுள்ள இலச்சினையை வெளியிட்டார்.









## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
# திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின்
## பிறந்தநாள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 01.03.2022 அன்று, தமது பிறந்தநாளையொட்டி, கோபாலபுரம் இல்லத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கும், வேப்பேரி, பெரியார் திடலில் அமைந்துள்ள தந்தை பெரியார் அவர்களின் நினைவிடத்திலும், மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆகியோரது நினைவிடத்திலும், கீழ்ப்பாக்கத்தில் உள்ள இனமான பேராசிரியர் அவரது திருவுருவப்படத்திற்கும் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.







# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துக்கள்...




## தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகத் தொடர்ந்து பணியாற்றவேண்டும்...



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களைத் தொலைப்பேசியில் தொடர்புகொண்ட, மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. **நரேந்திரமோடி** அவர்கள் தமது பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்து, "தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக நீங்கள் தொடர்ந்து பணியாற்ற வேண்டும்" என்று தமது விருப்பத்தைத் தெரிவித்தார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், "தங்களின் ஒத்துழைப்புடன் நான் தொடர்ந்து தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக உழைப்பேன்" என உறுதியளித்தார்.

## நீண்ட பொதுவாழ்வு அமையவேண்டும்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவர் திரு. **ராம்நாத் கோவிந்த்** அவர்கள் தொலைப்பேசி வாயிலாகத் தொடர்புகொண்டு பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார்.


அதுபோது, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக நீங்கள் பாடுபடவேண்டும் என்று கேட்டுக்கொண்டு உங்களுக்கு நீண்ட பொதுவாழ்வு அமைய வேண்டும் என்று வாழ்த்தினார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திருமதி **சோனியா காந்தி** அவர்கள் தொலைப்பேசி மூலம் தொடர்புகொண்டு, பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களைக் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் திரு. **ராகுல்காந்தி** அவர்கள் தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு, தாங்கள் இளமையாக இருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாகக் கூறி, வாழ்த்துக்களைத் தெரிவித்தார். தொடர்ந்து நல்ல உடல்நலத்துடன் பல்லாண்டு வாழ வாழ்த்தினார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்களை, மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. **ஆர்.என்.ரவி** அவர்கள் தொலைப்பேசி வாயிலாகத் தொடர்புகொண்டு தமிழிலேயே பேசி பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார்.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு ஆளுநர் அவர்களின் சார்பில், ஆளுநர் அலுவலகத் துணைச் செயலாளர் அவர்கள் நேரில் பூங்கொத்து வழங்கி வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களுக்கு, மாண்புமிகு மேற்கு வங்க மாநில முதலமைச்சர் செல்வி **மம்தா பானர்ஜி** அவர்கள் வாழ்த்துச் செய்தியுடன் மலர்க்கொத்து அனுப்பி, பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை, மாண்புமிகு புதுச்சேரி மாநில முதலமைச்சர் திரு. **ந.ரங்கசாமி** அவர்கள் தொலைப்பேசி மூலம் தொடர்புகொண்டு, பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை,




காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் திரு.குமரிஅனந்தன் அவர்கள்,



இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் திரு.டி.ராஜா அவர்கள்,




பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் அவர்கள்,



சூப்பர் ஸ்டார் திரு.ரஜினிகாந்த் அவர்கள்,



மக்கள் நீதி மய்யக் கட்சித் தலைவர் திரு.கமலஹாசன் அவர்கள்,



பாட்டாளி மக்கள் கட்சி சட்டமன்ற மன்றத் தலைவர் திரு.கோ.க.மணி அவர்கள்,

ஆகியோர் தொலைப்பேசி மூலம் தொடர்புகொண்டு பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.


மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை,



மாண்புமிகு தெலுங்கானா ஆளுநர் திருமதி தமிழிசை சௌந்தரராஜன் அவர்கள்,



மாண்புமிகு ஒன்றிய மீன்வளம், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு. எல்.முருகன் அவர்கள்,



மாண்புமிகு தெலுங்கானா முதலமைச்சர் திரு.சந்திரசேகர ராவ் அவர்கள்,



முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் திரு. **பொன். ராதாகிருஷ்ணன்** அவர்கள்,



தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் ஆகியோர்

தொலைப்பேசி மூலம் தொடர்புகொண்டு, பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தமது பிறந்தநாளையொட்டி சிறுமலர் பார்வை மற்றும் செவித்திறன் குறைபாடுடையோர் மேல்நிலைப் பள்ளியின் வளர்ச்சி நிதிக்காக ரூ.5 இலட்சத்திற்கான காசோலையினை அப்பள்ளியின் இல்லத்தலைவி அருட்சகோதரி நிர்மலா அவர்களிடம் வழங்கினார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தனது பிறந்தநாளையொட்டி, 01.03.2022 அன்று, சிறுமலர் பார்வை மற்றும் செவித்திறன் குறைபாடுடையோர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஆற்றிய உரை ;

சிறுமலர் பள்ளியில் நிருவாகத்தை மிகச் சிறப்போடு ஏற்றுக்கொண்டு இந்தப் பள்ளியை நிருவகித்துக் கொண்டிருக்கக்கூடிய ஆசிரியப் பெருமக்களே! இந்தப் பள்ளியில் பயின்றுகொண்டிருக்கக்கூடிய அன்பிற்கினிய மாணவச் செல்வங்களே! அன்பிற்கினிய அருமைச் சகோதரிகளே! உங்கள் அனைவருக்கும் முதலில் என்னுடைய வணக்கத்தை, நன்றியை மிகுந்த மகிழ்ச்சியோடு, நெகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய பிறந்தநாள் வருகிறபோது, ஒவ்வொரு ஆண்டும் மறக்காமல் நீங்கள் நடத்தக்கூடிய நிகழ்ச்சிக்கு வருகை தந்து, கலந்துகொள்ளக்கூடிய வாய்ப்பு எனக்குத் தொடர்ந்து கிடைத்துக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் நானும் தவறாமல் வருகை தந்து, உங்களுடைய வாழ்த்துக்களை நான் பெற்றுக்கொண்டிருக்கிறேன். யார் என்னை வாழ்த்தினாலும், உங்களுடைய வாழ்த்துக்கு நிச்சயம் அது ஈடாகாது. அதனால்தான், நானும் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் மறக்காமல் உங்களைத் தேடி, நாடி வந்துவிடுகிறேன்.


நான் ஒவ்வொரு ஆண்டும் கலந்துகொள்கிறபோது, இதே மாதிரி ஏற்புரை ஆற்றுகிறபோது, ஒன்றை மறக்காமல் நான் சொல்வது உண்டு. ஒவ்வொரு ஆண்டும் கலந்து கொள்கிறபோது, அது எந்த ஆண்டு, என்ன வயது என்று நான் சொல்லி, இந்த ஆண்டு 69, இதைச் சொன்னால் சிலர் நம்ப மாட்டார்கள். இவ்வளவு இளமையாக இருக்கிறானே, 69 எல்லாம் இருக்காது, 39 தான் இருக்கும். அதற்குக் காரணம், நான் உடல் நலத்தை, உணவுப் பழக்கத்தை, உடற்பயிற்சியை எல்லாம் முறையாகச் செய்து கொண்டு இருக்கக்கூடியவன். என்னதான் உடற்பயிற்சி, உணவுக் கட்டுப்பாடு இருந்தாலும், உங்களைச் சந்திக்கின்றபோது 5 வயது குறைந்து விடுகிறது, அதுதான் நான் நினைத்துக் கொண்டிருப்பது. அதேபோல்தான், இன்றைக்கும் உங்களை எல்லாம் சந்தித்து, அதிலும் குறிப்பாக முதலமைச்சராக உங்களுடைய அன்போடு, ஆதரவோடு அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு சந்திக்கிற நிகழ்ச்சியாக இது அமைந்திருக்கிறது.

இந்தப் பள்ளிக்கு ஒவ்வொரு ஆண்டும் என்னுடைய பிறந்தநாளையொட்டி வருகிறபோது, ஒவ்வொரு பொறுப்பிலிருந்தும் படிப்படியாக நான் வந்திருக்கிறேன். முதலில் ஆயிரம் விளக்கு தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக வந்தேன். அடுத்து, சென்னை மாநகரத்தின் மேயராக பொறுப்பேற்று வந்தேன். அதற்குப் பின்னால், உள்ளாட்சித்துறை அமைச்சராகப் பொறுப்பேற்று வந்தேன். துணை முதலமைச்சராகப் பொறுப்பை ஏற்று, இந்தப் பள்ளிக்கு நான் வந்திருக்கிறேன். இப்போது முதலமைச்சராக, உங்களுடைய முதலமைச்சராக நான் வந்திருக்கிறேன். இப்படி ஒவ்வொரு ஆண்டும் நான் வருகிறபோது, ஒவ்வொரு பதவியை அடைந்திருக்கக்கூடிய சூழ்நிலையில், பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கக்கூடிய நிலையில் வந்திருக்கிறேன் என்று எண்ணிப் பார்க்கின்றேன். ஆனால், எப்போதும் இந்தப் பொறுப்புக்களைப் பற்றி நான் கவலைப்பட்டது கிடையாது, பதவிகளைப் பற்றி நான் கவலைப்பட்டது கிடையாது. உங்களில் ஒருவனாக நான் என்றைக்கும் இருக்கிறேன். அதுதான் யாராலும் பிரிக்க முடியாதது. பதவி என்பது இன்றைக்கு வரும், போகும், அது வேறு. ஆனால், அந்தப் பதவியைப் பயன்படுத்தி இங்கே வரவேற்புரை ஆற்றிய, என்னை வாழ்த்திப் பேசிய சகோதரிகள், தாய்மார்கள் எல்லாம், ஏன் பிள்ளைகள் பாடுகிறபோது அந்தப் பாட்டிலே இருக்கக்கூடிய கருத்துக்கள் எல்லாம், இந்த 9 மாத காலத்தில் என்னென்ன சாதனைகளைச் செய்திருக்கிறோம், என்னென்ன பணிகளை மக்களுக்கு ஆற்றியிருக்கிறோம் என்பதைப் பற்றியெல்லாம் மிகத் தெளிவாகப் பாடல்கள் மூலமாக, தங்களுடைய பேச்சுக்கள் மூலமாக இங்கே எடுத்துச் சொன்னார்கள், அதுதான் முக்கியம்.

இந்தப் பதவியை நான் என்றைக்கும் பெரும் பதவியாக நினைத்ததில்லை, அதைப் பொறுப்பு என்று நான் நினைத்து, அந்தப் பொறுப்பினை உணர்ந்து என்னுடைய கடமையை ஆற்றிக்கொண்டிருக்கிறேன். ஆகவே, இன்றைக்கு உங்களை எல்லாம் சந்திக்கிற, எப்போதும் பிறந்தநாளான மார்ச் 1ஆம் தேதி வருவது உண்டு. ஆனால், கடந்த ஆண்டு கொரோனா வந்த காரணத்தால், உங்களைச் சந்திக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டது உங்களுக்குத் தெரியும். ஆனால், அதற்குப் பிறகு வந்து சந்தித்துவிட்டுச் சென்றேன்.

இப்போது கூட, அதனால்தான் முன்கூட்டியே உங்களை வந்து சந்தித்து விடுவோம் என்று முடிவு செய்து, நம்முடைய தோழர்களிடத்தில் சொல்லி, உங்களுடைய ஒப்புதலைப் பெற்று, எல்லோரும் எனக்குப் பிறந்தநாள் வாழ்த்துச் சொல்வதற்கு முன்னால், முன்கூட்டியே நீங்கள்தான் எனக்குப் பிறந்தநாள் வாழ்த்து சொல்கிறீர்கள். நீங்கள் சொன்னதற்குப் பிறகுதான், எங்களுடைய கட்சிக்காரர்கள் சொல்லப் போகிறார்கள், அதிகாரிகள் சொல்லப் போகிறார்கள், மக்கள் சொல்லப் போகிறார்கள். நீங்கள்தான் முதலில் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்து இருக்கிறீர்கள், அதுதான் எனக்கு மகிழ்ச்சி.

முதலமைச்சராக இருந்து இந்த விழா நடத்துவதன் காரணத்தால் நான் சொல்லவில்லை, இன்றைக்கு முதல் நிகழ்ச்சியாக, முதலில் வாழ்த்தக்கூடிய நிகழ்ச்சியாக இது அமைந்திருப்பதன் காரணத்தால் இந்தப் பிறந்தநாளை என்றைக்கும் நான் மறக்கவே முடியாது. அதனால், உங்கள் வாழ்த்துக்களோடு என்னுடைய பயணம் தொடரும், என்னுடைய பணி நிறைவேறும் என்று உங்கள் மூலமாக மக்களுக்கும், நாட்டு மக்களுக்கும் எடுத்துச் சொல்லி, நீங்கள் தந்த இந்தச் சிறப்பான வாழ்த்துக்கும், வரவேற்புக்கும் மீண்டும் ஒருமுறை உங்கள் அத்தனை பேருக்கும் நன்றி சொல்லி, என்றைக்கும் உங்களில் ஒருவனாக நான் இருந்து என் கடமையை ஆற்ற உங்கள் வாழ்த்து தொடர வேண்டும், தொடர வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன்.



## பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டம்

# நான் முதல்வன்

### உலகை வெல்லும் இளைய தமிழகம்

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 01.03.2022 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழகத்தின் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் இளைஞர்கள், படிப்பில் மட்டுமல்லாது, வாழ்க்கையிலும் வெற்றியாளராக்கும் வகையில் திறன் மேம்பாட்டு மற்றும் வழிகாட்டுதல் திட்டமாகிய 'நான் முதல்வன்' என்கிற புதிய திட்டத்தைத் தொடங்கிவைத்து, இத்திட்டத்திற்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டுள்ள இலச்சினையையும் வெளியிட்டார். மேலும், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான உயர்கல்வி, வேலைவாய்ப்பு வழிகாட்டிப் பாடநூலை வெளியிட்டு, இதற்கென உருவாக்கப்பட்டுள்ள naanmudhalvan.tnschools.gov.in என்ற இணையதளத்தையும் தொடங்கிவைத்தார்.

'நான் முதல்வன்' திட்டத்தின் முக்கிய நோக்கம், ஆண்டுக்குப் பத்து இலட்சம் இளைஞர்களைப் படிப்பில், அறிவில், சிந்தனையில், ஆற்றலில், திறமையில் மேம்படுத்தி நாட்டுக்கு வழங்குதல் ஆகும்.

இந்தத் திட்டத்தின் சிறப்பம்சமானது, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக மாணவ, மாணவியர்களின் தனித் திறமைகளை அடையாளம் கண்டு அதனை மேலும் ஊக்குவிப்பது ஆகும். அடுத்தடுத்து அவர்கள் என்ன படிக்கலாம், எங்குப் படிக்கலாம், எப்படிப் படிக்கலாம் என்றும் வழிகாட்டப்படும். தமிழில் தனித் திறன் பெறச் சிறப்புப் பயிற்சியுடன் ஆங்கிலத்தில் எழுதவும், சரளமாகப் பேசுவதற்கும், நேர்முகத் தேர்வுக்குத் தயாராவது குறித்தும் பயிற்சிகள் வழங்கப்படும்.

தற்போதைய தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்பப் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு Coding, Robotics போன்ற பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும். ஒவ்வொரு துறையிலும் தலைசிறந்த சாதனையாளர்களைக் கொண்டு கோடை சிறப்பு வகுப்புகள் நடத்தப்படும்.

இவற்றைத் தவிர, மனநல மருத்துவர்கள், உடல்நல மருத்துவர்களைக் கொண்டு திடமான உணவு வகைகள் உட்கொள்வது குறித்து ஆலோசனைகள் வழங்குவதுடன், உடற்பயிற்சி, நடை, உடை, நாகரீகம், மக்களோடு பழகுதல் ஆகியவை குறித்தும் பயிற்சிகள் வழங்கப்படும். தமிழ்ப் பண்பாடு, மரபு குறித்த விழிப்புணர்வும் மாணவ, மாணவியர்களிடம் ஏற்படுத்தப்படும்.

இப்பயிற்சிகள் அனைத்தும், தலைசிறந்த பயிற்சியாளர்களைக் கொண்டு நேரடிப் பயிற்சி, இணைய வழிப் பயிற்சி, அவரவர் கல்லூரியில் பயிற்சி, மாவட்ட ரீதியாகப் பயிற்சி எனத் தேவைக்கேற்பப் பயிற்சிகள் அளிக்கப்படும். ஒவ்வொரு பள்ளியிலும் வழிகாட்டி ஆலோசனை மையம் உருவாக்கப்படும். இதற்கெனத் தனியே கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு 9 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்குத் தொடர் வகுப்புகள் நடத்தப்படும். முன்னாள் மாணவர்களைக் கொண்டு அரசுப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்குத் தொடர் நெறிப்படுத்தும் (mentoring) முறையும் அறிமுகப்படுத்தப்படும். கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு வெளிநாடுகளில் வேலைவாய்ப்பை உறுதி செய்ய அவரவர் விருப்பத்திற்கேற்ப அயல்நாட்டு மொழிகள் (Foreign Language) கற்பிக்கப்படுவதற்கு இத்திட்டத்தில் வழிவகை செய்யப்படும்.

அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் Industry 4.0 தரத்திற்கு உயர்த்தப்படும். மாணவ, மாணவியர்களின் தகுதி மற்றும் ஆர்வத்திற்கு ஏற்ப, நாட்டின் தலைசிறந்த நிறுவனங்கள் / புகழ்பெற்ற பல்கலைக்கழகங்கள் / திறன் மேம்பாட்டு நிறுவனங்களில் சேர்க்கையையும் இந்தத் தொடர் பயிற்சிகள் மூலம் உறுதி செய்யப்படும்.

தமிழ்நாடு அரசுத்துறை மற்றும் நிறுவனங்களில் வேலைவாய்ப்புகள், ஒன்றிய அரசின் வேலைவாய்ப்புகள், பிற மாநிலங்களின் வேலைவாய்ப்புகள் ஆகிய அனைத்தும் இத்திட்டத்தின்கீழ் அறிவிப்புகளாக வெளியிடப்பட்டு, பயிற்சிகள் ஒருங்கிணைக்கப்படும். பயிற்சி பெற்ற பயனாளிகள் வேலைவாய்ப்பு பெறுவதையும், அதைத் தொடர்வதையும், தொடர்ந்து கண்காணிக்கப்படும். இதைத்தவிர, ஒருங்கிணைந்த வேலைவாய்ப்பு முகாம்களும் தேவைகளின் அடிப்படையில் நடத்தப்படும். இத்திட்டத்தின் அனைத்து விவரங்களும் அடங்கிய வலைத்தளப் பலகை (Portal) உருவாக்கப்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நேரடிக் கண்காணிப்பில், சிறப்புத்





உயர்கல்வி, வேலைவாய்ப்பு வழிகாட்டிப் பாடநூல் கையேடு வெளியீடு...

திட்டச் செயலாக்கத்துறை இப்புதிய திட்டமான 'நான் முதல்வன்' திட்டத்தை ஒருங்கிணைக்கும். மேலும், மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு இத்திட்டத்தைச் செயல்படுத்தும்.

இந்நிகழ்ச்சியின்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கியதுடன், கலந்துகொண்ட மாணவ, மாணவியர்களுக்கு உயர்கல்வி / வேலைவாய்ப்பு குறித்த கையேடுகளை வழங்கியும் சிறப்பித்தார்.

**இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை :**

நான் முதல்வன் என்கின்ற புதிய திட்டத்தினுடைய தொடக்க விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., அவர்களே! சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய தமிழக அரசினுடைய நீர்வளத்துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் துரைமுருகன் உள்ளிட்ட தமிழக அமைச்சர் பெருமக்களே! சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களே! அரசுத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய பல்வேறு நிலையில் இருக்கக்கூடிய அதிகாரி பெருமக்களே! சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டிருக்கக்கூடிய பிரிட்டிஷ் தூதரகத்தினுடைய துணை உயர் ஆணையர் திரு.ஆலிவர் பால்ஹட்செட் அவர்களே! காவல்துறையின் தலைமை இயக்குநர் முனைவர் சைலேந்திரபாபு அவர்களே! இணைய வழியாகக் கலந்துகொண்டிருக்கக்கூடிய சர்வதேசச் சதுரங்க கிராண்ட் மாஸ்டர் திரு.விஸ்வநாதன் ஆனந்த் அவர்களே! இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தினுடைய இயக்குநர் திரு.காமகோடி வீழிநாதன் அவர்களே! இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தினுடைய அறிவியலாளர் திரு.மயில்சாமி அண்ணாதுரை அவர்களே! டையாம்லர் கமர்ஷியல் வெகிகிள்ஸ் நிறுவனத்தினுடைய மேலாண்மை இயக்குநர் மற்றும் முதன்மைச் செயலர் திரு.சாய்ராம் ஆர்யா அவர்களே!

இந்திய கிரிக்கெட் வீரர் திரு.நடராஜன் தங்கராசு அவர்களே! டாக்டர் சந்தியா சிந்தலா அவர்களே! செயல் அலுவலர் திரு.சுரேஷ் சம்பந்தம் அவர்களே! கல்வி மற்றும் வேலைவழிகாட்டல் நிபுணர் திரு.நெடுஞ்செழியன் அவர்களே! வருகை தந்திருக்கக்கூடிய கல்வியாளர்களே! என் பேரன்பிற்கும் பாசத்திற்கும் உரிய மாணவச் செல்வங்களே! பாசமிகு பத்திரிகையாளர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்! இந்த நாள் என்னுடைய வாழ்விலே ஒரு பொன்னாளாக அமைந்திருக்கிறது!

இன்றைக்கு என்னுடைய பிறந்த நாள் காண்கிறேன் என்பதற்காக மட்டும் நான் இதைச் சொல்லவில்லை. எனது கனவுத் திட்டமான 'நான் முதல்வன்' திட்டத்தின் தொடக்க நாள் இது. அதனால்தான் இது, என்னுடைய வாழ்விலே கிடைத்திருக்கக்கூடிய பொன்னாள் என்று நான் குறிப்பிட்டுச் சொன்னேன்.

தமிழ்நாட்டு மக்களால் முதலமைச்சராக ஆக்கப்பட்டிருக்கக்கூடிய நான் அனைத்து மாணவச் செல்வங்களையும் முதல்வன் ஆக்க, உருவாக்கிய திட்டம்தான் இந்தத் திட்டம். தமிழ்நாட்டு மாணவச் செல்வங்கள், இளைஞர்கள் அனைவரும் அனைத்து விதமான தகுதியையும் பெற்று முன்னேறி, அனைவரும் அனைத்திலும் முதலாவதாக வந்தார்கள் என்ற நிலையை உருவாக்கும் திட்டம்தான் இந்தத் திட்டம், இந்தத் திட்டத்தினுடைய நோக்கம். அனைத்து இளைஞர்களையும் கல்வியில், ஆராய்ச்சியில், சிந்தனையில், செயலில், திறமையில், சிறந்தவர்களாக மாற்றிட வேண்டும் என்கிற அந்த உணர்வோடு இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் எல்லோரும் பள்ளிக்கல்வியை முடித்துவிடுகிறார்கள். கல்லூரிப் பட்டங்களையும் பெற்றுவிடுகிறார்கள். ஆனால் அவர்கள் எல்லோருக்குமே வேலை கிடைத்திருக்கிறதா என்று கேட்டால் அது ஒரு கேள்விக் குறியாகத்தான் இருக்கிறது. வேலை இல்லை என்று சொல்லும்போது, சிலர் ஒரு காரணத்தைச் சொல்கிறார்கள். "வேலைகள் நிறைய இருக்கிறது; ஆனால் அதற்குத் தகுதியான இளைஞர்கள் இல்லை" என்று சொல்லக்கூடிய நிலை இன்றைக்கு நாட்டில் இருக்கிறது. இதைக் கேட்கும்போது மிக வருத்தமாகத்தான் இருக்கிறது. பட்டம் வாங்கியிருக்கிறார்கள், ஆனால், அந்தப் படிப்பு குறித்த தெளிந்த அறிவு எல்லோருக்கும் இல்லை என்று சொல்லப்படுகிறது.





இந்தியாவில் இருக்கும் உயர்கல்வி நிறுவனங்களில் **33** விழுக்காடு இடங்கள் தமிழ்நாட்டில் இருக்கிறது என்று நாம் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்கிறோம். இன்னொரு பக்கம், திறமைக் குறைவு பற்றியும் கவலைப்பட வேண்டிய சூழ்நிலையில் தத்தளித்துக்கொண்டு இருக்கிறோம். பள்ளிக்கூடங்கள் இல்லாத கிராமமே இல்லை என்று நாம் பெருமைப்பட்டுக் கொள்கிறோம். ஆனால் அதே நேரத்தில், அப்படிக் கற்பவர்களுக்குத் தனித்திறமைகள் இல்லை என்பது பற்றியும் கவலைப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

“இந்தியாவைப் பார்த்து உலகநாடுகள் பயப்படுகிறார்கள் – இந்தியாவில் இருக்கும் ஆயுதங்களைப் பார்த்துப் பயப்படவில்லை”. இந்தியாவில் இருக்கும் இளைய சக்தியின் எண்ணிக்கையைப் பார்த்துப் பயப்படக்கூடிய பெருமையை நாம் பெற்றிருக்கிறோம். ஆனால், இந்த இளையசக்தி முழுமையான திறமை கொண்டதாக இருக்கிறதா என்று கேட்டால், இல்லை என்பதையும் சொல்லித்தான் ஆக வேண்டும்.

இப்படிப்பட்ட குறைகளை மட்டும் சொல்லிக்கொண்டு இருப்பதால் பயன் இல்லை, அவர்களை நிறையுடை மனிதர்களாக மாற்றுவதற்கான முயற்சியில் ஈடுபடுகிறோம், அதற்காகத்தான் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதற்குத்தான் ‘நான் முதல்வன்’ என்ற அந்தப் பெயரையும் நாம் சூட்டியிருக்கிறோம்.

ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா  
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா  
களிபடைத்த மொழியினாய் வா வா வா  
கடுமை கொண்ட தோளினாய் வா வா வா  
தெளிமை பெற்ற மதியினாய் வா வா வா –

என்று பாடினார் மகாகவி பாரதி அவர்கள்.

இந்தப் பாடலின் இறுதி வரியாக, அதேநேரம் உறுதிமிகு வரியாக ஒரு வரியை எழுதியிருப்பார் பாரதியார் அவர்கள்.

“நாடெல்லாம் ஒரு பெருஞ்செயல் செய்வாய் வா வா வா” என்று எழுதினார்.

அத்தகைய ஒரு பெருஞ்செயல்தான் ‘நான் முதல்வன்’ என்கிற அந்தத் திட்டமாக அமைந்திருக்கிறது.

மாணவச் செல்வங்களே! பள்ளிப் பிள்ளைகளே! கல்லூரி மாணவ, மாணவியரே! நீங்கள் அனைவரும் உரக்கச் சொல்லிப் பாருங்கள்! ‘நான் முதல்வன்’ நான் முதல்வன், நான் முதல்வன் – என்று சொல்லிப் பாருங்கள்! உங்களுக்குள் ஒரு சக்தி பிறக்கும். உங்களுக்குள் ஒரு நம்பிக்கை பிறக்கும். உங்களுக்கு ஒரு தைரியம் பிறக்கும்.

நான் முதல்வன் என்று சொல்லுவது எளிது. ஆனால், எல்லாவற்றுக்கும் முதல்வன் ஆவது என்பது எளிமையான செயல் அல்ல. அதற்கு முதலில் உங்களை நீங்கள் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும். உங்களது தனித்த திறமைகள் எது என்பதில் உங்களுக்கு ஒரு தெளிவான நிலைப்பாடு இருக்க வேண்டும். பலர், தங்களுடைய பெற்றோர்கள் சொன்னார்கள் என்று மருத்துவம் படிப்பது, பொறியியல் படிப்பது என்று சேர்கிறார்கள். எந்தப் படிப்பில் உங்களுக்கு ஆர்வம் இருக்கிறதோ, உங்களுக்கு விருப்பம் இருக்கிறதோ, அந்தப் படிப்பில் சேருங்கள். அந்தப் படிப்பு, பட்டம் வாங்குவதற்காக மட்டுமில்லாமல், அந்தப் படிப்பு குறித்த முழுமையான அறிவை நீங்கள் தெளிவு பெற வேண்டும்.

மக்கள்தொகை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. எனவே போட்டிகளும் அதிகம் ஆகிக்கொண்டிருக்கிறது. தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் ஏராளமான கல்வி நிலையங்கள் இருக்கின்றன. எனவே, கல்லூரிப் பட்டம் என்பதை எளிதாக, எல்லோரும் பெற்றுவிடலாம். ஆனால், அந்தப் பட்டத்தைத் தாண்டிய தனித்திறமை இருந்தால்தான் இந்தப் போட்டி நிறைந்த உலகத்தில் உங்களால் வெல்ல முடியும்.

உலகப் போட்டியில் உங்களையும் ஒரு மனிதராக நீங்கள் இணைத்துக்கொள்ள வேண்டும். உங்களை நீங்களே திறமைசாலிகளாக ஆக்கிக்கொள்ள வேண்டும்.

❖ இந்த மூன்று பட்டங்கள் பெற்றவர்களுக்குக் கூட, நான்கு பேருக்கு முன்பாகப் பேசுவதற்குத் தயக்கம் இருக்கிறது.

❖ எடுத்துச் சொல்வதில் தெளிவு இல்லை.

❖ தைரியம் இல்லை.





பயிற்சிபெற்ற ஆசிரியர்களுக்கு சான்றிதழ்கள்...

- ❖ புதிய முயற்சிகள் இல்லை.
- ❖ ஏதோ ஒரு வேலை கிடைத்தால் போதும் என்ற ஒரு சலிப்பு இருக்கிறது.
- ❖ நமக்கெல்லாம் எங்கே பெரிய வேலை கிடைக்கப் போகிறது என்ற விரக்தி இருக்கிறது.

இவை எல்லாம் ஒரு மனிதரை வீழ்த்தும் காரணிகள். ஒரு மனிதனுக்குப் புறத் தடைகளைவிட உள்ளார்ந்த அந்தத் தடைகள்தான் அதிகம் இருக்கிறது. இந்தப் புறத் தடைகளை ஒவ்வொரு மனிதருக்குள்ளும் உடைக்க வருகிற திட்டம்தான் நான் முதல்வன் திட்டம் ஆகும் என்பதைப் பெருமையோடு சொல்கிறேன்.

நான் திட்டத்தை உருவாக்கி இருக்கிறேன். இது மாணவர்கள் அனைவரையும் தகுதிப்படுத்தும் திட்டம். இளைஞர்கள் அனைவரையும் உயர்த்தும் திட்டம். தமிழ்நாட்டு மாணவர் ஒருவர், உலகின் எந்த நாட்டு மாணவரையும் விட, தரமும் தகுதியும் குறைந்தவர் கிடையாது என்பதைக் காட்டும் திட்டம்தான் இந்தத் திட்டம்.

இந்தத் திட்டத்தின் மூலமாக நிறுவனங்களை, தொழில் நிறுவனங்களை, அரசு நிறுவனங்களை, கல்வி நிறுவனங்களை ஒன்றிணைப்போம். அதற்கான முயற்சியில் நாம் முழுமையாக ஈடுபட்டிருக்கிறோம். அரசு நிறுவனங்களுக்கும், தொழில் நிறுவனங்களுக்கும், தகுதியானவர்களாக இளைஞர்களை உருவாக்குவதை எனது முக்கியக் குறிக்கோளாக நான் ஏற்றுக் கொள்கிறேன்.

கல்வியில் சிறந்தவர்களாக, சிந்திக்கும் திறம் படைத்தவர்களாக, தனித்திறமை கொண்டவர்களாக, தொழில்திறன் கொண்டவர்களாக, நிறுவனங்களை நடத்துபவர்களாக, அவர்களை உருவாக்க எனக்கு நானே உறுதி எடுத்துக்கொள்கிறேன்.

கலைத் திறன் படைத்தவர்கள் கலைஞர்களாகட்டும். தொழில் திறன் படைத்தவர்கள் தொழில் முனைவோர் ஆகட்டும். விளையாட்டில் ஆர்வம் கொண்டோர் விளையாட்டு வீரர்கள் ஆகட்டும். நிறுவனங்கள் நடத்தத் தெரிந்தோர் நிறுவனங்களைத் தொடங்கட்டும். வேலை தேடுபவர்களாக இல்லாமல் – வேலை கொடுப்பவர்களாக எல்லோரும் மாற வேண்டும். பிற நிறுவனங்களின் கதவுகளைத் தட்டுபவர்களாக இல்லாமல் – இவர் நிறுவனத்தைப் பிறர் பயன்படுத்திக் கொள்ளட்டும். அந்த வரிசையில், உங்கள் பெயரும் இணைய வேண்டும் என்றால், அப்போது, உங்களுக்காக உருவாக்கப்பட்ட திட்டம்தான் இந்த 'நான் முதல்வன்' திட்டம் என்பதை நான் மீண்டும், மீண்டும் நினைவுபடுத்துகிறேன்.

படிப்பு என்பது பட்டம் சார்ந்தது மட்டுமல்ல, திறமை சார்ந்ததாக மாறவேண்டும். வேலை என்பது சம்பளம் சார்ந்ததாக மட்டுமல்ல, திறமை சார்ந்ததாக மாறவேண்டும். நீங்கள் அடையும் உயரம் சலுகை சார்ந்ததாக மட்டுமல்ல, திறமை சார்ந்ததாக மாறவேண்டும்.

அத்தகைய திறமையை உங்களுக்கு உருவாக்க, உங்களுக்காக உருவாக்க ஒருவன் இருக்கிறான், அதுதான் இந்த நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் என்பதை இன்று முதல் நீங்கள் நினைவில் வையுங்கள். உங்களது மூத்த சகோதரனாக இருந்து, உங்கள் வளர்ச்சியைத் தூரத்தில் இருந்து நானே நேரடியாகப் பார்க்கப்போகிறேன்.

அதற்காக எனது நேரடி மேற்பார்வையில் ஒரு திட்டத்தை உருவாக்கி இருக்கிறேன்.

- ❖ உங்கள் படிப்பைக் கவனிப்போம்.
- ❖ உங்கள் தனித்திறமையை வளர்த்தெடுப்போம்.
- ❖ உங்கள் மனதில் அறிவியல் திறனை உருவாக்குவோம்.
- ❖ உங்களுக்குத் தன்னம்பிக்கையையும் தைரியத்தையும் ஊட்டுவோம்.
- ❖ உங்களுக்கு விருப்பமான பயிற்சிகளை நாங்களே தருவோம்.
- ❖ தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவோம்.
- ❖ புதியது புதியதாக உருவான படிப்புகளை அறிமுகம் செய்வோம்.
- ❖ அந்தப் படிப்புகளுக்குத் தகுதியான இளைஞர்களை உருவாக்குவோம்.






- ❖ நவீனம் அனைத்தையும் உங்களது உள்ளங்கையில் கொண்டு வந்து சேர்ப்போம்.
- ❖ மொழித் திறனை மேம்படுத்துவோம்.
- ❖ தாய் மொழியாம் தமிழ் மொழியா? அதை அனைவருக்கும் எழுத, படிக்க, பேசத் தெரிந்திருக்க வேண்டும்.
- ❖ உலக மொழியாம் ஆங்கிலமா? அதில் அனைவருக்கும் எழுத, படிக்க, பேசத் தெரிந்திருக்க வேண்டும்.
- ❖ உடற்பயிற்சியும், உள்ளப்பயிற்சியும் வழங்குவோம்.
- ❖ மனப்பயிற்சியும், குணப்பயிற்சியும் நிச்சயம் வழங்குவோம்.
- ❖ ஒரு வரியில் சொல்வதென்றால் உங்களைப் பெற்ற தாய் போல், உங்களுடைய நலனில் அக்கறை கொண்ட திட்டம்தான் 'நான் முதல்வன்' என்கிற அந்தத் திட்டம்.

அனைவரையும் உள்ளடக்கிய, அனைத்துத் துறை வளர்ச்சி என்று நான் சொல்லி வருகிறேன். இதுதான் திராவிட மாடல் என்று நான் சொல்லி வருவது உங்களுக்கு இப்போது புரியும். தெரியும். 2030ஆம் ஆண்டுக்குள் தமிழகத்தில் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை வளர்க்க வேண்டும் என்று சொல்லி வருகிறேன்.

இப்படிப் பொருளாதாரம் வளர வேண்டும் என்றால், 2026ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டின் 2 மில்லியன் இளைஞர்களின் திறன் மேம்பாடு அடைய வேண்டும். இதற்காக மாணவர்களுக்குப் பயிற்சி தரப் போகிறோம். அதற்கு முன், பயிற்சி தரக்கூடிய ஆசிரியர்களுக்கு முதலில் பயிற்சி தரப் போகிறோம்.

என்ன படிக்கலாம், எங்குப் படிக்கலாம் என்கிற வழிகாட்டி மையங்களாகப் பள்ளிகள் இனி மாறும். என்ன வேலைக்குத் தகுதிப்படுத்தலாம் என்பதன் வழிகாட்டி மையங்களாகக் கல்லூரிகள் இனி மாறும். வேலை தேடுபவர்களுக்குத் தகுதிப்படுத்தும் மையங்களை அரசே நிறுவும்.

மொத்தத்தில் தமிழ்ச் சமுதாயத்தின் அனைத்து மாணவர்களையும், இளைஞர்களையும் தமிழ்நாடு அரசு தகுதிசால் மனிதர்களாக மாற்ற நினைக்கிறது என்பதை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக அறிவிப்பதில் நான் மிகுந்த பெருமைப்படுகிறேன்.

சில திட்டங்கள் சில வாரங்களுக்குப் பயன்படும். சில திட்டங்கள் சில மாதங்களுக்குப் பயன்படும். சில திட்டங்கள் சில ஆண்டுகளுக்குப் பயன்படும். ஆனால் இந்தத் திட்டம் என்பது தலைமுறை தலைமுறைக்குப் பயன்படும் திட்டம் ஆகும்.

கால் நூற்றாண்டு, அரை நூற்றாண்டு கழித்தும் 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1ஆம் தேதி, மு.க.ஸ்டாலின் என்ற ஒரு முதலமைச்சர் உருவாக்கிய 'நான் முதல்வன்' என்ற திட்டத்தின் மூலமாக நான் முன்னேறினேன் என்று ஒருவர் சொன்னால், அதைவிட வேறு பெரிய பெருமை எனக்கு நிச்சயமாக இருக்க முடியாது.

தமிழ்நாட்டு மாணவச் செல்வங்களே! உங்கள் முதலமைச்சரான இந்த மு.க.ஸ்டாலினின் கனவுத் திட்டமான நான் முதல்வன் திட்டத்தின் தொடக்கவிழாவில் கலந்துகொண்டு உங்கள் அனைவரையும் நான் மனதார வாழ்த்துகிறேன், போற்றுகிறேன், பாராட்டுகிறேன். வருங்காலச் சமுதாயம் உங்களுக்கு ஒளிமயமானதாக ஆகப்போகிறது. உங்களது வாழ்வில் மலர்ச்சி ஏற்படப் போகிறது.

இன்று முதல் நீங்கள் புதிய மனிதர்களாக மாறப் போகிறீர்கள். உங்கள் வாழ்க்கைக்கு ஒளியேற்றும் வாய்ப்பை நான் பெற்றமைக்காகப் பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சி அடைகிறேன். பள்ளிகளில் ஏற்படுத்த இருக்கும் பயிற்சிகள், கல்லூரிகளில் தொடங்க இருக்கும் பயிற்சிகள் பற்றி விரிவாக அரசின் சார்பில் விரைவில் அதற்குரிய அறிவிப்புகள் எல்லாம் வெளியிடப்படும். அந்த அறிவிப்பு அறிவின் உதயமாக அமையும்.

உங்களில் ஒருவனான நான், எனது பிறந்தநாளில் இந்தத் திட்டத்தைத் தொடங்கிவைத்ததை எனது வாழ்நாள் பெருமையாகக் கருதுகிறேன். உங்கள் அனைவரையும் சந்தித்ததற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். அது மட்டுமல்ல, பிறந்தநாள் வாழ்த்தை இங்கே நீங்கள் சொல்லிக் கொண்டிருப்பது என் செவிகளில் விழாமல் இல்லை, அந்த வாழ்த்தையும் ஏற்றுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.



மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை
04.03.2022 அன்று,
பெருநகரச் சென்னை மாநகராட்சி
மேயராகப் பொறுப்பேற்றுக்கொண்ட
திருமதி ஆர். பிரியா
மற்றும்
துணை மேயராகப்
பொறுப்பேற்றுக்கொண்ட
திரு.மு.மகேஷ்குமார் ஆகியோர்
சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

# உக்ரைனில் சிக்கித்தவித்த தமிழர்களை மீட்கும் பணியில் மாண்புமிகு முதலமைச்சர்...





ரஷ்ய இராணுவம் 24.02.2022 அன்று, அதிகாலை உக்ரைன் நாட்டுக்குள் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்வதாக ஊடகச் செய்திகளின் வாயிலாக அறியப்பட்டது. இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக, தமிழ்நாட்டைச் சேர்ந்த சுமார் 5,000 மாணவர்கள், பெரும்பாலும் தொழில்முறைக் கல்வி படிப்போர் மற்றும் தமிழ்நாட்டிலிருந்து புலம் பெயர்ந்தவர்கள் உக்ரைனில் சிக்கித் தவித்தனர்.

## தொடர்பு அலுவலர்கள் நியமனம்

தமிழ்நாட்டில் இருக்கும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் வாயிலாகப் பல மீட்பு அழைப்புகள் வந்தவண்ணம் உள்ளன. இதனை ஒருங்கிணைத்து, அவர்களை மீட்கும் பணியினை மேற்கொள்ளும் பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், திருமதி ஜெசிந்தா லாசரஸ் இஆப., ஆணையர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு ஆணையரகம் அவர்களை மாநில தொடர்பு அலுவலராக நியமனம் செய்து உத்தரவிட்டார். மேலும், ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களையும், புதுதில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர்/தலைமை உள்ளுறை ஆணையர் மற்றும் உள்ளுறை ஆணையர் அவர்களைத் தொடர்பு அலுவலராகவும் நியமனம் செய்தார்.

உக்ரைனில் சிக்கித் தவிக்கும் தமிழ்நாட்டைச் சார்ந்த மாணவர்கள் மற்றும் புலம் பெயர்ந்தவர்களின் குடும்பத்தினர் உதவிக்கு அருகில் உள்ள தொடர்பு அலுவலர்களைத் தொடர்புகொண்டு அவர்களின் விபரத்தைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

## தொடர்பு அலுவலர்களின் தொடர்பு எண்கள் அறிவிப்பு

மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையம் கட்டணமில்லாத் தொலைபேசி எண். 1070 அல்லது திருமதி ஜெசிந்தா லாசரஸ் இஆப., ஆணையர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு ஆணையரகத் தொலைபேசி எண்கள் : **9445869848 / 9600023645 / 9940256444 / 044–28515288** அல்லது உக்ரைன் அவசர உதவி மையம் தமிழ்நாடு பொதிகை இல்லம், புதுதில்லி. வாட்ஸ்அப் எண் **9289516716**, மின்னஞ்சல் – ukrainetamils@gmail.com வாயிலாகத் தொடர்புகொள்ளக் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

## மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்களுக்குக் கடிதம்

உக்ரைன் நாட்டில் ரஷ்யா இராணுவம் புகுந்து தாக்குதல் நடத்தியுள்ள நிலையில், அங்கு சிக்கித் தவிக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் அங்குக் குடியேறியவர்களைச் சிறப்பு விமானம் மூலம் பாதுகாப்பாக மீட்க ஒன்றிய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கக் கோரி மாண்புமிகு ஒன்றிய வெளியுறவு அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 24.02.2022 அன்று கடிதம் எழுதியுள்ளார்.

கடிதத்தில், 24.02.2022 அன்று அதிகாலையில் ரஷ்ய இராணுவம் உக்ரைனுக்குள் புகுந்துள்ளது என்ற ஊடக செய்திகள் குறித்து மாண்புமிகு வெளியுறவுத்துறை அமைச்சரின் உடனடி கவனத்தை ஈர்க்க விழைவதாகவும், தமிழ்நாட்டைச் சேர்ந்த, தொழில்முறை படிப்புகள் பயிலும் சுமார் 5,000 மாணவர்கள் மற்றும் தமிழ்நாட்டில் இருந்து குடியேறியவர்கள் உக்ரைனில் சிக்கித் தவித்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உக்ரைனில் படிக்கும் மாணவர்களின் குடும்பத்தினரிடமிருந்து நூற்றுக்கணக்கான துயர அழைப்புகளைத் தாம் பெற்றுவருவதால், அவர்களை அவசரமாக உக்ரைனிலிருந்து இந்தியாவிற்கு அழைத்துவர ஒன்றிய அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளார். இருப்பினும், உக்ரைன் விமான நிலையங்கள் மூடப்பட்டிருக்கும் என்று அறிவிப்பு வந்துள்ள நிலையில், உக்ரைனில் சிக்கித் தவிக்கும் இந்தியர்களைப் பாதுகாப்பாக இந்தியாவுக்கு அழைத்து வருவதற்கு ஒன்றிய அரசின் உதவி தேவைப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, தமிழ்நாடு அரசு 24 மணி நேரமும் செயல்படும் உதவி மையங்களைத் திறந்துள்ளது என்றும், ஒன்றிய அரசு உக்ரைனில் சிக்கித் தவிக்கும் தமிழர்களின் குடும்பங்களை மாவட்ட நிருவாகத்துடன் ஒருங்கிணைக்கவும், தமிழர்களை உக்ரைனிலிருந்து பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கு ஏதுவாகவும், மாநில ஒருங்கிணைப்பு அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். இந்திய அரசு அளவில் ஒருங்கிணைப்புப் பணிகளுக்கென்றே





ஓர் இணைப்பு அலுவலரைத் தமிழ்நாட்டுக்கென்று அறிவிக்கலாம் என்று தாம் பரிந்துரைப்பதாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைனில் சிக்கியுள்ள தமிழர்களை உடனடியாக இந்தியாவிற்கு அழைத்துவர அந்நாட்டு அரசின் உயர்மட்ட அளவில் இப்பிரச்சினையை எடுத்துச் செல்லுமாறு ஒன்றிய அரசைத் தாம் கேட்டுக்கொள்வதாகவும், உக்ரைனின் பல்வேறு பகுதிகளிலிருந்து ‘‘வந்தேபாரத்’’ மிஷன் போன்ற சிறப்பு விமானங்களை இயக்க ஒன்றிய அரசு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும், இது தொடர்பாக அவசர நடவடிக்கை மேற்கொள்ளத் தாம் கோருவதாகவும் தமது கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

### தாய் நாடு திரும்புவதற்கான பயணச்செலவை அரசே ஏற்றுக்கொள்ளும்

உக்ரைனில் சிக்கித் தவிக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் தாய்நாடு திரும்புவதற்கான பயணச் செலவைத் தமிழ்நாடு அரசே ஏற்றுக் கொள்ளும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

ரஷ்ய இராணுவம் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் சூழ்நிலையில், உக்ரைனில் சிக்கித் தவிக்கின்ற தமிழர்களை மீட்டுத் தமிழகத்திற்கு அழைத்து வரும் பொருட்டு, மாவட்ட, மாநில அளவில் மற்றும் புதுதில்லியில் நியமிக்கப்பட்ட தொடர்பு அலுவலர்களை 25.02.2022 அன்று, காலை 10.00 மணி வரை 916 மாணவர்கள் மற்றும் புலம் பெயர்ந்தோர் தொடர்பு கொண்டுள்ளனர்.

இந்தச் சூழ்நிலையில், தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் உக்ரைனிலிருந்து தாய்நாடு திரும்புவதற்கு ஏற்படும் பயணச் செலவுகள் அனைத்தையும் தமிழ்நாடு அரசே ஏற்றுக்கொள்ளும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

### மாண்புமிகு முதல்வர் அவர்கள் காணொலி வாயிலாக மாணவர்களிடம் நிலவரம் குறித்து விசாரிப்பு

கடந்த சில நாட்களாக ரஷ்ய நாட்டு இராணுவம் உக்ரைன் நாட்டிற்குள் நுழைந்து இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதால் உக்ரைன் நாட்டில் பதட்டமான சூழ்நிலை நிலவி வருகிறது.

இந்நிலையில், உக்ரைன் நாட்டில் தற்பொழுது தங்கியுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த மருத்துவ மாணவர்களான ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி. மௌனி சுஜிதா, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த செல்வன் ஆண்டனி மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த செல்வன் நவநீத ஸ்ரீராம் ஆகியோரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொலி அழைப்பு வாயிலாகத் தொடர்புகொண்டு அங்குள்ள நிலவரம் குறித்துக் கேட்டறிந்தார். மேலும், அவர்களை மீட்பதற்குத் தேவையான நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது என்றும், தாங்கள் இருக்கும் இடத்தில் பாதுகாப்பாகவும், தைரியமாகவும் இருக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தினார்.

### மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்களிடம் தொலைப்பேசி வாயிலாக வேண்டுகோள்

உக்ரைனில் உள்ள மாணவர்களை விரைவில் தமிழ்நாட்டிற்குக் கொண்டுவருவதற்காகத் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. இது தொடர்பாக 28.02.2022 அன்று, ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொலைப்பேசியில் உரையாடினார்.

அப்போது உக்ரைனில் உள்ள தமிழ் மாணவர்கள் குறித்த விபரங்களைத் தெரிவித்து அவர்களுக்குத் தேவையான உணவு, இருப்பிட வசதி, பாதுகாப்பு போன்றவற்றை உறுதி செய்வதோடு விரைவில் அவர்களை மீட்டுக்கொண்டு வருவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்றும், இதற்கெனத் தனி அலுவலர் ஒருவரை நியமிக்க வேண்டுமென்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களை விரைவில் இந்தியாவுக்குக் கொண்டு வருவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் இந்திய அரசு மேற்கொண்டு வருகிறதெனவும், விரைவில் அவர்கள் மீட்டுக்கொண்டு வரப்படுவார்கள் எனவும் மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு உறுதியளித்துள்ளார்.

## கருநாடக மாணவன் இழப்புக் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிக்கை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 02.03.2022ஆம் நாளிட்ட அறிக்கையில், பிளஸ் 2 தேர்வில் 97 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றும், நீட் தேர்வால் மருத்துவம் படிக்கும் வாய்ப்பை இழந்து, அதிகக் கல்விக் கட்டணம் செலுத்த முடியாததால் வேறுவழியின்றி, தனது மருத்துவக் கனவை நனவாக்கிட உக்ரைன் நாட்டிற்குச் சென்று படித்த கருநாடக மாநிலத்து மாணவர் நவீனின் இழப்பு மிகுந்த வேதனை அளிக்கின்றது.



உக்ரைனிலிருந்து வெளியேற முடியாமலும், தங்களது மருத்துவக் கனவு என்ன ஆகுமோ என்ற கவலையிலும், பெரும் இன்னல்களைச் சந்தித்து வரும் மாணவர்கள் குறித்து ஒன்றிய அரசு தெரிவித்து வரும் கருத்துக்கள், ஒன்றிய அமைச்சர்களின் பேட்டிகள், ஒன்றிய அரசுக்கு ஆதரவளிக்கிறோம் எனச் சமூக வலைத்தளங்களில் போடப்படும் பதிவுகள் எல்லாம் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல் உள்ளது. இந்தப் போக்கினை உடனடியாகக் கைவிட்டு, உக்ரைன், ரஷ்யப் போரால் கடுமையான பாதிப்பிற்கு ஆளாகி, நாள்தோறும் உயிர் பயத்தில் தவித்து வரும் ஒவ்வொரு மாணவரையும் காப்பாற்ற வேண்டிய தன் கடமையை முனைப்புடன் நிறைவேற்ற வேண்டும் என்ற மனநிலைக்கு ஒன்றிய அரசு வர வேண்டும்.

இது ''பரப்புரை'' செய்வதற்கோ, ''விளம்பரப்படுத்திக் கொள்வதற்கோ'' உகந்த நேரம் அல்ல. உயிருக்கும், தங்களது எதிர்காலத்திற்கும் போராடும் மாணவர்களைக் காப்பாற்ற வேண்டியத் தருணம். அவர்களுக்கு நம்பிக்கை அளித்து அழைத்து வரவேண்டிய மிக முக்கியமான காலகட்டம் என்பதை நினைவூட்டுகிறேன்.

அதைவிடுத்து, இங்குப் படிக்க முடியாமல், வெளிநாடு சென்று படிக்க முற்பட்ட மாணவர்களின் ஆர்வத்தையும், அதற்காகக் கஷ்டப்பட்டு தங்களது சொத்துகளை விற்று, சொந்த சேமிப்புகளைக் கரைத்து மேல்படிப்பிற்கு அனுப்பிவைத்த பெற்றோர்களின் உணர்வையும் கொச்சைப்படுத்தும் வகையிலான ஏட்டிக்குப் போட்டியான பேட்டிகளையும், கருத்துகளையும் வெளியிட வேண்டாம் என ஒன்றிய அமைச்சர்களுக்கும், பா.ஜ.க.விற்கு ஆதரவாகச் சமூக வலைத்தளத்தில் இருப்பவர்களுக்கும் எச்சரிக்கை விடுக்க வேண்டியது அனைவருக்குமான பிரதமரின் மிக முக்கியக் கடமையாகும்.

நீட் நுழைவுத் தேர்வால், மருத்துவக் கல்வி ஏழை எளியவர்களுக்கு, நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு எட்டாக் கனியாக ஆகிவிடும் ஆபத்தைப் போக்கவே, அந்தத் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள கட்சிகளும் ஒருமுகமாக வலியுறுத்தி வருகின்றன. தற்போது அண்டை மாநிலமான கருநாடகத்தின் முன்னாள் முதலமைச்சர் திரு. குமாரசாமி அவர்களும் இதே கருத்தை வலியுறுத்திப் பேசியிருக்கிறார். இன்னும் சில மாநிலங்களிலும் நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்ற குரல் ஒலிக்கத் தொடங்கியுள்ளது.

தமிழ்நாட்டு மாணவர்களுக்கு மட்டுமின்றி, இந்திய அளவில் உள்ள அனைத்து மாணவர்களுக்காகவுமே நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்று குரல் கொடுத்து வருகிறோம். நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, இதற்கான ஆதரவைக் கோரி மாநில முதலமைச்சர்களுக்கும் ''நீட் தேர்வு பாதிப்பு'' தொடர்பான அறிக்கையை அனுப்பி ஆதரவு கோரினேன். தமிழ்நாடு சட்டமன்றத்தில் முதலில் நிறைவேற்றப்பட்ட மசோதாவும், இப்போது மீண்டும் நிறைவேற்றி குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பியுள்ள ''நீட் விலக்கு'' மசோதாவும் இந்த அடிப்படை நோக்கத்தை முன்வைத்தே என்பதை உக்ரைன் போரில் மருத்துவம் படிக்கச் சென்று உயிரிழந்த மாணவர்களின் அவல நிலைமையை, துயர நிலைமையை மீண்டும் உணர்த்துகிறது.

நீட் தேர்வை அறவே அகற்றி பள்ளிக்கல்வி மதிப்பெண்கள் மூலமாக மட்டுமே மருத்துவ இடங்கள் நிரப்பப்பட வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகமும் தமிழக அரசும் தொடர்ந்து போராடி வருகின்ற சூழ்நிலையில், தற்போது வந்துள்ள உக்ரைன் சூழல் நீட் தேர்வு ரத்துக்கு மேலும் வலுவானக் காரணத்தை ஏற்படுத்தியுள்ளது.

''உக்ரைன் போன்ற சிறிய நாடுகளுக்கு ஏன் மருத்துவக் கல்வி படிக்கப் போனார்கள்'' என்று கேள்வி கேட்டு தர்க்கம் செய்வதற்கு ஏற்ற நேரமல்ல இது. உக்ரைன் மாணவர்களைப் பாதுகாப்பாக மீட்பதும், உள்நாட்டில் மருத்துவக் கல்வி கற்கத் தடையாக இருக்கும் ''நீட் தேர்வினை'' ரத்து செய்வதும் உடனடி இலக்காக அமைய வேண்டும். அந்த இலக்கு வெகு தொலைவில் இல்லை. அனைவரும் இணைந்து போராடி வெல்வோம்.

## அரசு உயர் அலுவலர்களுடன் ஆலோசனை

உக்ரைன் நாட்டில் சிக்கித் தவிக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் புலம்பெயர்ந்தோரைத் தமிழகத்திற்கு அழைத்து வருவது தொடர்பாகக் கடந்த

**24.02.2022** முதல் எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்து, அரசு உயர் அலுவலர்களுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் **03.03.2022** அன்று தலைமைச் செயலகத்தில் ஆலோசனை மேற்கொண்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏற்கெனவே அறிவுறுத்தியதன் அடிப்படையில், உக்ரைனில் உள்ள தமிழ்நாட்டைச் சார்ந்த மாணவர்கள் மற்றும் புலம் பெயர்ந்தோரை மீட்டு, பாதுகாப்பாகத் தமிழகத்திற்குக் கொண்டுவர மாநில, மாவட்ட அளவில் மற்றும் புதுடெல்லியில் தொடர்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் இப்பணிகளை மேற்கொள்ள ஏதுவாக அவசரக் கட்டுப்பாட்டு மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இந்த அவசரக் கட்டுப்பாட்டு மையங்களில் இதுவரை **3,025** தொலைப்பேசி அழைப்புகளும், **4,390** மின்னஞ்சல்களும் பெறப்பட்டுள்ளன. அதனடிப்படையில், தமிழ்நாட்டைச் சார்ந்த **2,223** மாணவர்கள் தொடர்பான விவரங்கள் தொகுக்கப்பட்டு, ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, அவர்களை மீட்டு, தாயகம் அழைத்துவர விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு அரசின் சார்பில் அந்த மாணவர்களோடு உக்ரைன் நாட்டிலுள்ள மாகாணங்கள் வாரியாகத் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டு, மாணவர்களின் பாதுகாப்பைத் தொடர்ந்து உறுதி செய்து வருவதோடு, அவர்களை விரைந்து மீட்டுக் கொண்டு வருவதற்கான தேவையான தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## இந்தியத் தூதரகங்களுடன் ஒருங்கிணைந்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள தமிழக எம்.பி.க்கள் அடங்கிய குழு நியமனம்

மேலும், மீட்பு தொடர்பான ஒருங்கிணைப்புப் பணிகளைத் தமிழ்நாடு அரசுடன் ஒன்றிணைந்து விரைந்து மேற்கொள்ள ஏதுவாக, ஒன்றிய அரசின் சார்பாக ஒருங்கிணைப்பு அலுவலர் ஒருவரை நியமனம் செய்திடுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஒன்றிய அரசைக் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், ஒன்றிய அரசின் தொலைத்தொடர்பு அமைச்சக செயலாளர் திரு. கே. ராஜாராமன், இ.ஆ.ப., அவர்கள் ஒருங்கிணைப்பு அலுவலராக நியமனம் செய்யப்பட்டு, மீட்புப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

**03.03.2022** அன்று காலை **6** மணி வரை தமிழ்நாட்டைச் சேர்ந்த **193** மாணவர்கள் தாய்நாடு திரும்பியுள்ள நிலையில், தமிழ்நாடு அரசின் செலவில் அவர்கள் தங்களது சொந்த மாவட்டங்களுக்குச் சென்றடைய உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், உக்ரைனில் சிக்கித் தவிக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த எஞ்சியுள்ள மாணவர்களை உடனடியாக மீட்பதற்குத் தேவையான கீழ்க்காணும் நடவடிக்கைகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்கள். அதன் விவரம் பின்வருமாறு:

★ உக்ரைன் நாட்டின் கிழக்குப் பகுதியில் அதிகமாக தமிழ்நாட்டு மாணவர்கள் தங்கியிருப்பதால், அவர்களை ரஷ்ய நாட்டின் எல்லை வழியாக அழைத்து வருவதற்கு ஒன்றிய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் மூலம் தொடர்ந்து தொடர்புகொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

★ தமிழ்நாட்டு மாணவர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருந்து, அவர்களை மீட்க மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்து அவர்களுக்குத் தெரிவித்து, வழிநடத்தி அழைத்து வரவேண்டும்.

★ உக்ரைன் நாட்டின் அண்டை நாடுகளான ஹங்கேரி, ருமேனியா, போலந்து, சுலோவாகியா ஆகிய நாடுகளில் தற்காலிகமாக அடைக்கலம் புகுந்துள்ள தமிழ்நாட்டு மாணவர்களை உடனடியாகச் சிறப்பு விமானங்கள் மூலமாகத் தமிழ்நாட்டிற்கு அழைத்து வருவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். தமிழக மாணவர்களை விரைந்து அழைத்து வருவதற்கு ஏதுவாக, மேற்படி நாடுகளுக்குச் சென்று, அங்குள்ள இந்தியத் தூதரகங்களுடன் ஒருங்கிணைந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தமிழ்நாட்டைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. திருச்சி சிவா, திரு. கலாநிதி வீராசாமி, திரு.எம்.எம். அப்துல்லா, சட்டமன்ற உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. இராஜா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுடன் 4 இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களும் இணைந்து சென்று ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்வார்கள்.

## மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்களுக்குக் கடிதம்

உக்ரைன் நாட்டில் சிக்கித் தவிக்கும் தமிழக மாணவர்களைப் பாதுகாப்பாகவும், விரைவாகவும் அழைத்து வருவதற்கு ஒன்றிய வெளியுறவு அமைச்சகம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கோரி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு **03.03.2022** அன்று கடிதம் எழுதியுள்ளார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில், கடந்த **28.02.2022** அன்று, மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்களுடன் தான் தொலைபேசியில் உரையாடியதை நினைவுகூருவதாகவும், உக்ரைனில் உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களை மீட்டு அழைத்துவரும் பணிகளை ஒருங்கிணைக்க, பிரத்தியேகமாக ஒருங்கிணைப்பு அலுவலர் ஒருவரை நியமிக்க வேண்டுமென்ற தமிழக அரசின் கோரிக்கைமீது விரைந்து நடவடிக்கை மேற்கொண்டமைக்குத் தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார். தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறை மூலம், உக்ரைனில் சிக்கித் தவிக்கும் மாணவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருடன்

தமிழக அரசு தொடர்பில் உள்ளதாகவும், இதுவரை, 2,223 மாணவர்களை விரைவாக அங்கிருந்து அழைத்து வருவதற்கு ஏதுவாக, அவர்களின் விவரங்கள் ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சகம் மற்றும் உக்ரைனில் உள்ள இந்தியத் தூதரகத்துடன் பகிரப்பட்டுள்ளன என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

உக்ரைனில் சிக்கித் தவிக்கும் இந்தியர்களை மீட்டு அழைத்து வருவதில் இந்திய அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளைப் பாராட்டும் அதேவேளையில், இதுவரை தமிழ்நாட்டைச் சேர்ந்த சுமார் 193 மாணவர்கள் மட்டுமே தாய்நாடு திரும்பிட வசதி செய்து தரப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிட்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், உக்ரைனிலிருந்து அழைத்து வரப்படும் தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கத் தனிக்கவனம் செலுத்திட வேண்டுமென்று ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும், நிலைமை மோசமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ள உக்ரைனின் கிழக்கு எல்லையில் உள்ள கார்கிவ் மற்றும் சுமி போன்ற இடங்களில் சிக்கித் தவிக்கும் பெரும்பாலான மாணவர்கள், பதுங்கு குழிகள் மற்றும் மெட்ரோ நிலையங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர் என்றும், மோசமான மற்றும் நிச்சயமற்ற நிலைமைகளை அவர்கள் எதிர்கொள்கின்றனர் என்றும், இந்த நிலைமை தொடர்ந்தால் அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் தண்ணீர் கிடைக்காமல் போகலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் இதனை ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவதாகவும் தெரிவித்துள்ளார். எனவே, ரஷ்ய எல்லைகள் வழியாக மாணவர்களை அழைத்து வருவதற்கான மாற்று ஏற்பாடுகள் குறித்து ஆராயப்படலாம் என்று கேட்டுக்கொண்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தப் பிரச்சினையை ரஷ்யாவின் உரிய கவனத்திற்கு அவசரமாக எடுத்துச்செல்ல வேண்டுமென்றும் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

ருமேனியா, போலந்து, ஹங்கேரி மற்றும் ஸ்லோவாகியாவிற்கு 1,000க்கும் மேற்பட்ட தமிழக மாணவர்கள் உக்ரைனிலிருந்து வந்து இந்தியாவிற்குத் திரும்பக் காத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அந்த மாணவர்கள் பாதுகாப்பாகவும், விரைவாகவும் திரும்புவதை உறுதி செய்திட ஏதுவாக, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.திருச்சி சிவா, டாக்டர் கலாநிதி வீராசாமி, திரு.எம்.எம். அப்துல்லா மற்றும் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் டி.ஆர்.பி. ராஜா ஆகியோரை, நான்கு இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களுடன் மேற்படி நாடுகளுக்கு அனுப்பி, அங்குள்ள இந்தியத் தூதரகங்களுடன் இணைந்து பணிகளை மேற்கொள்ளத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளதாகவும், இதற்குத் தேவையான அனுமதிகளை ஒன்றிய வெளியுறவு அமைச்சகம் விரைவாக வழங்கிட வேண்டுமென்றும் தனது கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

## நாடாளுமன்ற உறுப்பினர் தலைமையிலான குழு மாண்புமிகு ஒன்றிய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சருடன் சந்திப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, உக்ரைனில் சிக்கியுள்ள தமிழக மாணவர்களை மீட்பதற்கான நாடாளுமன்ற உறுப்பினர் திரு. திருச்சி சிவா அவர்கள் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அடங்கிய குழுவினர் டெல்லி சென்றடைந்தனர்.

இக்குழுவினர் புதுடெல்லியில் 05.03.2022 அன்று, காலை 11.00 மணிக்கு ஒன்றிய அரசின் மாண்புமிகு வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களைச் சந்தித்து தமிழக மக்களைத் தாயகம் கொண்டுவருவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் செய்து தருமாறு கேட்டுக்கொண்டார்.

## மீட்புப் பணிகளுக்காக ரூ.3.50 கோடி நிதி ஒதுக்கீடு

உக்ரைனில் உள்ள தமிழர்கள் மீட்பு நடவடிக்கைப் பணிகளுக்காக ரூ.3.50 கோடி நிதியினை அரசு ஒதுக்கீடு செய்து, 05.03.2022 அன்று அரசாணை வெளியிடப்பட்டது.

## தமிழக மாணவர்கள் தனி விமானத்தில் அனுப்பிவைப்பு

மீட்புக்குழுவின் தலைவர், தமிழக மாணவர்களை மீட்பதற்கான நாடாளுமன்ற உறுப்பினர் திரு.திருச்சி சிவா அவர்கள் 06.03.2022 அன்று, புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தில் குழு உறுப்பினர்களுடன் மீட்புப் பணிகளைத் தீவிரப்படுத்துதல் குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

மேலும், உக்ரைனிலிருந்து புதுதில்லி வந்தடைந்த மாணவர்களுடன் கலந்துரையாடல் மேற்கொண்டு, தமிழ்நாடு அரசால் ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்புத் தனி விமானத்தில் பூங்கொத்துக் கொடுத்து வழியனுப்பி வைத்தார்.



## புதுடெல்லியில் மீட்புக் குழு ஆலோசனை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட, உக்ரைனில் சிக்கியுள்ள தமிழக மாணவர்களை மீட்பதற்கான பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் திரு. திருச்சி சிவா

அவர்கள் தலைமையிலான குழுவினர் 07.03.2022 அன்று ஆலோசனை மேற்கொண்ட பின்னர், மாநிலங்களவை உறுப்பினர் திரு. திருச்சி சிவா அவர்கள் கூறுகையில் உக்ரைனில் இருந்து வருகை தரும் மாணவர்களை உடனுக்குடன் தமிழ்நாட்டிற்கு அனுப்புவதற்குத் தேவைக்கேற்பத் தனி விமானம் ஏற்பாடு செய்து அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புதுதில்லி வரும் மாணவர்களைத் தமிழ்நாடு இல்லத்தில் தங்கவைக்கப்பட்டு உணவு வழங்கி தேவையான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. உக்ரைனிலிருந்து 1,196 மாணவர்கள் இதுவரை அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.



உக்ரைனிலிருந்து சொந்த செலவில் 255 மாணவ, மாணவியர்கள் ஏற்கெனவே வந்தடைந்துள்ளனர். இதுதவிர, தற்போது தமிழ்நாடு இல்லத்தில் தங்கியுள்ள 136 மாணவர்களுக்கு விமான டிக்கெட்டுகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாடு இல்லத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள மாணவர்களைச் சிறப்புக் குழுவினர்கள் சந்தித்து மாணவர்களின் தேவைகளைக் கேட்டறிந்தனர். தங்களுக்குத் தமிழ்நாடு செல்ல அனைத்து ஏற்பாடுகளையும் செய்து தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மாணவர்கள் நன்றி தெரிவித்தனர்.

மேலும், உக்ரைனிலிருந்து 200 மாணவர்கள் தாயகம் திரும்பலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. உக்ரைனிலிருந்து தமிழக மாணவர்கள் அனைவரும் தமிழ்நாடு திரும்பும் வரை மீட்புக் குழுவினர் புதுதில்லியில் முகாமிட்டுக் கண்காணிக்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தில் தங்கியுள்ள மாணவர்கள் அனைவரும் தமிழக அரசின் செயல்பாட்டைப் பாராட்டி நன்றி தெரிவித்தனர் என்று கூறினர்.

## மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம்

ரஷ்யா–உக்ரைன் இடையே நடைபெற்று வரும் போரினால் பாதிக்கப்பட்டு, தாயகம் திரும்பும் மருத்துவ மாணவர்கள் தங்களது படிப்பை இந்தியாவில் தொடரும் வகையில் உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வலியுறுத்தி மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 07.03.2022 அன்று, கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தில், உக்ரைனுக்கும் ரஷ்யாவிற்கும் இடையே நடைபெற்று வரும் போரில் சிக்கித் தவிக்கும் ஆயிரக்கணக்கான இந்திய மாணவர்களை மீட்டு அழைத்து வருவதில் இந்திய அரசு மேற்கொண்டுவரும் முயற்சிகளை அங்கீகரிக்கும் அதேவேளையில், ஆயிரக்கணக்கான மாணவர்கள் தங்கள் படிப்பைத் தொடர்வதில் எதிர்கொள்ளும் நிச்சயமற்ற தன்மையைத் தீர்க்க வேண்டிய அவசியம் குறித்து மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புவதாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

போர் தொடங்கியதிலிருந்து, இதுவரை 1,200க்கும் மேற்பட்ட மருத்துவ மாணவர்கள் தமிழ்நாட்டிற்குத் திரும்பியுள்ளனர் என்று தெரிவித்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எஞ்சியுள்ள மாணவர்களும் வரும் நாட்களில் உக்ரைனிலிருந்து தாயகம் திரும்புவார்கள் என்று எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டு, தற்போதைய சூழ்நிலை, அம்மாணவர்களின் படிப்பினைச் சீர்குலைத்துள்ளதாகவும், அவர்களின் எதிர்காலம் அச்சுறுத்தலில் உள்ளது என்றும் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், உக்ரைனில் முன்னெப்போதும் இல்லாத வகையில், தற்போது நிலவும் சூழ்நிலையில், இந்த மருத்துவ மாணவர்கள் உக்ரைனில் உள்ள தங்கள் கல்லூரிகளுக்குத் திரும்புவதும், படிப்பைத் தொடர்வதும் நடைமுறையில் சாத்தியமில்லை என்று குறிப்பிட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், போர் நிறுத்தப்பட்ட பின்னரும், பல்கலைக்கழகங்களில் இயல்பு நிலை திரும்பும் வரையிலும் இந்த நிச்சயமற்ற நிலை நிலவும் என்றும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

எனவே, இந்தப் பிரச்சினையில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் அவசரமாகத் தலையிட்டு, சிறப்புக் கவனம் செலுத்தி, தேசிய மருத்துவ ஆணையம் மற்றும் தொடர்புடைய அமைச்சகங்களின் கவனத்திற்குக் கொண்டுசென்றிட வேண்டுமென்று தெரிவித்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உக்ரைனில் தங்களது படிப்பு தடைப்பட்ட நிலையில், அம்மாணவர்கள் இந்தியாவில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் தங்களது படிப்பைத் தொடர உடனடியாகத் தீர்வு காண உரிய வழிமுறைகளைக் கண்டறிய அவர்களுக்கு உத்தரவிடப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளதோடு, இது தொடர்பாக இந்திய அரசு எடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் தமிழக அரசு தனது இடைவிடாத ஆதரவை அளிக்கும் என்று தான்

உறுதியளிப்பதாகவும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.



## மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இல்லம் திரும்பிய மருத்துவ மாணவ, மாணவியர்களின் நெஞ்சார்ந்த நன்றி...

உக்ரைனிலிருந்து தமிழ்நாட்டைச் சார்ந்த மாணவர்கள் பாதுகாப்பாகத் தமிழகம் திரும்பிடப் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்தமைக்காக உக்ரைனில் மருத்துவப் பட்டப் படிப்பு படித்து வரும் மாணவ, மாணவியர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களுக்குத் தங்களது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் **07.03.2022** அன்று, கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த ஆண்டு பெய்த வடகிழக்குப் பருவமழையால் பாதிக்கப்பட்டப் பகுதிகளில், மேற்கொள்ளப்பட்டுவரும் சீரமைப்புப் பணிகளை ஆய்வு செய்து முடித்து, மதுரை விமான நிலையம் செல்லும் வழியில் திருநெல்வேலி மாவட்டம், ஜோதிபுரத்தில், உக்ரைனில் மருத்துவப் பட்டப் படிப்பு படித்து வரும் செல்வி நிவேதிதா, செல்வி திவ்யபாரதி, செல்வி ஹரிணி, திரு. நவநீத ஸ்ரீராம் ஆகியோர் சந்தித்து, தங்களை உக்ரைனிலிருந்து பாதுகாப்பாக மீட்டு, தாயகம் திரும்பிட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்ட தமிழ்நாடு அரசிற்குத் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொண்டார்கள்.

மேலும், உக்ரைனில் உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களைப் பாதுகாப்பாகத் தமிழகத்திற்குத் திரும்பிட போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து வருவதற்காகவும், தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் உக்ரைனிலிருந்து தாய்நாடு திரும்புவதற்கு ஏற்படும் பயணச் செலவுகள் அனைத்தையும் தமிழ்நாடு அரசு ஏற்றதற்காகவும், போரால் பாதிக்கப்பட்டுத் தாயகம் திரும்பும் மருத்துவ மாணவர்கள் தங்கள் படிப்பை இந்தியாவில் தொடர உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று ஒன்றிய அரசை வலியுறுத்தியமைக்காகவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நன்றியினைத் தெரிவித்தார்கள்.

இதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நாங்களே நேரில் வந்து சென்னையில் சந்திக்க எண்ணியிருந்ததாகவும், முதலமைச்சர் அவர்களே தங்களை நேரில் சந்தித்தது மகிழ்ச்சி அளிப்பதாகத் தெரிவித்தார்கள்.

அப்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இது அரசின் கடமை என்றும், மாணவர்களாகிய உங்களின் தேவைகளுக்காக எந்த நேரத்திலும் என்னைத் தொடர்புகொள்ளலாம் என்றும், உங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அரசு தொடர்ந்து செய்து தரும் நம்பிக்கையுடன் இருங்கள் என்றும் கூறினார்.

## இல்லம் திரும்பிய மாணவர்களுக்கு மனநல ஆலோசனை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, உக்ரைன் நாட்டிலிருந்து திரும்பிய மாணவர்களுக்கு **104** கட்டணமில்லா அழைப்பு மையத்தின் மூலம் மனநல ஆலோசனை வழங்கும் நிகழ்வினை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் சென்னை டி.எம்.எஸ். வளாகத்தில் **09.03.2022** அன்று தொடங்கிவைத்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பாக **20** மனநல ஆலோசகர்கள் **1,416** மாணவ, மாணவியர்களையும், அவர்களது பெற்றோர்களையும் தொடர்புகொண்டு அவர்களின் எதிர்காலக் கனவுகள் ஆக்கப்பூர்வமாய் மேற்கொள்ளப்படவேண்டியது குறித்து ஆலோசனை வழங்குவர்.



## புதுடெல்லியில் மீட்புக் குழு ஆலோசனைக் கூட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், உக்ரைனில் சிக்கியுள்ள தமிழக மாணவர்களை மீட்பதற்காக அறிவிக்கப்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அடங்கிய குழுவினர் **10.03.2022** அன்று, புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தில் மாநிலங்களவை உறுப்பினர் திரு. திருச்சி சிவா அவர்கள் தலைமையில் ஆலோசனை மேற்கொண்டனர்.



## சுமி பகுதியிலிருந்து வந்த மாணவர்களுடன் மீட்பு நடவடிக்கை சிறப்புக் குழுவினர்

புதுதில்லியில், 11.03.2022 அன்று, உக்ரைன் நாட்டின் சுமி பகுதியிலிருந்து வருகை தந்த மாணவர்களை, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. திருச்சி சிவா அவர்களின் தலைமையில் உக்ரைனில் சிக்கியுள்ள தமிழக மாணவர்களை மீட்பதற்காக அமைக்கப்பட்ட சிறப்புக் குழுவினர் வரவேற்று, அவர்களுக்கு விமான பயணச் சீட்டுகள் ஏற்பாடு செய்து, தேவையான உணவுகளை வழங்கி உடனடியாக அவர்களது சொந்த ஊருக்கு வழியனுப்பி வைத்தனர்.




இக்குழுவினர், தமிழ்நாடு இல்லத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த 6 மருத்துவ மாணவர்களைச் சந்தித்து, தாயகம் திரும்புவதில் ஏற்பட்ட பிரச்சினைகள் குறித்துக் கேட்டறிந்தனர். மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழக மாணவர்களை மீட்பதற்குத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் தீவிர முயற்சிகள் குறித்தும் விரிவாக விளக்கினர். மாணவர்கள் அனைவரும் மனமார ஒருமித்த குரலில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்கள்.

மாநிலங்களவை உறுப்பினர் திரு.திருச்சி சிவா அவர்கள் கூறுகையில் “உக்ரைனிலிருந்து 6 மாணவர்கள் புதுதில்லி வந்தடைந்தனர். இவர்களோடு சேர்ந்து இதுவரை 1,464 மாணவர்கள் புதுதில்லி வந்து தமிழகத்திற்குச் செல்கிறார்கள். இவர்கள் அனைவரும் ஏற்கெனவே வந்து சேர்ந்துவிட்டார்கள். மேலும், அரசினுடைய உறுதுணையில்லாமல் தங்களுடைய சொந்த முயற்சியில் 366 மாணவர்கள் வந்து சேர்ந்திருக்கிறார்கள், 34 மாணவர்கள் வருவதற்கு விருப்பமில்லையென்று அங்கேயே தங்கிவிட்டார்கள். இதற்குக் காரணம் பல்வேறு சொந்த பிரச்சினைகள் தொடர்ந்து தங்களுடைய பணிகளின் காரணமாக இந்தியாவிற்கு வரவில்லை. சுமியில் சிக்கி இருக்கிற 52 மாணவர்கள் போலந்து வந்தடைந்துள்ளனர்.

இம்மாணவர்கள் போர் நிறுத்தத்திற்குப் பின்னர், 09.03.2022 அன்று, புறப்பட்டு பேருந்து, தொடர்வண்டி மூலமாகப் போலந்து வந்து சேர்ந்திருக்கிறார்கள். 10.03.2022 அன்று இரவு, 52 மாணவர்களும் போலந்திலிருந்து கிளம்புகிறார்கள். 11.03.2022 அன்று, 3 விமானங்களில் 672 இந்திய மாணவர்கள் ஒட்டு மொத்தமாக வர உள்ளனர். இதில் 57 மாணவர்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். மாணவர்கள் வந்து சேர்ந்தவுடன் உக்ரைனுக்கு படிக்கச் சென்ற 1,921 தமிழக மாணவர்கள் பத்திரமாக ஊர் திரும்பிவிட்டார்கள் என்ற நல்ல செய்தி நமக்குக் கிடைக்கும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய சீரிய முயற்சியால், மாணவர்கள் உக்ரைனிலிருந்து வருவது, தூதரகத்துடன் தொடர்பு கொண்டது, தமிழகத்திற்கு விமானத்தின் மூலம் செல்வதற்கு, தமிழ்நாடு அரசின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது” என்று கூறினார்.

## தமிழகம் திரும்பிய மாணவ, மாணவியரை விமான நிலையத்தில் வரவேற்ற மாண்புமிகு முதலமைச்சர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 12.03.2022 அன்று, சென்னை விமான நிலையத்தில், உக்ரைனிலிருந்து தமிழகம் திரும்பிய 9 மருத்துவ மாணவ, மாணவியர்களைப் பூங்கொத்து வழங்கி வரவேற்றார்.



# தமிழ்நாட்டில் ஏழு இடங்களில் அகழாய்வுகள்




**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 11.02.2022 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் தொல்லியல்துறை சார்பில் 2021–2022ஆம் ஆண்டு ஏழு இடங்களில் மேற்கொள்ளப்படவுள்ள அகழாய்வுப் பணிகளின் தொடக்கமாகச் சிவகங்கை மாவட்டம், கீழடி, அதனைச் சுற்றியுள்ள பகுதிகளான கொந்தகை, அகரம், மணலூர்; அரியலூர் மாவட்டம், கங்கைகொண்டசோழபுரம் – மாளிகைமேடு ஆகிய இரண்டு அகழாய்வுப் பணிகளைக் காணொலிக் காட்சி வாயிலாகத் தொடங்கிவைத்தார்.

தமிழ் நிலமானது மிகத்தொன்மை வாய்ந்தது. தமிழின் தொன்மையையும், தமிழரின் பண்பாட்டையும் அறிவியல்பூர்வமாக நிறுவ வேண்டுமானால் முறையான அகழாய்வுகள் அவசியமாகும்.

அண்மைக்காலமாக, கீழடி, அழகன் குளம், கொற்கை, சிவகளை, ஆதிச்சநல்லூர், கொடுமணல், மயிலாடும்பாறை, கங்கைகொண்ட சோழபுரம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் தமிழகத்தின் தொன்மையைப் புதிய காலக்கணிப்பு மூலம் பல நூற்றாண்டுக் காலத்திற்கு முன்னோக்கி எடுத்துச் சென்றுள்ளது.




தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கி வரலாற்றுக்கு முந்தைய காலம் முதல் வரலாற்றுக்காலம் வரையிலான தொல்லியல் இடங்களில் அகழாய்வு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி, பண்டைத் தமிழ்ச் சமூகத்தின் தொன்மை, பண்பாடு மற்றும் விழுமியங்களுக்குப் பெருமை சேர்க்கும் வகையில்

1. கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்கள் (கொந்தகை, அகரம், மணலூர்), சிவகங்கை மாவட்டம் – எட்டாம் கட்டம்
2. சிவகளை, தூத்துக்குடி மாவட்டம் – மூன்றாம் கட்டம்
3. கங்கைகொண்ட சோழபுரம், அரியலூர் மாவட்டம் – இரண்டாம் கட்டம்
4. மயிலாடும்பாறை, கிருஷ்ணகிரி மாவட்டம் – இரண்டாம் கட்டம்
5. வெம்பக்கோட்டை, விருதுநகர் மாவட்டம் – முதல் கட்டம்
6. துலுக்கர்பட்டி, திருநெல்வேலி மாவட்டம் – முதல் கட்டம்
7. பெரும்பாலை, தருமபுரி மாவட்டம் – முதல் கட்டம்

ஆகிய ஏழு இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 20.01.2022 அன்று அறிவித்தார். அந்த அறிவிப்பிற்கிணங்க,

**கீழடி**

கீழடி அகழாய்வில் இதுவரை கண்டெடுக்கப்பட்ட செங்கல் கட்டுமானங்களின் தொடர்ச்சி, மேம்பட்ட சமூக மக்கள் வாழ்ந்ததற்கான சான்றாக விளங்கும் அரிய தொல்பொருட்கள், உள்நாடு மற்றும் வெளிநாடுகளுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்பு கொண்டதற்கான கூடுதல் சான்றுகளைத் தேடியும், நகர நாகரிகக்கூறுகளை வெளிப்படுத்தும் நோக்கிலும் இந்த எட்டாம் கட்ட அகழாய்வு நடைபெறும்.



**சிவகளை :** தண் பொருநை ஆற்றங்கரையில் (தாமிரபரணி ஆற்றங்கரை) வாழ்ந்த தமிழ்ச் சமூகத்தினரின் மேம்பட்ட பண்பாடு 3200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று உறுதி செய்ய கூடுதல் சான்றுகளைத் தேடி அகழாய்வு மேற்கொள்ளப்படும்.

**மயிலாடும்பாறை :** கிருஷ்ணகிரி மாவட்டம், மயிலாடும்பாறை அகழாய்விலும் அவற்றில் கிடைக்கக் கூடிய தொல்பொருட்களுக்கும், வரட்டனப்பள்ளி, கப்பலவாடி போன்ற ஊர்களிலும் கண்டறியப்பட்டதன் வாயிலாகப் புதியக் கற்கால மனிதர்கள் தங்களது வேளாண்மை நடவடிக்கைகளைத் தமிழகத்தில் 4,000 ஆண்டுகளுக்கு முன்னரே மேற்கொண்டிருந்தனர் என்பதனை நிரூபிக்க சான்றாக இத்தளம் அமையும்.

**கங்கைகொண்டசோழபுரம் :** சோழப்பேரரசின் மாமன்னன் முதலாம் இராசேந்திரனின் தலைநகரான கங்கைகொண்ட சோழபுரத்தின் நகரமைப்பு மற்றும் மண்ணில் புதைந்துள்ள கட்டுமானங்களை வெளிக்கொணர்ந்து அரண்மனையின் வடிவமைப்பினைத் தெரிந்து கொள்வது இந்த அகழாய்வின் நோக்கமாகும்.

**துலுக்கர்பட்டி :** திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூரிலிருந்து தென்கிழக்கே 6 கி.மீ. தொலைவில் நம்பி ஆற்றின் இடது கரையில் துலுக்கர்பட்டி என்ற ஊர் அமைந்துள்ளது. இவ்வூரிலிருந்து கண்ணநல்லூர் செல்லும் சாலையில் 2.5 கி.மீ. தொலைவில், வாழ்வியல் மேடு காணப்படுகிறது. இந்த அகழாய்வின் குறிக்கோள் செறிவுமிக்க இத்தொல்லியல் தளத்தின் உருவாக்கம், குடியேற்ற முறை, தொல்பொருட்களின் தன்மை ஆகியவற்றைக் கண்டறிவதாகும். நம்பி ஆற்றின் கரையில் இரும்புக்காலப் பண்பாட்டின் வேர்களைத் தேடுவதே இவ்வகழாய்வின் நோக்கமாகும்.

**வெம்பக்கோட்டை :** விருதுநகர் மாவட்டம், சிவகாசியிலிருந்து தெற்கே 15 கி.மீ. தொலைவில் வைப்பாறு ஆற்றின் இடது கரையில் வெம்பக்கோட்டை என்ற ஊர் அமைந்துள்ளது. மேடு என்றும் உச்சிமேடு என்றும் அழைக்கப்படுகின்ற 25 ஏக்கர் பரப்பளவில் பரந்து கிடக்கின்ற தொல்லியல் மேட்டில் நுண் கற்காலம் முதல் இடைக்காலம் வரை தொடர்ந்து வாழ்ந்ததற்கான அடையாளங்களை வெளிப்படுத்துகின்றது. தற்போது மேற்கொள்ளப்படவுள்ள அகழாய்வின் நோக்கமானது காலவாரியாகத் தொடர்ச்சியாக நிலவிய நிலவியல் உருவாக்கத்தின் பின்னணியில் அதிக எண்ணிக்கையிலான நுண்கற்கருவிகளைச் சேகரிப்பதாகும்.


**பெரும்பாலை :** தருமபுரி மாவட்டம், பென்னாகரம் – மேலச்சேரி சாலையில் பென்னாகரத்திலிருந்து 25 கி.மீ. தொலைவில் பாலாற்றின் இடது கரையில் பெரும்பாலை என்னும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடம் அமைந்துள்ளது. இவ்வூர் கொங்கு நாட்டின் வடவெல்லையாகத் தொன்றுதொட்டு கருதப்படுகிறது. இங்குள்ள வாழ்விட மேடானது தற்போதைய நிலவியல் அமைப்பிலிருந்து 3 முதல் 4 மீட்டர் உயரத்தில் 75 ஏக்கர் நிலப் பரப்பளவில் விரிந்து காணப்படுகிறது. பாலாற்றின் ஆற்றங்கரைகளில் இரும்புக்காலப் பண்பாட்டின் வேர்களைத் தேடுவது இந்த அகழாய்வின் நோக்கமாகும். 15 இலட்சம் ஆண்டுகள் கொண்ட இந்நிலப்பகுதியின் தொன்மை வரலாற்றைத் தொகுத்து எழுதுவதற்கு அதிகளவிலான சான்றுகள் தேவை. எழுதப்படுகின்ற வரலாறானது அறிவியல் அடிப்படையிலான சான்றுகளைக் கொண்டிருத்தல் வேண்டும். அன்று முதல் இன்று வரையிலான கால கட்டங்களில் விடுபட்டுள்ள வரலாற்றினைப் பூர்த்தி செய்து எழுதுவதற்கு அகழாய்வுகள் செய்வது அவசியமாகும். தொடக்க வரலாற்றுக் காலம் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் கங்கைச் சமவெளியில் இருந்ததென்றும், தென்னிந்தியாவில் காணப்படவில்லை என்னும் கருதுகோள் ஆய்வாளர்களிடம் இருந்தது. கீழடி அகழாய்வானது கங்கைச் சமவெளியில் நிலவியது போன்ற நகர நாகரிகம் மட்டுமின்றிப் படிப்பறிவும் எழுத்தறிவும் கி.மு. ஆறாம் நூற்றாண்டிலே நிலவியது என்பதை நிலை நிறுத்தியுள்ளது. ஆதிச்சநல்லூர், கொற்கை, சிவகளை ஆகிய தொன்மை வாய்ந்த ஊர்களைப் பெற்றுள்ள தண் பொருநை ஆற்றங்கரை (தாமிரபரணி) நாகரிகம் 3,200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதைச் சிவகளை அகழாய்வில் கிடைக்கப்பெற்ற உமி நீங்கிய நெல்மணிகளின் வழிப் பெறப்பட்ட காலக் கணக்கீடு நிலை நிறுத்தியுள்ளது. அத்தகைய எண்ணங்களையும் நோக்கங்களையும் நிறைவு செய்வதற்கு தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையானது ஏற்கெனவே அகழாய்வுகளை மேற்கொண்டு வரும் கீழடி, சிவகளை, கங்கைகொண்ட சோழபுரம், மயிலாடும்பாறை ஆகிய இடங்களில் மட்டுமின்றிப் புதியதாகத் திருநெல்வேலி மாவட்டம் – துலுக்கர்பட்டி, விருதுநகர் மாவட்டம் – வெம்பக்கோட்டை, தருமபுரி மாவட்டம் – பெரும்பாலை ஆகிய இடங்களிலும் அகழாய்வுகள் மேற்கொள்ளப்படும்.

இந்நிதியாண்டில் ரூ.5 கோடி நிதியில் மேற்படி ஏழு தொல்லியல் அகழாய்வுகள், இரண்டு களஆய்வுகள் மற்றும் சங்ககாலக் கொற்கைத் துறைமுகத்தினை அடையாளம் காண முன்களப் புல ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**தொடர் தொல்லியல் அகழாய்வுகள்**


தூத்துக்குடி மாவட்டம், சிவகளையில் மூன்றாம் கட்ட அகழாய்வு


கிருஷ்ணகிரி மாவட்டம் மயிலாடும்பாறையில் இரண்டாம் கட்ட அகழாய்வு


அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரத்தில் இரண்டாம் கட்ட அகழாய்வு.

**புதிய தொல்லியல் அகழாய்வுகள்**


திருநெல்வேலி மாவட்டம் துலுக்கர்பட்டி


வெம்பக்கோட்டை – விருதுநகர் மாவட்டம்


தருமபுரி மாவட்டம் பெரும்பாலை

# சென்னை 45ஆவது புத்தகக் காட்சி 2022




**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. உடற்கல்வியியல் கல்லூரி வளாகத்தில், 16.02.2022 அன்று 45ஆவது சென்னை புத்தகக் காட்சியைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை.

45ஆவது சென்னை புத்தகக் கண்காட்சியைத் தொடங்கிவைக்கக்கூடிய இந்த விழாவில் சிறப்புரை ஆற்றி அமர்ந்துள்ள மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் – தம்பி அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களே! மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்களே! தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் தலைவர் திரு.எஸ்.வயிரவன் அவர்களே! செயலாளர் திரு. எஸ்.கே.முருகன் அவர்களே! பபாசி அமைப்பின் பல்வேறு பொறுப்பாளர்களே! தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவர் என்னுடைய அன்பிற்கினிய திரு.திண்டுக்கல் லியோனி அவர்களே! மாநிலங்களவை உறுப்பினர் அருமை சகோதரர் திரு.டி.கே.எஸ்.இளங்கோவன் அவர்களே! விருது பெற்றுள்ள விருதாளர்களே! பதிப்பாளர்களே! விற்பனையாளர்களே! எழுத்தாளர்களே! புத்தக ஆர்வலர்களே!

நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருக்கக்கூடிய பெரியோர்களே! தாய்மார்களே! ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய மாலை வணக்கத்தை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



கடந்த 45 ஆண்டுகளாகச் சென்னைக்கு மட்டுமல்லாமல், தமிழகத்தில் இருக்கக்கூடிய பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்தவர்களுக்கும், இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், உலகம் முழுவதும் இருக்கும் தமிழ்ப் புத்தக அறிவுலகத்தைச் சேர்ந்த அனைவருக்கும் மகிழ்ச்சி தரக்கூடிய நிகழ்ச்சியாக இந்தச் சென்னைப் புத்தகக் கண்காட்சி நடந்து கொண்டிருக்கிறது.

இந்த நிகழ்ச்சி, கடந்த ஜனவரி மாதம் 6ஆம் நாள் தொடங்கியிருக்க வேண்டும். ஆனால், அன்றைக்கு இருந்த சூழ்நிலை, கொரோனா தொற்றுப் பரவல் என்கிற நிலையில் நாம் இருந்த காரணத்தால், பல்வேறு நிபந்தனைகளை, பல்வேறு கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு ஏற்பட்டது. அந்த வகையில் புத்தகக் கண்காட்சியையும் சிறிது தள்ளி வைக்கக்கூடிய ஒரு நிலையை நாங்கள் குறிப்பிட்டுச் சொன்னோம், எடுத்துச் சொன்னோம். பபாசி சார்பில் அதன் நிருவாகிகளும் அதனை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு, பல்வேறு பதிப்பாளர்கள் இந்தக் கண்காட்சியை மிகவும் எதிர்பார்த்துக் காத்திருந்த நிலையில், ஏன், இதற்கான அரங்கமும் அமைத்த நிலையில், பல்வேறு செலவுகள் செய்யப்பட்ட நிலையில், கண்காட்சி நடக்கக்கூடிய அந்தத் தேதியைத் தள்ளி வைப்பது மிகவும் சிரமம் தரக்கூடிய சூழ்நிலை அமைந்திருந்தாலும், கொரோனா பரவலை அலட்சியம் செய்யக்கூடாது என்கிற அடிப்படையில் இந்த அரசு எடுத்த அந்த முடிவை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு, அந்த நிகழ்ச்சியை ஒத்திவைத்தார்கள். அதற்காக இந்த பபாசி நிறுவனத்திற்கு, இந்த அமைப்பிற்கு நான் என்னுடைய நன்றியை அரசின் சார்பில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.






சென்னையில் நடப்பதைப் போலவே, மதுரையில் 14 ஆண்டுகளாகவும், கோவையில் 4 ஆண்டுகளாகவும் இந்தப் புத்தகக் கண்காட்சியை பபாசி நடத்தி வருகிறது. இதேபோல மற்ற மாவட்டங்களிலும் நடத்த, அந்தந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய நிருவாகம் உதவி செய்ய உரிய நடவடிக்கை எடுக்க நம்முடைய அரசு நிச்சயமாக அறிவுரை வழங்கும் என்பதை நான் முதலிலேயே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

2007ஆம் ஆண்டு இந்தப் புத்தகக் கண்காட்சியைத் தொடங்கிவைத்த நம்முடைய முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், சென்னையில் மிகப் பிரம்மாண்டமான நூலகம் அமையப் போகிறது என்ற அறிவிப்பை அப்போதுதான் வெளியிட்டார்.

அதுதான் இன்று எல்லோரும் வியக்கக்கூடிய அண்ணா நூற்றாண்டு நூலகம் என்பதை இன்றைக்கு நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

அதேபோல், மதுரையில் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பெயரால் ரூ.114 கோடி மதிப்பீட்டில் ஒரு மாபெரும் நூலகம் அமைக்க இன்றைய தமிழ்நாடு அரசு பணிகளைத் தொடங்கி இருக்கிறது. அந்த நூலகம் மிகப் பிரம்மாண்டமாக விரைவில் மதுரையில் எழ இருக்கிறது.

இதுபோன்ற அறிவுக்கோவில்களைக் கட்டுவதில் ஆர்வமாக உள்ள அரசுதான் இந்த அரசு. இந்த அரசு என்று சொல்வதைவிட நமது அரசு. திராவிட இயக்கம் என்பதே அறிவியக்கம்தான். நூற்றாண்டுகளாய் அடிமைப்படுத்தப்பட்டிருந்த தமிழ்ச் சமுதாயத்துக்குச் சுயமரியாதையையும் பகுத்தறிவையும் ஊட்டியது திராவிட இயக்கம்தான்!

நீங்கள் ஒன்றை நன்றாகக் கவனித்துப் பார்க்கலாம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைக் கழக அலுவலகத்தின் பெயரே அண்ணா அறிவாலயம். அந்த அறிவாலயம் தொடங்கப்படுவதற்கு முன்பு தி.மு.க.வின் முதல் தலைமையகம் எது என்று கேட்டீர்கள் என்றால், இராயபுரத்தில் இருக்கக்கூடிய அறிவகம்.

ஆண்டாண்டுக் காலமாக அடக்கி ஒடுக்கப்பட்டுக் கிடந்த மக்களுக்குப் புத்தகம் அச்சடித்துச் சுயமரியாதைப் பரப்புரையில் ஈடுபட்டு அறிவுப் புரட்சியை ஏற்படுத்திய இயக்கம்தான் திராவிட இயக்கம்.

‘என்னுடைய வாரிசுகள் என்பது என்னுடைய புத்தகங்கள்தான்’ என்று சொன்னார் தந்தைப் பெரியார் அவர்கள்.

‘வீட்டுக்கொரு நூலகம் அமையுங்கள்’ என்று சொன்னார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

புத்தகத்தின் மூலமாக உலகைப் படியுங்கள் என்று கட்டளையிட்டார் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

அந்த வழித்தடத்தில்தான் இந்த ஸ்டாலின் அரசும், ஏன் நமது அரசும் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

❖ தமிழ்நாடு அரசுத் துறைப் பணியிடங்களில் நுழைபவர்களுக்குத் தமிழ்மொழி அறிவு கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துத் தேர்வு முகமைகளால் அரசுப் பணிக்காக நடத்தப்படும் போட்டித் தேர்வுகள் அனைத்திலும்; நியமன அலுவலர்களால் நடத்தப்படும் எழுத்துத் தேர்வுகளிலும், தமிழ் மொழித்தாளினைத் தகுதித் தேர்வாக ஆக்கி உள்ளது நம்முடைய அரசு.

❖ ஆசிரியர் தேர்வு வாரியம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் உள்ளிட்ட மாநிலத்தில் உள்ள அனைத்துத் தேர்வு வாரியங்களைப் பொறுத்தவரையில் கட்டாயத் தமிழ்மொழித் தகுதித் தேர்வு நிச்சயமாக நடத்தப்படும்.

❖ ஆலயங்களில் அன்னைத் தமிழ் ஒலிக்கத் தொடங்கி இருக்கிறது. ‘அன்னைத் தமிழில் அர்ச்சனை’ என்ற திட்டத்துக்கான குறிக்கோள் சின்னத்தையும், ஆலயங்களில் தமிழில் வழிபாடு நடத்துவதற்கான நூல்களையும் நான் வெளியிட்டுள்ளேன்.

❖ மாவட்டங்களில் உள்ள அரசு அலுவகங்களில் ஊழியர்கள் தமிழ் மொழியில் கையெழுத்து இடுவது, கோப்புகளை முழுவதும் தமிழிலேயே தயாரித்து நிறைவேற்றுவது ஆகிய செயல்பாடுகளை அரசு ஊக்குவித்துக்கொண்டிருக்கிறது.

❖ கரிசல் இலக்கியத்தின் பிதாமகர் கி.ராஜநாராயணன் செந்தமிழ் அந்தணர் மதுரை இரா.இளங்குமரனார் ஆகியோர் மறைவுக்கு அரசு மரியாதை தரப்பட்டுள்ளது.

❖ கடந்த 37 ஆண்டுகளில் 165 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன. இதில் 148 பேரின் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டது தி.மு.க. ஆட்சியில்தான். இந்த எட்டு மாத காலத்தில் ஏழு தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டிருக்கிறது, அவர்களது குடும்பத்துக்கு ரூ.80 இலட்சம் பிரித்துத் தரப்பட்டுள்ளது.






❖ கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனாரின் 150ஆவது பிறந்தநாளை முன்னிட்டு அவர்தம் நூல்களை இரண்டு பெரும் தொகுதிகளாகத் தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் சார்பில் வெளியிட்டுள்ளோம்.

❖ தமிழறிஞர்கள், எழுத்தாளர்களின் பிறந்த நாளன்று இலக்கியக் கூட்டங்கள் நடத்த அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

❖ சங்க இலக்கிய நூல்களைக் குறைந்த விலையில் அச்சிட்டு வெளியிடத் திட்டமிட்டுள்ளோம்.

❖ திராவிட இயக்கத்தின் வரலாறு, கொள்கைகள், கோட்பாடுகள் குறித்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் கொண்ட திராவிடக் களஞ்சியம் வெளியாக இருக்கிறது.

❖ மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் மாநிலப் பாடலாக அறிவிக்கப்பட்டுள்ளது.

❖ இதழியல் துறையில் மிகச்சிறந்து விளங்குவோருக்குக் கலைஞர் எழுதுகோல் விருது, ரூ.5 இலட்சம் பரிசுத் தொகையுடன் வழங்கப்படும்.

❖ மகாகவி பாரதியின் நினைவு நூற்றாண்டை முன்னிட்டு அவரைச் சிறப்பிக்கும் 13 முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளேன்.

❖ செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் புதிய வளாகம் அமைந்துள்ள மேடவாக்கம் – சோழிங்கநல்லூர் இணைப்புச் சாலை "செம்மொழிச் சாலை" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

❖ செம்மொழிச் சிறப்புகளை உலகெங்கும் கொண்டு சேர்க்கும் வகையில் முதற்கட்டமாகத் தெற்காசிய நாடுகளில் உள்ள 5 பல்கலைக்கழகங்களில் 'செம்மொழித் தமிழ் இருக்கைகள்' அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

❖ பொது நூலகங்களுக்குக் கலை, இலக்கியம், கணித்தமிழ், சுற்றுச்சூழல் குறித்த பல்வேறு சிற்றிதழ்கள் வாங்குவதற்காகத் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மூலமாக ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதேபோல, பல்வேறு நூலகங்களுக்கு 60க்கும் மேற்பட்ட ஆங்கிலப் பருவ இதழ்கள் – குறிப்பாக, அரசியல், சமூக ஆர்வலர்கள், போட்டித் தேர்வு எழுதுவோர் மற்றும் குழந்தைகளுக்குப் பயன்படும் இதழ்கள் வாங்குவதற்கு, ரூ.2.35 கோடி தமிழ்நாடு பாடநூல் கழக நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

❖ இயல், இசை, நாடகத்தில் சிறந்து விளங்கும் கலைஞர்களுக்குக் கலைமாமணி விருது வழங்குவதைப் போல, தமிழ் எழுத்தாளர்களுக்கு இலக்கிய மாமணி விருது வழங்கப்பட இருக்கிறது. விருதாளர்களுக்கு ரூ.1 இலட்சம் வழங்கப்பட இருக்கிறது.

❖ முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 98ஆவது பிறந்தநாளை முன்னிட்டு ஓர் அறிவிப்பை நான் செய்துள்ளேன். உயரிய விருது பெற்ற எழுத்தாளர்களுக்கு வீடு வழங்கும் கனவு இல்லத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் உயர் வருவாய்ப் பிரிவு இல்லம் அவர்களுக்கு ஒதுக்கப்படும் அல்லது அவர்கள் விரும்பும் மாவட்டத்தில் 5 செண்ட் மனையில் 1,500 சதுர அடியில் வீடு கட்டித் தரப்படும். இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம். பள்ளிக்கல்வித்துறை, உயர்கல்வித்துறை, தமிழ் வளர்ச்சித்துறை, பொதுத்துறை என்று நான் தனித் தனியாகச் சொல்லத் தொடங்கினால் நீண்ட நேரம் ஆகும்.

முக்கியமானவற்றைச் சொல்ல வேண்டும் என்றால், திராவிட மொழிகளில் மூத்த மொழியாக விளங்கும் தமிழ் மொழியிலிருந்து தமிழின் அடையாளமாக விளங்கும் பல்வேறு புத்தகங்கள் ஆங்கிலம் மற்றும் பிற திராவிட மொழிகளில் மொழிபெயர்க்கப்படும். "திசைதோறும் திராவிடம்" என்ற திட்டத்தின்கீழ் தற்போது ஆறு புத்தகங்களை நான் வெளியிட்டுள்ளேன். மக்கள் காப்பியமாக விளங்கும் இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரம், தமிழின் தலைசிறந்த தலித் எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுப்பு, தோப்பில் முகமது மீரான் சிறுகதைகள், 50 தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தி எஸ்.இராமகிருஷ்ணன் அவர்கள் எழுதிய 'கதாவிலாசம்', தமிழ்ப் புதின எழுத்தாளர்களில் குறிப்பிடத் தகுந்த எழுத்தாளரான எப்சிபா ஜேசுதாசன் அவர்களின் 'புத்தம் வீடு' ஆகிய நூல்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

'முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம்' என்ற திட்டத்தின்கீழ் மொழிபெயர்க்கப்பட்டுள்ள பா.ரா. சுப்பிரமணியம் அவர்கள் மொழிபெயர்த்த, ராபர்ட் கால்டுவெல்லின் 'திராவிட மொழிகள்' அல்லது தென்னிந்திய மொழிகளின் 'ஒப்பிலக்கணம் நூல்' – தமிழ்நாடு பாடநூல் கழகம் மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் கூட்டு வெளியீடாக இன்று வெளியிடப்படுகிறது. இந்த நூல்களை வெளியிட்டதில் நான் மிகுந்த பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சி அடைகிறேன்.





இந்த ஆட்சியின் சாதனை என்று சொன்னால், அது தமிழாட்சி! தமிழ்நாட்டுக்கான ஆட்சி! தமிழ்நாட்டு மக்களுக்கான ஆட்சி! ஒரே வரியில் சொன்னால், திராவிட ஆட்சி!


நான் 2017ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயல் தலைவராகப் பொறுப்பேற்ற நேரத்தில் ஓர் அறிவிப்பை நான் வெளியிட்டேன். பொது நிகழ்ச்சிகளில் பொன்னாடைகள் மற்றும் பூங்கொத்துகளுக்குப் பதிலாக எனக்கு புத்தகங்களைக் கொடுங்கள் என்று நான் கேட்டுக்கொண்டேன். என்னைச் சந்திக்க வருபவர்கள் மட்டுமல்ல, பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு நான் செல்கிறபோது அங்கேயும் புத்தகம் கொடுக்கும் பழக்கம் பரவி வருவதைப் பார்க்கும்போது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.

இதுவரை எனக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட ஒன்றரை இலட்சத்துக்கும் அதிகமான புத்தகங்களை இலங்கை யாழ்ப்பாண நூலகம் தொடங்கி, பல மேலை நாடுகளுக்கும் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள சிறிய நூலகங்களுக்கும் நான் வழங்கி இருக்கிறேன்.

பல்வேறு ஊர்களில் இருந்து, நூலகங்களின் சார்பில் எனக்குக் கடிதங்கள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. அந்த வகையில், தமிழகத்தில் அறிவுத்திறன் மேம்பாடு எந்த அளவுக்குப் பெரிதாக வளர்ந்திருக்கிறது என்பதை இந்தப் புத்தகங்களை அன்பளிப்பாகக் கொடுக்கின்ற அந்தக் காட்சியைப் பார்க்கும்போது நான் உணருகிறேன்.

அதற்கு நானும் ஒரு தூண்டுகோலாக அமைந்திருக்கிறேன் என்பது உள்ளபடியே எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.

அந்த மகிழ்ச்சியோடு இந்த நேரத்தில் உங்களுக்கு நான் ஒரு செய்தியை, அறிவிப்பை வெளியிட இருக்கிறேன். அது என்னவென்று கேட்டீர்களானால், நான் எழுதியிருக்கும் 'உங்களில் ஒருவன்' நூலின் முதல் பாகத்தை இம்மாத இறுதியில் வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் செய்திருக்கிறேன்.



என்னுடைய 23 ஆண்டுகால வாழ்க்கைப் பயணத்தின் சுவடுகளை அதில் நான் பதிவு செய்துள்ளேன். இளமைக் காலம், பள்ளிப் படிப்பு, கல்லூரிக் காலம், அரசியல் ஆர்வம், முதலில் நடத்திய கூட்டம், அதில் முதலில் பேசிய என்னுடைய பேச்சு, திரையுலகம், திருமணம், மிசா காலத்தின் தொடக்கம் வரையிலான பதிவுகள் இடம் பெற்றிருக்கிறது.

1976 வரையில் முதல் பாகமாக அதை எழுதியிருக்கிறேன். விரைவில் புத்தகக் கண்காட்சிக்கும் அது விற்பனைக்கு வரும். ஆகவே, நூலாசிரியன் என்ற அடிப்படையிலும் நான் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருக்கிறேன்!

45ஆவது புத்தகக் கண்காட்சியைத் தொடங்கி வைக்கக்கூடிய இதே நாளில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெயரால் அமைந்த பொற்கிழி விருதை – பத்திரிகையாளர் சமஸ் அவர்கள், பிரசன்னா ராமசாமி, ஆசைத்தம்பி, வெண்ணிலா, பால் சக்கரியா, மீனா கந்தசாமி ஆகியோருக்கு வழங்குவதில் நான் பெருமைப்படுகிறேன். உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, பபாசி விருதுகளைப் பெற்றுள்ள, மீனாட்சி சோமசுந்தரம், ரவி தமிழ்வாணன், பொன்னழகு, திருவை பாபு, முனைவர் தேவிரா, அன்பிற்குரிய பேச்சாளர் பாரதி பாஸ்கர், ஆகியோருக்கு எனது பாராட்டுதல்களை, வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

2007ஆம் ஆண்டு இந்தப் புத்தகக் கண்காட்சியைத் தொடங்கிவைக்க நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் வருகைதந்த நேரத்தில், அப்போது நிகழ்ச்சியில் பேசிய எழுத்தாளர் பிரபஞ்சன் அவர்கள், 'முதலமைச்சர் வந்தால் அறிவிப்பு இல்லாமல் இருக்காது' என்று சொன்னார்.

'ஓர் எழுத்தாளன் சொன்னது வீண் போக விட்டுவிடக் கூடாது' என்று அதைக் குறிப்பிட்டுப் பேசிய நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தனது சொந்த நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாயை பபாசி அமைப்புக்கு வழங்கி இந்த விழாவில் பொற்கிழி வழங்கக்கூடிய நிலைக்கு இந்த நிகழ்ச்சியை நடத்திக்கொண்டிருக்கிறோம்.

அந்த வகையில், முதலமைச்சராக வந்துள்ள நானும் ஒரு அறிவிப்பை வெளியிட வேண்டும் என்றுதான் ஆசையோடு வந்தேன். ஆனால், நகர்ப்புர உள்ளாட்சித் தேர்தல், அதனுடைய விதிமுறைகள் எல்லாம் உங்களுக்குத் தெரியும். எனவே, அந்த அடிப்படையில் இப்போது அறிவிக்க முடியாது. இவ்வளவு நாள் பொறுத்திருந்தீர்கள், இன்னும் இரண்டு நாட்கள் பொறுத்திருங்கள். விரைவில் நல்ல செய்தியை நான் அறிவிப்பேன்.

இதுபோன்ற புத்தகக் கண்காட்சிகள் தொடர்ந்து நடக்கட்டும். வாசிப்புப் பழக்கம் விரிவடையட்டும்! நானிலமெங்கும் அறிவுத்தீ பரவட்டும்!

கொரோனா காலம் என்பதால் அரசின் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடித்து இந்தப் புத்தகக் கண்காட்சி சிறப்புடன் இயங்கட்டும் என்று மனதார, நெஞ்சார தமிழக அரசின் சார்பிலும், என்னுடைய சார்பிலும் வாழ்த்தி விடைபெறுகிறேன்.

# மக்களைத் தேடி மருத்துவத் திட்டம்





**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 23.02.2022 அன்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் செங்கல்பட்டு மாவட்டம், சித்தாலப்பாக்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் 50 இலட்சமாவது பயனாளிக்கு மருந்துப் பெட்டகம் வழங்கி, அவருக்கு அளிக்கப்படும் இயன்முறை சிகிச்சையைப் பார்வையிட்டார். மேலும், மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ் 5 பயனாளிகளுக்கு அவர்கள் இல்லம் தேடிச் சென்று மருந்து பெட்டகங்களை வழங்கினார்.

**மக்களைத் தேடி மருத்துவம் – திட்டம்**

கிருஷ்ணகிரி மாவட்டம், சாமனப்பள்ளி கிராமத்தில் 05.08.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ரூ.258 கோடி செலவில் ''மக்களைத் தேடி மருத்துவத் திட்டம்'' என்ற மகத்தான திட்டத்தைத் தொடங்கிவைத்து, முதல் பயனாளியின் இல்லத்திற்கு நேரில் சென்று மருந்துப் பெட்டகத்தை வழங்கினார்.

தொற்றா நோய்களினால் ஏற்படும் பாதிப்புகளைக் கட்டுப்படுத்தும் விதமாக ''மக்களைத் தேடி மருத்துவம்'' திட்டம் வடிவமைக்கப்பட்டு, களப்பணியாளர்கள் மூலம் பயனாளிகளின் இல்லங்களிலேயே மருத்துவ சேவைகள் வழங்கப்படுகின்றன. இவற்றுள் 45 வயதும் அதற்கு மேற்பட்டும் உள்ளவர்கள், உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு மற்றும் பிற நோய்களால் பாதிக்கப்பட்டுச் சிகிச்சையில் உள்ளவர்களுக்குத் தேவையான மருந்துகளை வழங்குதல், நோய் ஆதரவு சேவைகள், இயன்முறை மருத்துவ சேவைகள், சிறுநீரக நோயாளிகளைப் பராமரித்தல், அத்தியாவசிய மருத்துவ சேவைகளுக்குப் பரிந்துரைத்தல், குழந்தைகளின் பிறவிக் குறைபாடுகளைக் கண்டறிந்து தெரிவித்தல், பெண்களைக் கருப்பைவாய் மற்றும் மார்பகப் புற்றுநோய் கண்டறிவதற்காக ஆய்வுக்குப் பரிந்துரைத்தல் போன்ற ஒரு குடும்பத்திற்குத் தேவையான அனைத்துச் சுகாதாரச் சேவைகளையும் வழங்கி கண்காணிக்க இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

''மக்களைத் தேடி மருத்துவம்'' திட்டம் முதற்கட்டமாக 50 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு, படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு, இன்று கிராமப் பகுதிகள் தொடங்கி மாநகராட்சிகள் வரையுள்ள அனைத்துப் பகுதிவாழ் மக்களும் பயன்பெறும் வகையில், பெண் சுகாதாரத் தன்னார்வலர்கள், இயன்முறை மருத்துவர்கள், நோய் ஆதரவுச் செவிலியர் ஆகிய களப்பணியாளர்கள் மூலம் சேவைகள் வழங்கப்படுகின்றன. மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் ஒவ்வொரு பயனாளியும் மக்கள் நலப் பதிவில் பதிவு செய்யப்பட்டுத் தொடர்ந்து






கண்காணிக்கப்படுவது இத்திட்டத்தின் மற்றொரு சிறப்பு அம்சமாகும்.

“மக்களைத் தேடி மருத்துவம்” திட்டத்தின்கீழ் கள அளவில் 10,969 பெண் சுகாதாரத் தன்னார்வலர்கள் (Women Health Volunteers), 385 இயன்முறை மருத்துவர்கள் (Physiotherapists), 385 நோய் ஆதரவுச் செவிலியர் (Pallative Nurses), 4,848 இடைநிலை சுகாதாரச் சேவையாளர்கள் (Mid Level Health Provider) ஆகியோர் சேவைகளை வழங்குகின்றனர். மேலும், அனைத்து அரசு மருத்துவ மையங்களில் பணிபுரியும் 2,432 ‘மக்களைத் தேடி மருத்துவச் செவிலியர்கள்’ தொற்றாநோய்ச் சேவைகளை வழங்குவதோடு, களஅளவில் கண்டறியப்பட்டுப் பரிந்துரைக்கப்படும் நபர்களுக்குத் தொற்றாநோய்களுக்கான தொடர் சேவைகளை வழங்குகின்றனர்.

**108 அவசரகால வாகனங்கள் சேவை**

பொதுமக்களின் இன்னுயிரைக் காக்கும் ‘108’ அவசரகால ஊர்திச் சேவைத் திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2008ஆம் ஆண்டு தொடங்கி வைக்கப்பட்டது.

‘108’ என்ற எண்ணைத் தொடர்புகொண்டு கட்டணமில்லா இலவசத் தொலைப்பேசி மூலம் இச்சேவையைப் பொதுமக்கள் பெற்றுப் பயனடைகின்றனர். 1,303 எண்ணிக்கையிலான 108 அவசரக் கால ஊர்திகள் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இச்சேவைகள் மேலும் துரிதமாகக் கிடைக்கும் வகையில், காலதாமதத்தைக் குறைத்திட புதியதாக 188 அவசரகால வாகனங்களின் சேவையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கொடியசைத்துத் தொடங்கிவைத்தார். இதில் 4 வாகனங்கள் மலைவாழ் மக்கள் பயன்பெறும் வகையில் ஊட்டி, வால்பாறை, அரசூர் (பொள்ளாச்சி) மற்றும் மோட்டம்பட்டி (கள்ளக்குறிச்சி) ஆகிய மலைப்பகுதிகளில் செயல்படுத்தப்படும்.

தற்போது கூடுதலாக, 188 அவசரகால வாகனங்கள், இச்சேவையில் இணைக்கப்படுவதன் மூலம், அதிக அளவில் பொதுமக்கள் பயனடைவதுடன், சேவைக்காகக் காத்திருக்கும் நேரமும், மருத்துவமனைக்குச் சென்றடையும் கால அளவும் குறையும்.

மக்களைத் தேடி மருத்துவம், “இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48” திட்டங்களின் பயனாளிகளுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்துரையாடினார்

மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ்த் தினந்தோறும் சுய டயாலிசிஸ் சிகிச்சை செய்துகொள்வதற்கான திரவப்பைகளை பெற்றுவரும் சிறுநீரகச் செயல்பாடு இழந்த கடலூர் மாவட்டம், நங்குடி கிராமத்தைச் சேர்ந்த பள்ளி மாணவன் செல்வன் பவின் அவர்களுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலந்துரையாடினார்.

மேலும், விபத்தினால் கால்களை இழந்த செல்வி சங்கீதா, திரு. முகமது ஷேக் அப்துல்லா ஆகியோருக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் நவீனச் செயற்கைக் கால்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

சாலை விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதல் 48 மணி நேரத்திற்கான அவசர மருத்துவச் சிகிச்சை செலவைத் தமிழ்நாடு அரசே மேற்கொள்ளும் வகையில் “இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48” திட்டம் 18.12.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்டுச் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம், 18.12.2021 முதல் இதுவரை தமிழ்நாட்டுச் சாலைகளில் வாகன விபத்துக்களில் பாதிப்படைந்தவர்களில் 18,730 பயனாளிகள் அரசு மருத்துவமனைகளிலும், 3,032 பயனாளிகள் தனியார் மருத்துவமனைகளிலும் என மொத்தம் 21,762 பயனாளிகள் அவசரகால ஊர்திச் சேவை திட்டத்தின் மூலம் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டு அவர்களின் இன்னுயிர் காக்கப்பட்டுப் பயனடைந்துள்ளனர்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் “இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48” திட்டப் பயனாளிகளுடன் கலந்துரையாடினார். அப்போது கோவையில் இரண்டு சக்கர வாகன விபத்தில் சிக்கிப் படுகாயமுற்றுப் பல மணிநேரம் அதிதீவிர அறுவை சிகிச்சை அளிக்கப்பட்டு, குணமடைந்த திரு. மோகன்குமார் என்ற கல்லூரி மாணவனிடம் சிகிச்சை விவரங்கள் குறித்து அக்கறையுடன் கேட்டறிந்தார். “இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48” திட்டத்தின் மூலமாக, இம்மருத்துவ உதவிகளை வழங்கியமைக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அம்மாணவன் நன்றி தெரிவித்துக் கொண்டார். மக்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்வது எங்களது கடமை என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அப்போது தெரிவித்தார்.

# சமூக மேம்பாட்டிற்கான புத்தாக்கத் திட்டம்




**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 26.02.2022 அன்று சென்னை, கோடம்பாக்கம், மீனாட்சி சுந்தரராஜன் பொறியியல் கல்லூரியின் சமூக மேம்பாட்டிற்கான புத்தாக்கத் திட்டத்தினைத் தொடங்கிவைத்து ஆற்றிய உரை :

மீனாட்சி சுந்தரராஜன் பொறியியல் கல்லூரியின் சமூக மேம்பாட்டிற்கான புத்தாக்கத் திட்டத் தொடக்க விழாவில் மாணவர்களின் அரிய நல்படைப்புகளைப் பயனாளிகளுக்கு வழங்கக்கூடிய இந்தச் சிறப்பான நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பித்துக்கொண்டிருக்கக் கூடிய பெரியோர்களே, அன்பிற்கினிய தாய்மார்களே, என் பாசத்திற்கும், அன்பிற்கும் உரிய மீனாட்சி சுந்தரராஜன் கல்லூரியினுடைய மாணவியர்களே, பயனாளிப் பெருமக்களே, மாணவச் செல்வங்களே, பாசமிகு பத்திரிகைத்துறையைச் சார்ந்த இனிய நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

சென்னையின் புகழ்வாய்ந்த கல்லூரிகளில் ஒன்றாக மீனாட்சி மகளிர் கல்லூரி விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதை அறிந்து நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன்; பெருமைப்படுகிறேன். வரலாற்றுச் சிறப்புக்குரிய கல்லூரியாக, இந்த மீனாட்சிக் கல்லூரி விளங்கிக் கொண்டிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த, கோடகநல்லூர் என்கிற சின்னஞ்சிறிய கிராமத்தில் பிறந்து வளர்ந்து, KRS என்று எல்லோராலும் அன்போடு அழைக்கப்படும், கோடகநல்லூர் ராமசாமி சுந்தரராஜன் அவர்களால் 1947ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இந்திய அளவில் மிகவும் குறைந்த எண்ணிக்கையில்தான் அப்போது பொறியியல் கல்லூரிகள் இருந்தன. இந்த நாட்டின் பெரும்பான்மையான மக்களுக்கும் கல்வி உரிமை மறுக்கப்பட்டு, பலருக்கும் ஆரம்பக் கல்விக் கூட கிடைக்காத காலகட்டமாக இருந்திருக்கிறது. மாபெரும் சமூகப் புரட்சியாளர்கள் எளிய மக்களுக்கான கல்விக் கதவுகளைத் திறந்துகொண்டிருந்தார்கள். அந்தக் காலகட்டத்தில், உயர்கல்வி பெற வாய்ப்புக் கிடைத்த சிலருக்குக் கூட பொறியியல் பட்டப் படிப்பு என்பது வெறும் கனவாகத்தான் இருந்திருக்கிறது. அந்தச் சூழலில்தான் பொறியியல் படிக்க விரும்பக் கூடியவர்கள், அந்தப் படிப்பில் பட்டம்பெற வழிவகை செய்யக்கூடிய நோக்கத்தோடு, இந்தக் கல்லூரி துவங்கப்பட்டிருக்கிறது.



உலக மகளிர் ஆண்டான 1975ஆம் ஆண்டு மீனாட்சி மகளிர் கல்லூரி துவங்கப்பட்டது. இப்பொழுது முனைவர் கே.எஸ். லட்சுமி அம்மையார் அவர்களும் நிருவாகத் திறனோடு இந்தக் கல்லூரியை நடத்திக் கொண்டிருக்கிறார் என்பது உள்ளபடியே பெருமைப்படக்கூடிய ஒன்று. கே.ஆர்.எஸ். அவர்களின் மகளான முனைவர்கே.எஸ்.பாபை அவர்களின்சிறப்பான பங்களிப்பால் முன்னணிப் பொறியியல் கல்லூரியாக இந்தக் கல்லூரியை மாற்றியிருக்கிறார். அதற்காக என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொறியியல் கல்வி எளிதாகக் கிடைக்க வேண்டும் என்கின்ற நோக்கத்திற்காகத்தான் இந்தக் கல்வி நிறுவனம் துவங்கப்பட்டிருக்கிறது. அதே நோக்கத்தோடுதான், மாணவர்கள் பொறியியல் கல்லூரியைப் பெறுவதற்கு இடராக இருந்த நுழைவுத் தேர்வை முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் நீக்கினார் என்பதும் வரலாறு, அதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

அதனால், இன்று தமிழ்நாட்டின் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பொறியாளர் இருக்கிறார் என்று சொல்கிற அளவுக்கு நிலைமை மாறியிருக்கிறது. பொறியியல் மட்டும் அல்ல, அனைத்துப் படிப்புகளும் நமது தமிழ்நாட்டு மாணவர்களுக்கு எளிதாகக் கிடைக்க வேண்டும் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலைப்பாடு. இப்பொழுது இருக்கக்கூடிய எனது அரசு என்று சொல்ல மாட்டேன், நமது அரசினுடைய நிலைப்பாடும்!

அதனால்தான், இன்று ஏழை எளிய, கிராமப்புர மாணவர்கள் மருத்துவக் கல்வி பெறுவதற்குத் தடையாக இருக்கக்கூடிய ‘நீட்’ தேர்விலிருந்து விலக்கு பெற நாம் எப்படியெல்லாம் போராடிக்கொண்டிருக்கிறோம், அதுவும் சட்டப் போராட்டத்தை நடத்தக்கூடிய நிலையிலே இன்றைக்கு நாம் இருக்கிறோம். மாணவர்கள் தான் நாட்டினுடைய மிகப்பெரிய சொத்து! எக்காரணம் கொண்டும் மாணவர்களுக்கான கல்விக் கதவுகள் மூடப்படக் கூடாது!

தமிழ்நாட்டில்தான் ஆற்றல்மிக்க இளைஞர் சக்தி அதிகம். இந்தியாவில் இருக்கும் மிக முக்கியமான 100 கல்வி நிறுவனங்களில் 30க்கும் மேற்பட்டவை தமிழ்நாட்டைச் சேர்ந்தவைதான் என்பது பெருமைப்படக்கூடிய ஒன்று. அண்மைக்காலத்தில் வெளியான ஒன்றிய அரசினுடைய தரவரிசை முடிவுகளே அதைச் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கின்றன. பள்ளிகள், மேனிலைப் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், உலக ஆராய்ச்சி நிறுவனங்கள் தமிழ்நாட்டில் இருப்பதுபோல எந்த மாநிலத்திலும் கிடையாது, அதுவும் தமிழ்நாட்டுக்குத்தான் பெருமை.

தமிழ்நாட்டு இளைஞர்கள் உலகத்தின் அனைத்து நாடுகளிலும் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். உயர் பொறுப்புகளில்

இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த இளைஞர்கள் எல்லாம் தமிழ்நாட்டின் உயர்கல்வியால் உயர்ந்தார்கள், உயர்ந்த நிலைக்குச் சென்றவர்கள், அந்த நிலையை இன்னும் கூடுதலாக நாம் உயர்த்தவேண்டும்.

ஆய்வுகள், ஆராய்ச்சிகள், கண்டுபிடிப்புகள் இன்னும் அதிகமாக வேண்டும். வெளிநாடுகளில் இருக்கும் புதுவிதமான படிப்புகள், பட்டங்கள் அனைத்தையும் தமிழ்நாட்டின் கல்லூரி, பல்கலைக்கழகங்களில் நாம் புகுத்தவேண்டும். இதை நான் கடந்த மாதம் 25ஆம் தேதி அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற விழாவில் குறிப்பிட்டுச் சொன்னேன். இந்தக் கல்லூரியில் இன்றையதினம் "சமூக மேம்பாட்டிற்கான புத்தாக்கம்" எனும் திட்டத்தை நீங்கள் உருவாக்கியிருக்கிறீர்கள்.

சமுதாயத்தில் மாற்றுத்திறனாளிகள், பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையிலே இருக்கக்கூடிய பிரிவினர் மற்றும் பல்வேறு சூழல்களால் நலிவடைந்த பெண்கள், இதையெல்லாம் மனதில் நாம் உருவாக்கிக்கொண்டு அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்து, அவர்களது வாழ்வில் உயர்வினைக் கொண்டுவருவதுதான் இந்தத் திட்டத்தின் நோக்கமாக அமைந்திருக்கிறது.

மாணவர்கள் தாங்கள் கல்வி கற்கும் பருவத்திலேயே சமுதாயத்தில் உள்ள தேவைகளைக் கண்டறிந்து, தங்களது கல்லூரியில் அமைந்துள்ள ஆய்வுக்கூடம், நூலகம் மற்றும் பேராசிரியர்கள் துணைகொண்டு தங்களது கற்பனைத் திறனையும், தொழில்நுட்பத்தையும், படைப்பாற்றலையும், கண்டறிந்து செயலாக்கத்தை ஊக்குவிக்க இந்தத் திட்டம் நிச்சயம் உதவும்.

நலிவுற்ற மக்களின் தேவைகளைக் கண்டறிந்து நவீன தொழில்நுட்பம் மூலம் தீர்வுகாண இந்தத்திட்டம் உதவும். இந்தத்திட்டத்தின் தொடக்கமாக இக்கல்லூரி மாணவர்கள் உருவாக்கிய சமூகப் பயன்பாட்டிற்கான எளிமையான சிறந்த தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய, குறைந்த பொருட்செலவிலான படைப்புகளைப் பார்க்கும்போது இவர்கள் இதுபோல இன்னும் பல்வேறு கண்டுபிடிப்புகளைத் தொடர்ந்து அறிமுகப்படுத்தி, எளிய மக்களுக்கு உதவியாக இருக்க வேண்டும் என்று நான் மனந்திறந்து இந்த மாணவச் செல்வங்களை வாழ்த்துகிறேன்.

இந்தத் திட்டங்களை மக்களுடைய பயன்பாட்டிற்கு வழங்குவதில்நான்உள்ளபடியேபெருமைப்படுகிறேன்.தலைவர் கலைஞர் அவர்கள் இந்தக் கண்டுபிடிப்புகளைப் பார்த்திருந்தால் நிச்சயமாக அவரும் பாராட்டியிருப்பார், வாழ்த்தியிருப்பார். அவர்தான் நாட்டிலேயே முதல்முறையாக மாற்றுத்திறனாளிக்கு என்று ஒரு தனித் துறையையே உருவாக்கினார். அந்தத்துறையைத் தன்னுடைய நேரடிக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். இப்பொழுது நான் அதை நேரடிக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறேன். ஆகவே, கண்ணும் கருத்துமாக அதைக் கலைஞர் அவர்கள் பார்த்தார்கள்.

இதுபோன்ற கண்டுபிடிப்புகள் சிறியதாக இருந்தாலும் அவற்றின் மையமாக இருக்கும் மனிதநேயப் பண்பு பெரியது. கல்லூரி துவங்கியுள்ள சமூக மேம்பாட்டிற்கான புத்தாக்கத் திட்டத்தில் உறுதுணையாக இருந்த அனைத்துப் பேராசிரியர்கள், கல்லூரி முதல்வர் மற்றும் செயலாளர் அத்தனைப் பேர்களையும் நான் இந்த நேரத்தில் வாழ்த்துகிறேன்.

"கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்ற பட்டம் நமக்கு போதாது. உயர் கல்வியில், ஆராய்ச்சிக் கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்ற பட்டத்தை நாம் பெற்றாக வேண்டும்" என்கிற என்னுடைய விருப்பத்தை, என்னுடைய எண்ணத்தை நான் இந்த நேரத்தில் எடுத்துச்சொல்லி, அதை நோக்கி நாம் பயணிப்போம் என்று நான் உங்களையெல்லாம் அன்போடு கேட்டுக்கொண்டு, உங்கள் அனைவரையும் சந்திக்கக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கக்கூடிய இந்தக் கல்லூரியினுடைய நிருவாகப் பெருமக்களுக்கு அதேநேரத்தில் இங்கே இவ்வளவு அமைதியாக, மாணவச் செல்வங்கள் என்று சொன்னால் இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சலசலப்பு, கூச்சல் எல்லாம் இருக்கும், ஆனால் நீங்கள் உட்கார்ந்து இருக்கக்கூடிய இந்தக் கட்டுப்பாட்டைப் பார்க்கிறபோது எவ்வளவு கண்ணியத்தோடு, எவ்வளவு கட்டுப்பாட்டோடு இந்தக் கல்லூரி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதற்கு இதுவே எடுத்துக்காட்டாக விளங்கிக்கொண்டிருக்கிறது. இந்தக் கட்டுப்பாட்டோடு இருங்கள், கடமை ஆற்றுங்கள், நிச்சயம் நமக்கு வெற்றி, வெற்றி, வெற்றி என்று கூறி விடைபெறுகிறேன்.




## முத்தரப்புக் கலந்தாய்வுக் கூட்டம்

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் தலைமையில், 05.03.2022 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில், திரையரங்குகளில் வசூலிக்கப்படும் வி.பி.எப். கட்டணம் தொடர்பாக முத்தரப்புக் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கலந்தாய்வுக் கூட்டத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் திரு. மகேசன் காசிராஜன் இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் இ.ஆ.ப., தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம், தமிழ்த் திரைப்பட நடப்புத் தயாரிப்பாளர் சங்கம் ஆகியவற்றின் நிருவாகிகள், டிஜிட்டல் சேவை வழங்கும் நிறுவனங்களான கியூப் (Qube). வி.எச்.எப். (VHF), யு.எப்.ஓ. (UFO) நிருவாகிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.






# தீவிர போலியோ சொட்டு மருந்து முகாம்

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 27.02.2022 அன்று, சென்னை, ஆழ்வார்பேட்டையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் தீவிர பல்ஸ் போலியோ சொட்டு மருந்து முகாமினை, குழந்தைகளுக்குச் சொட்டு மருந்து வழங்கி தொடங்கிவைத்தார்.

தடுப்பூசி திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு 11 வகையான தடுப்பூசிகளைப் பயன்படுத்தி தடுக்கப்படக்கூடிய 12 வகையான நோய்களுக்கு எதிராகப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் கடந்த 2004ஆம் ஆண்டிலிருந்தும், இந்தியாவில் 2014ஆம் ஆண்டிலிருந்தும் போலியோ இல்லாத நிலை உள்ளது. இந்த நிலை தொடர்ந்திடும் வகையில், இந்த ஆண்டு 27ஆவது சுற்றுத் தீவிர பல்ஸ் போலியோ சொட்டு மருந்து முகாம் மாநிலம் முழுவதும் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் உள்ள அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அங்கன்வாடி மையங்கள், சத்துணவு மையங்கள், பள்ளிகள், முக்கிய இடங்கள் என மொத்தம் 43,051 மையங்களில் தீவிர பல்ஸ் போலியோ சொட்டு மருந்து முகாம் நடைபெற்றது. இம்மையங்களில் 0–5 வயது வரையுள்ள 57.61 இலட்சம் குழந்தைகளுக்கு (6 வயதிற்குட்பட்ட கூடுதலான குழந்தைகள் உட்பட) போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டது.

தீவிர பல்ஸ் போலியோ சொட்டு மருந்து முகாம்கள் கோவிட்–19 வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி, பயணிக்கும் குழந்தைகளின் வசதிக்காக முக்கிய பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள், சோதனைச் சாவடிகள், விமான நிலையங்களில் பயணவழி மையங்களிலும் சொட்டு மருந்து வழங்கப்பட்டது. மேலும், நடமாடும் குழுக்கள் மூலமாகத் தொலைதூரம் மற்றும் எளிதில் செல்ல முடியாத பகுதிகளில் வசிக்கும் குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து வழங்கினர். போலியோ சொட்டு மருந்து வழங்கும் பணியில் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட சுகாதாரப் பணியாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஈடுபட்டனர்.



திருப்பூர் மாவட்டம், சாவடிபாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள், தீவிர பல்ஸ் போலியோ சொட்டு மருந்து முகாமினை, குழந்தைகளுக்குச் சொட்டு மருந்து வழங்கி 27.02.2022 அன்று தொடங்கிவைத்தார்.

*மார்ச் 3: உலக காதுகேட்கும் நாள்*





# செவித்திறன் குறித்த விழிப்புணர்வை அனைவரும் பெறவேண்டும்...

**செ**ழுமையான கருத்துகளைச் செவிவழியாகப் பெறும் செல்வமே எல்லாச் செல்வங்களுக்கும் தலையாய செல்வம் என அய்யன் திருவள்ளுவர் “செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம் செல்வத்து ளெல்லாந் தலை” எனச் சொல்கிறார். அத்தகைய செல்வமான செவித்திறன் குறித்த விழிப்புணர்வை அனைவரும் பெற்றாக வேண்டும்.

சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்குமான அரசாகத் திராவிட முன்னேற்றக் கழக அரசு, விளிம்பு நிலை மக்களின் நலனைக் கவனத்தில்கொண்டு செயல்பட்ட தன்னிகரில்லாத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் என்பதையும் உணர்த்தும் விதமாக, ‘Cochlear Implant’ சிகிச்சைக்காக அவர் உதவியது குறித்துப் பிரபல மருத்துவர் திரு. மோகன் காமேஸ்வரன் அவர்கள், கலைஞருக்கான மருத்துவர்களின் புகழஞ்சலிக் கூட்டத்தில் நெக்குருகிப் பேசியது என் நினைவுகளில் இன்றும் நிழலாடுகிறது.

புதிய புதிய ஒலிச் சாதனங்களைப் பயன்படுத்தும் நாம் அவற்றைப் பற்றிப் புரிதல் ஏற்படுத்திக்கொள்ள விழிப்புணர்வாக இந்நாள் அமைந்திருக்கிறது.

மாணவச் செல்வங்களும் இளைஞர்களும் தங்களுடைய ஆடியோ சாதனங்களில் அதிக ஒலி வைத்து நீண்ட நேரம் கேட்டால், அவர்களுடைய காது நரம்புகள் பாதிக்கப்பட்டு, கேட்கும் திறன் இளம் வயதிலேயே குறைந்திட வாய்ப்புண்டு என்று மருத்துவர்களும் அறிவியலாளர்களும் விடுக்கும் எச்சரிக்கையைச் சற்றே காது கொடுத்துக் கேட்டிட வேண்டும்.

வாழ்நாள் முழுவதும் துல்லியமாய்க் கேட்கக் கவனமுடன் கேளுங்கள்! ஓய்வு நேரங்களில் இயற்கையோடு இணைந்திருங்கள்! அதிக ஒலி எழுப்பும் சாதனங்களிடமிருந்து விலகி இருங்கள்! எளிய உடற்பயிற்சி செய்யுங்கள்! வருங்காலத்தை உடல் நலத்தோடு உற்சாகமாய் எதிர்கொள்ளுங்கள் என்று இந்நாளில் கேட்டுக்கொள்கிறேன்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்










## விருதுநகர் – பந்தல் குடியில்

# ராம்கோ சுற்றுச்சூழல் சீரமைப்புப் பூங்கா

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 06.03.2022 அன்று விருதுநகர் மாவட்டம், பந்தல்குடியில் ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவனத்தால் 72 ஏக்கர் நிலப்பரப்பளவில் ரூ.5.20 கோடி மதிப்பீட்டில் செயல்படாத சுரங்கப் பகுதிகளைச் சீரமைத்து அமைக்கப்பட்டுள்ள ராம்கோ சுற்றுச்சூழல் சீரமைப்புப் பூங்காவினைத் திறந்து வைத்தார்.

இந்தச் சுற்றுச்சூழல் பூங்கா, நீர்நிலைப்பாதை, வறண்ட நிலத்தாவரங்கள், கற்றாழை அடினியம் தோட்டம், பந்தல்பூங்கா, புல்வெளி மற்றும் கல்பூங்கா எனப் பிரிக்கப்பட்டு வருகை தரும் மாணவர்கள், பொதுமக்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பூங்காவில் சுரங்கத்தில் உள்ள தேவையற்ற கற்கள் மற்றும் உள்ளூர் செடிகளால் உருவாக்கப்பட்டுள்ள கல்பூங்கா (Rockery Garden), நடைபாதை, 40 ஏக்கர் பரப்பளவில் அடர்வனம் (மியாவாக்கி) ஆகியவையும் அமைக்கப்பட்டுள்ளது.

அனைத்துத் தட்பவெட்பச் சூழ்நிலைகளிலும் வளரக்கூடிய மண்ணின் மரங்களான வேம்பு, புங்கம், அரசு, அத்தி, ஆலமரம், வாகை, நாவல், வில்வம், விலா, இலந்தை, மகிழம், நீர்மருது, கோனவேல், செம்மரம், மஞ்சநெத்தி, நொச்சி, ஆவாரை போன்றவைகளும், வறட்சி மற்றும் நீரில் வாழும் நாட்டு மரங்களான கருவேலம், வெல்வேலம், குடைவேல் போன்ற மரங்களையும், சுமார் 200 இனங்களைக்கொண்ட மர வகைகள், புதர்ச் செடி, கொடி வகைகள், கள்ளி, கற்றாழை, நித்ய கல்யாணி, கற்பூரவள்ளி, தூதுவளை, கரிசிலாங்கன்னி, புல் போன்ற தாவரங்களும் இப்பூங்காவில் நடவு செய்யப்பட்டுள்ளது. தற்போது, சுமார் 2.50 இலட்சம் மரக்கன்றுகள் மற்றும் புதர்செடிகள் நடவு செய்யப்பட்டுள்ளன.








இப்பூங்காவைப் பார்வையிடும் மாணவர்கள் / பொதுமக்களுக்குத் தாவரங்களின் தன்மைகள், நாட்டு மரங்களின் பெருமைகள், தாதுப்பொருட்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தவும், பாறைகளைப் பற்றிய அறிவியல் உண்மைகள் ஆகியவற்றை அறிந்துகொள்ளவும், சுரங்கத்தை மறுசீரமைப்பதால் பறவைகள், சிறிய விலங்குகள், வண்டினம், பூச்சிகள், தேனீக்கள், பட்டாம்பூச்சி, எறும்பு, கரையான் போன்றவை எவ்வாறு வந்தடைகின்றன என்பதையும், அதன்மூலம் சுற்றுச்சூழல் எவ்வாறு மேம்படுகிறது, இது விவசாயப் பெருமக்களுக்கு எப்படி உதவிக்கரமாக இருக்கிறது என்பதைப் பற்றியும் அறிந்துகொள்ள இயலும்.

மேலும், மழைக்காலத்தில் பெய்யும் மழைநீரை முழுவதுமாக சுரங்கத்தின் குழியில் சேகரிப்பது, அதனால் ஏற்படும் பயன்கள், உள்ளூர் தாவரங்கள்; மரங்கள் வளர்ப்பது, இயற்கை உரங்கள் தயாரிப்பது பற்றிய விவரங்களை இளைய தலைமுறையினருக்குக் கொண்டு செல்லவும் இப்பூங்கா உதவிபுரியும். 2023ஆம் ஆண்டு முடிவில் 5 இலட்சம் நாட்டு மரக்கன்றுகள் 400 ஏக்கர் பரப்பளவில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.





# பிரிட்டிஷ் கவுன்சிலுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்




**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் 08.03.2022 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமும், பிரிட்டிஷ் கவுன்சிலும் இணைந்து பிரிட்டிஷ் உயர் ஆணையர் (British High Commissioner) திரு. அலெக்ஸ் எல்லீஸ் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

கடந்த 01.03.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான புதியதோர் முன்னெடுப்பாக "நான் முதல்வன்" திட்டத்தினை திறன் மேம்பாட்டு வழிகாட்டுதல் திட்டமாக அறிமுகப்படுத்தினார். இதன் நீட்சியாகத் தமிழக இளைஞர்கள் அனைவரும் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசவும், எழுதவும் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்படுவது மட்டுமின்றி, நேர்முகத் தேர்வுகளுக்குத் தங்களை எவ்வாறு ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும், தங்களின் தனித்திறன்களை மெருகேற்றும் வகையிலும் இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

அறிவுசார் இலக்கு மற்றும் தமிழ்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளைப் பெறும் வகையில் இளைஞர் சமுதாயத்திற்குத் திறன் பயிற்சியளித்து உலகெங்கும் தடையின்றிச் செல்ல ஆங்கில மொழியினைக் கற்றறியவும், கல்வி மற்றும் கலாச்சாரத்தை ஒருங்கிணைத்து வலுப்படுத்திடவும் இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் சிறப்புப் பயிற்சி தரமான கல்வி மற்றும் சர்வதேசத் தரத்திலான மதிப்பீடுகளை இளைய சமுதாயத்திற்கு அளித்திட வழிவகுக்கும்.

இங்கிலாந்திலுள்ள புகழ்பெற்ற பல்கலைக்கழகங்கள் உயர் கல்வி நிறுவனங்களுடன் இணைந்து பிரத்தியேக பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுப் பயிற்சியாளர்களுக்குச் சிறப்புப் பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இப்பயிற்சி தமிழக இளைஞர்களின் பல்வகையான திறன்களை மேலும் மெருகேற்ற வழிவகை செய்யப்படும். இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலமாக இளைஞர்களின் உயர்கல்வி, திறன் மேம்பாடு, கலை மற்றும் பண்பாடு ஆகியவை வலுப்படுத்தப்படும்.

பிரிட்டிஷ் கவுன்சில் தமிழக அரசுடன் ஒருங்கிணைந்து தமிழகத்திலுள்ள நூலக வல்லுநர்கள் தொடர் தொழில்முறை முன்னேற்றத்திற்கும் இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் வழிவகை செய்யும்.

## பணி நியமன ஆணைகள் வழங்கல்...



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 08.03.2022 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் காலியாகவுள்ள 15 உதவித் திட்ட அமைப்பாளர் மற்றும் 13 திட்ட உதவியாளர் நிலை–I பணியிடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்டவர்களுக்குப் பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 6 நபர்களுக்குப் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.



# தூத்துக்குடியில் இந்தியாவின் முதல் மிகப்பெரிய மிதக்கும் சூரிய மின்சக்தி நிலையம்



**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 07.03.2022 அன்று தூத்துக்குடியில், SPIC நிறுவனத்தின் தொழிற்சாலை வளாகத்தில் உள்ள பெரிய நீர் தேக்கத்தில் ரூ.150.40 கோடி மதிப்பீட்டில் ஆண்டுக்கு 42.0 மில்லியன் யூனிட் மின்சாரத்தை உற்பத்தி செய்து அதனை தங்களுடைய தொழிற்சாலைகளிலேயே உபயோகப்படுத்தும் விதமாக அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் முதல் மற்றும் மிகப்பெரிய மிதக்கும் சூரிய மின்சக்தி நிலையத்தைத் திறந்துவைத்தார்.

இப்புதிய 25.3 MW DC / 22 MW AC திறன் கொண்ட மிதக்கும் சூரிய மின் நிலையத்திட்டம், நவீனகால பசுமை, நிலையான தொழில்நுட்பம் மற்றும் தன்னிறைவு பெற்ற ஆற்றல் உற்பத்தியைச் செயல்படுத்த SPIC நிறுவனத்தின் ESG உத்தியுடன் அமைக்கப்பட்டுள்ளது. மிதக்கும் சோலார் திட்டங்கள் பாரம்பரிய நில அடிப்படையிலான சோலார் ஆலைகளைவிட அதிக உற்பத்தியை வழங்குவதோடு, ஆற்றல் உற்பத்தியை மேம்படுத்தி, விலைமதிப்பற்றத் தண்ணீரை ஆவியாகாமல் சேமிக்கிறது. இச்சூரிய மின்சக்தி நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் அனைத்து மின்சாரமும் SPIC மற்றும் Greenstar உரங்களின் உற்பத்தி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படும்.

இந்த மிதக்கும் சூரிய மின் நிலையம், நீர் குளிர்ச்சி விளைவை எளிதாக்கி, அதிக மின் உற்பத்திக்கு உதவுகிறது. சுத்தமான மின்சாரத்தை உற்பத்தி செய்வதைத் தவிர, நீர்த்தேக்கத்தில் உள்ள நீர் ஆவியாகாமல் 60 சதவிகிதம் கட்டுப்படுத்துவதன் மூலம் சுற்றுச்சூழல் நன்மைக்கும் இத்திட்டம் உதவுகிறது. இந்தத் திட்டம் இந்திய சூரிய ஆற்றல் மேம்பாட்டுத் துறையில் ஒரு முக்கிய மைல்கல் ஆகும்.

SPIC நிறுவனத்தின் மிதக்கும் சூரிய மின் நிலையத் திட்டம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களைப் பயன்படுத்தி மாநிலத்தில் உள்ள தொழில்களை மேம்படுத்துவதோடு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் தமிழகத்தை முன்னோடி மாநிலமாக மாற்றும் இலக்கை அடைவதற்கான ஒரு மைல்கல்லாக அமையும்.



# தூத்துக்குடியில்
# “சர்வதேச அறைகலன் பூங்கா”




**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 07.03.2022 அன்று, தூத்துக்குடியில் 1,156 ஏக்கர் நிலப்பரப்பில், அமைக்கப்படவுள்ள சர்வதேச அறைகலன் பூங்காவிற்கு அடிக்கல் நாட்டினார். மேலும், ரூ.4,755 கோடி முதலீடு மற்றும் 17,476 நபர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைத்திடும் வகையில் 33 புதிய திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்திடப்பட்டன.

**சர்வதேச அறைகலன் பூங்கா**

நாட்டிலேயே முதலாகவும், உலகத்தரத்திற்கு இணையாகவும் சர்வதேச அறைகலன் பூங்காவை உருவாக்கிட அரசு திட்டமிட்டு, தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள மீளவிட்டான் மற்றும் தெற்கு வீரபாண்டியபுரம் கிராமங்களில் உள்ள 1,156 ஏக்கர் நிலப்பரப்பில், தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து 13 கிலோ மீட்டர் தொலைவில் நெடுஞ்சாலையையொட்டி இந்தச் சர்வதேச அறைகலன் பூங்கா அமைக்கப்படவுள்ளது.

70 – 80% மூலப்பொருள் தேவையைப் பூர்த்தி செய்திடும் வகையில் ஒரு சிறப்பான சூழல் அமைப்பை உருவாக்கி, உற்பத்திச் செலவினங்களைப் பெருமளவு குறைத்து, அறைகலன் துறையில், தமிழ்நாட்டின் போட்டித் தன்மையை அதிகரிக்கும் வகையில், இந்தச் சர்வதேச அறைகலன் பூங்கா விளங்கும். மேலும், முழுக்க முழுக்க சூரிய மின்சக்தி உற்பத்தி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு இணக்கத்தை உறுதி செய்தல், கழிவு சேகரிப்பு மற்றும் வெளியேற்றங்களுக்கான சுத்திகரிப்பு வசதி ஆகியவற்றிற்கான சிறப்பு வசதிகளுடன் பசுமை சார்ந்த மாதிரி கருத்துருக்களுடன் இப்பூங்கா அபிவிருத்தி செய்யப்பட உள்ளது.

இத்திட்டத்தின் முதற்கட்டம், 4 முதல் 5 ஆண்டுகளில் முழுமையாகச் செயல்படும் தருணத்தில் ரூ.1,500 முதல் ரூ.1,800 கோடி அளவிற்கான முதலீடுகள் மற்றும் 1.1 முதல் 1.5 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாகவும் வாய்ப்புள்ளது.

இப்பூங்காவின் இரண்டாம் கட்டம், 8 முதல் 10 ஆண்டுகளில் முழுமையாகச் செயல்படும் தருணத்தில் ரூ.3,500 முதல் ரூ.4,500 கோடி அளவிற்கான முதலீடுகள் மற்றும் 3 இலட்சம் முதல் 3.50 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாகவும் வாய்ப்புள்ளது.

**புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்**

இந்தச் சர்வதேச அறைகலன் பூங்காவில், திட்டங்களை அமைப்பதற்கு முன்வந்துள்ள 8 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன.

Hettich India Pvt Ltd, Deceuninck Profiles, Manor & Mews , New Century Sofa India, Vikas Exports, Dileep Industries Ind, Marque impex, Borotik ஆகிய 8 நிறுவனங்களின் மரச்சாமான் மற்றும் தோல் பொருட்களால் அறைகலன் பொருட்களை உற்பத்தி செய்யும் திட்டங்கள் மூலம் ரூ.2,845 கோடி முதலீடும், 11,450 நபர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

இந்நிகழ்வின்போது, சர்வதேச அறைகலன் பூங்காவில், தனது உற்பத்தித் திட்டங்களை நிறுவ முன்வந்துள்ள M/s. Hettich India Private Limited மற்றும் M/s. Deceuninck Profiles India Private Limited ஆகிய 2 நிறுவனங்களுக்கு நில ஒதுக்கீடு ஆணைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

**தொழில்துறை சார்பாக இதர புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்**

தொழில்துறை சார்பில், ரூ.1,643 கோடி முதலீடு மற்றும் 3,653 நபர்களுக்குப் புதிய வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் 6 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. உணவு பதப்படுத்துதல், ஜவுளி மற்றும் ஆடைகள் உற்பத்தி, உரங்கள், இரசாயனங்கள் உற்பத்தி போன்ற துறைகளில் தூத்துக்குடி, தேனி, திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் இந்நிறுவனங்கள் அமையவுள்ளன.

LS Mills இல் ஜவுளி உற்பத்தி தேனி, திண்டுக்கல் விருதுநகர், திருப்பூர் மாவட்டங்களிலும், Rajapalayam Mills ஜவுளி உற்பத்தியினை விருதுநகரிலும், Fishin' India கடல் உணவுகள் பதப்படுத்துதலைத் திருநெல்வேலி, கங்கைகொண்டானிலும், Silverline Industries உரம் மற்றும் சல்பூரிக் அமிலத்தினை




தூத்துக்குடி மற்றும் சென்னையிலும், Kartya Textiles ஜவுளி உற்பத்தியை, விருதுநகரிலும், Kasim Textiles Mills ஜவுளி உற்பத்தி, விருதுநகரிலும் தொடங்கவுள்ளனர்.

**குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பாக 19 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்**

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் 267 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 2,373 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில் 19 நிறுவனங்களுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டது.

இந்த முதலீடுகள், கட்டுமானம், உணவுப் பதப்படுத்துதல், கண்ணாடி உற்பத்தி, ஆடைகள் மற்றும் ஜவுளி, சூரிய ஒளி அடுப்புகள், அறைகலன், உரங்கள், மருத்துவ உபகரணங்கள் ஆகிய துறைகளில், தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை, திண்டுக்கல், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்படவுள்ளன.

தூத்துக்குடியில், M/s. Sakthi Fly Ash Bricks ஃப்ளை ஆஷ் செங்கல் உற்பத்தியினையும், M/s. Viva Frozen Foods மீன் பதப்படுத்துதலையும், M/s. Shaleo Marine Foods மீன் பதப்படுத்துதல் மற்றும் பனிக்கட்டி ஆலையையும், M/s. Santhanam Packaging (P) Ltd நெய்த பைகள் உற்பத்தியையும், M/s. VAINI Fly Ash Brick & Block Manufacturers ஃப்ளை ஆஷ் செங்கல் மற்றும் பேவர் பிளாக்ஸ் உற்பத்தியையும்,

திருநெல்வேலியில் M/s. Vinayaga Glass Industries கண்ணாடி உற்பத்தியையும், M/s. Jayam Marine (P) Ltd. இறால் மற்றும் மீன் எண்ணெய் உற்பத்தி, மீன் உணவு தயாரித்தல், M/s. Aditi Infrastructure Developers அனைத்துக் கட்டுமானப் பொருட்கள் தயாரித்தலையும்,

விருதுநகரில் M/s. Sivasakthi paper and boards அட்டைப் பலகைகள் தயாரித்தல், M/s. Jayskay Group of Company மருத்துவப் பொருட்கள் தயாரித்தல், செயற்கை நுண்ணறிவுக் கருவிகள் தயாரித்தல், M/s. Dharmarathina Textile Private Limited பருத்தியிலிருந்து நூல் உற்பத்தி செய்தல்,

இராமநாதபுரத்தில், M/s. Kathiravan Solar Project சூரிய ஒளி குக்கர்கள், சூரிய ஒளி அடுப்புகள் தயாரித்தல்,

மதுரையில், M/s. Ergoline India Pvt Ltd மரச்சாமான்கள் உற்பத்தி செய்தல், M/s. Lalitha Devi Mordern Rice Mill அரிசி தவிடு எண்ணெய் உற்பத்தியையும், M/s. Sathyam Biotech உயிரியல் உரங்கள் தயாரித்தல்,

திண்டுக்கல்லில், M/s. Sri Desikanathar Textiles (P) LTD ஜவுளி நெசவு உற்பத்தியும், M/s Latrile Gloves (P) LTD மருத்துவக் கையுறைகள் உற்பத்தி, M/S DeltaStar Power Projects Services Pvt Ltd சூரிய ஒளி, LED, சுகாதார பராமரிப்பு, மருத்துவ சாதனங்கள் தயாரித்தல்,

சிவகங்கையில், M/s. Victus Apparel (P) Ltd ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைகள் தயாரித்தல்,

என 33 திட்டங்களின் வாயிலாக ரூ.4,755 கோடி முதலீடும், 17,476 நபர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

**வழிகாட்டி நிறுவனத்தின் புதிய இணையதளம்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வழிகாட்டி நிறுவனத்தின் புதிய இணையதளத்தைத் (www.investingintamilnadu.com) துவக்கி வைத்தார். இதில், தற்போது வளர்ந்து வரும் துறைகள் உட்பட அனைத்துத் துறைகள் பற்றிய முழு விவரங்கள், தமிழ்நாட்டில் தொழில் துவங்குவதற்குத் தேவையான அனுமதிகள், ஒப்புதல்கள், நடைமுறைகள் போன்ற விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இந்த ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் கொண்ட இந்த இணையதளமானது, முதலீட்டாளர்கள் தங்கள் தொழில் சார்ந்த ஐயங்களை உடனுக்குடன் தீர்த்துக்கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு நிலத் தகவல் இணையதளம்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு நிலத் தகவல் இணையத்தை (www.tnlip.com) துவக்கிவைத்தார். இந்த இணையதளம், தொழில் புரியத் தேவைப்படும் நிலங்களை விற்பவர்களையும், அந்நிலங்களை வாங்குபவர்களையும் இணைத்திடும் ஒரு தளமாக விளங்கும்.

பெரிய அளவில் நிலம் வைத்திருப்போர், அவர்களது நிலங்களை, இவ்விணையத்தில் பட்டியலிட்டுக்கொள்ளலாம். அவ்வாறே, நிலம் வாங்குவோரும், தங்களின் தொழில் தேவைகளுக்கேற்ற பொருத்தமான நிலங்களைப் பார்வையிடவும், விற்பனையாளர்களுடனும் தொடர்பு கொள்ளவும் இயலும். இந்நிலத் தொகுப்புகளின் நம்பகத்தன்மையைச் சரிபார்த்திடவும், இந்த இணையத்தில் பதிவு செய்யப்பட்ட சட்ட ஆலோசகர்கள் மூலம் சட்ட ஆலோசனைகளைப் பெற்றிடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தூத்துக்குடியில் அமைக்கப்படவுள்ள சர்வதேச அறைகலன் பூங்காவிற்கு அடிக்கல் நாட்டி மாண்புமிகு




தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை :

இந்த விழாவினுடைய தலைமைப் பொறுப்பை ஏற்று உரை ஆற்றி அமர்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களே,

நிகழ்ச்சிக்கு முன்னிலைப் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையினுடைய அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்களே,

மாண்புமிகு சமூகநலன் – மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன் அவர்களே,

மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்களே,

நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்களே,

தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் என்னுடைய அருமைத் தங்கை திருமதி கனிமொழி அவர்களே,

சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.சண்முகய்யா அவர்களே, மார்க்கெண்டேயன் அவர்களே, ஊர்வசி அமிர்தராஜ் அவர்களே,

தூத்துக்குடி மாநகராட்சியினுடைய வணக்கத்திற்குரிய மேயர் ஜெகன் அவர்களே, துணைமேயர் ஜெனிதா அவர்களே,

துவக்கத்தில் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய தொழில்துறைக் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. கிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்களே,

தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. பூஜா குல்கர்னி அவர்களே,

தொழில் வணிக ஆணையர் திருமதி தாமஸ் வைத்தியன் அவர்களே,

மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்களே,

ஒன்றிய அரசின் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையின் SCALE கமிட்டி தலைவர் திரு.பவன் கோயங்கா அவர்களே,

ராம்கோ குழுமத் தலைவர் திரு.வெங்கட்ராம ராஜா அவர்களே, மற்றும் தொழில் அதிபர்களே! தொழில் முனைவோர்களே,

பாசமிகு பத்திரிகையாளர்களே, ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

தமிழகத்திலே ஆட்சி மாற்றம் ஏற்பட்டுப் பத்து மாதங்கள் முடிந்து இருக்கிறது. **11**ஆவது மாதம் தொடங்கக்கூடிய இந்த நாளில், தூத்துக்குடியில் இத்தகைய விழாவை ஏற்பாடு செய்து அந்த விழாவில் நானும் பங்கெடுக்கக்கூடிய வாய்ப்பை எனக்கு ஏற்படுத்தித் தந்திருக்கக்கூடிய அனைவருக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பொறுப்பேற்ற நாள்முதல் இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தேர்தல் முடிவுகள் வெளிவந்து கொண்டிருக்கும்போதே அரசுப் பணியை நாங்கள் தொடங்கியிருக்கிறோம். நாள்தோறும் தமிழ்நாட்டினுடைய வளர்ச்சிக்காகவும், தமிழ்நாட்டினுடைய மக்களின் முன்னேற்றத்திற்காகவும் எப்படியெல்லாம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பது உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும்.

நாள்தோறும் ஏதாவது ஒரு திட்டத்தைத் தொடங்கி வைக்கிறோம். ஏதாவது ஒரு முக்கியமான அறிவிப்பை வெளியிட்டுக் கொண்டிருக்கிறோம். தொடர்ந்து நலத்திட்ட உதவிகளையும் மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கக்கூடிய அடிப்படையிலே ஏதாவது ஒரு தொழில் நிறுவனத்தைத் தொடங்கிவைத்துக் கொண்டிருக்கிறோம்.

'மக்களிடம் செல்; மக்களோடு வாழ்' என்று எங்களை ஆளாக்கிய பேறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைத் தாரக மந்திரமாக நாங்கள் எங்கள் உள்ளத்தில் ஏற்றுக் கொண்டு அந்தப் பணியைத் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். அமைச்சரவையில் இருக்கக்கூடிய அமைச்சர் பெருமக்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்திலே பொறுப்பேற்றுக் கொண்டிருக்கக்கூடிய நிருவாகிகளையும், சட்டமன்ற உறுப்பினர்களையும்,




நாடாளுமன்ற உறுப்பினர்களையும், உள்ளாட்சி அமைப்பினுடைய பிரதிநிதிகளையும், அதேபோல் நடந்திட வேண்டும் என்று நாங்கள் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம்.

இந்த நிகழ்ச்சிக்கு வருவதற்கு நேற்று முன்தினம் தமிழக அமைச்சரவைக் கூட்டத்தை நாங்கள் கூட்டினோம். விரைவில் நிதிநிலை அறிக்கையைச் சட்டமன்றத்தில் தாக்கல் செய்யவிருக்கிறோம். அது குறித்து ஆலோசனைகளை அமைச்சரவைக் கூட்டத்தில் நாங்கள் கலந்து பேசினோம்.

இப்படி ஒரு ஆலோசனைக் கூட்டத்திற்கு முன்பு, தமிழகத்தில் இருக்கக்கூடிய வணிகப் பெருமக்கள், உழவர்கள், தொழில் அதிபர்கள் உள்ளிட்ட பல்வேறு சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினரிடமும் நிதிநிலை எப்படி அமையவேண்டும், எந்த நிலையிலே இருந்திடவேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் விரிவாக அவர்களோடு கலந்து பேசி, அதற்குப் பிறகு அதை நிறைவேற்றுகின்ற முயற்சியில் நாங்கள் ஈடுபடவிருக்கிறோம். இப்படி மக்கள் நல அரசாக, அனைவரையும் அரவணைத்துச் செல்லும் அரசாக, என்னுடைய அரசு என்று நான் சொல்லமாட்டேன், நம்முடைய அரசு, நமது அரசு என்றுதான் நான் தொடர்ந்து சொல்லிக்கொண்டு இருக்கிறேன். நம்முடைய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தப் பணிகளையெல்லாம் நிறைவு செய்துவிட்டுத்தான், நான் தூத்துக்குடிக்கு வந்திருக்கிறேன்.

சர்வதேச அறைகலன் பூங்கா இங்கு அமைக்கப்படவிருக்கிறது. இந்தியாவிலேயே முதன்முதலாகத் தொடங்கப்படக்கூடிய இத்தகையப் பூங்கா, இங்குதான் அமையப் போகிறது என்ற பெருமை இந்தத் தூத்துக்குடிக்குக் கிடைத்துள்ளது.

இந்தியாவினுடைய தென் எல்லையில் இருக்கிற மாவட்டம் இந்த மாவட்டம். அந்த மாவட்டத்தில் சர்வதேச அறைகலன் பூங்கா அமைய இருக்கிறது. முத்துக்குளிக்கும் முத்து நகரில், மிகப்பெரிய நிறுவனம் அமையப் போகிறது.

நம்முடைய இந்திய விடுதலை வேள்விக்குத் தங்களது உடலையே விறகாகத் தந்த வீரபாண்டிய கட்டப்பொம்மன், வீரன் சுந்தரலிங்கம், மகாகவி பாரதியாரும், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.யும் பிறந்த மண்ணில் இது அமையப் போகிறது.

சொந்த தேசத்தில், சொந்தப் பணத்தில், சுயச்சார்பு பொருளாதாரத்தை நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்று கனவு கண்டவர் தான் வ.உ.சிதம்பரனார் அவர்கள். அவரது பொருளாதாரக் கனவு நிறைவேறக்கூடிய நாளாக இது அமைந்திருக்கிறது.

நீர் வளம், நிறைந்த வேளாண் நிலமாகவும், தமிழரின் ஆட்சி, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் நிலமாகவும் இந்தத் தூத்துக்குடி விளங்கிக் கொண்டிருக்கிறது.

முத்துக் குளிக்கும் தொழிலுக்குப் பெயர் பெற்றதால்தான் தூத்துக்குடியை "முத்து நகர்" என்று நாம் சொல்கிறோம். இந்த முத்து நகரைத்தான், 2008ஆம் ஆண்டில், நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டினுடைய 10ஆவது மாநகராட்சியாக அதிகாரப்பூர்வமாக அறிவித்தார்கள்.

கிராமங்கள், நகரங்கள் ஆக வேண்டும். நகரங்கள், மாநகரங்கள் ஆகவேண்டும் என்பதுதான் கழக அரசினுடைய கொள்கை. அந்த அடிப்படையில் தூத்துக்குடியை மாநகராட்சியாகக் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். ஏராளமானத் திட்டங்களை, நிறுவனங்களை இந்த மாவட்டத்திற்குச் செய்யவேண்டும் என்பதற்காகத்தான் இதை மாநகராட்சியாக உருவாக்கிக் கொடுத்தார்கள்.

அந்த வரிசையில் இன்றைய நாள், இந்தச் சர்வதேச அறைகலன் பூங்கா அமைக்க இருக்கிறோம். தூத்துக்குடி மாவட்டத்தினை இதற்குத் தேர்ந்தெடுத்ததற்கு முக்கியமான காரணம் ஒன்று உண்டு.

தென் தமிழக மக்களுக்குப் பெரிய அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கி, இந்த மக்களுக்கு வாழ்வாதாரத்தை ஏற்படுத்தி, பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்தில்தான் தூத்துக்குடியில் இந்த சர்வதேச அறைகலன் பூங்கா அமைக்கப்படவுள்ளது.

தமிழ்நாட்டினுடைய 2ஆவது பெரிய துறைமுகமாக இருப்பதோடு, அகில இந்திய அளவில் 3ஆவது பெரிய கொள்ளளவு கொண்ட தூத்துக்குடி துறைமுகத்தில் ஏற்றுமதி, இறக்குமதி வணிகம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. தென்கிழக்கு ஆசிய நாடுகளிலிருந்தும் ஆஸ்திரேலியா,




நியூசிலாந்து ஆகிய நாடுகளிலிருந்தும் வரக்கூடிய கப்பல்களுக்கு இந்தியாவின் நுழைவு வாயிலாக இந்தத் தூத்துக்குடி துறைமுகம் விளங்கிக் கொண்டிருக்கிறது. அதனால்தான் நாங்கள் தூத்துக்குடியில் இந்தப் பூங்காவை அமைக்க முடிவெடுத்தோம்.

கொரோனா என்ற பெருந்தொற்றில் இருந்து இன்னும் சில மாநிலங்கள் மீளவில்லை. கொரோனா காரணமாக விழுந்த பொருளாதாரத்தைச் சில மாநிலங்கள் இன்னமும் மீட்டெடுக்க முடியவில்லை.

கொரோனாவில் இருந்து மீண்டது மட்டுமல்ல, பொருளாதாரத்தையும் மேம்பாடு அடைய வைக்கத் தமிழ்நாடு அரசு தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. அதனால்தான் நமது மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி கடந்த பத்து மாத காலத்தில் சீராக இருந்து வருகிறது. அது உள்ளபடியே மகிழ்ச்சிக்குரிய ஒன்றாக அமைந்திருக்கிறது.

வறுமையை ஒழித்தல், வேலைவாய்ப்பினைப் பெருமளவில் உருவாக்குதல், சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல், சமூகநீதி காத்தல் போன்ற நோக்கங்களோடு அனைவரையும் உள்ளடக்கிய பரவலான வளர்ச்சி என்ற 'திராவிட மாடல்' இலக்கினை நோக்கி நாம் பயணம் செய்துகொண்டு இருக்கிறோம்.

தற்போது நாம் செயல்படுத்தி வரும் திட்டங்களும், எடுத்துவரக்கூடிய நடவடிக்கைகளும், குறுகியகால நல்விளைவுகளுக்காக மட்டும் மேற்கொள்ளப்படுபவை கிடையாது. நமது மாநிலத்தின் மகத்தான வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி, அதன்மூலம் தொழில் வளர்ச்சியைச் சிறப்புற உயர்த்தி, நமது தமிழ் மக்கள் அனைவருக்கும் நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் ஒரு சிறப்பான வாழ்க்கை நிலையை ஏற்படுத்திட வேண்டும் என்பதே நமது அரசினுடைய குறிக்கோள், இலட்சியம்.

இதுவரை மூன்று முதலீட்டாளர்கள் மாநாட்டை நாம் நடத்தியிருக்கிறோம். இம்மாநாடுகளில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் நமது மாநிலத்தின் மீது முதலீட்டாளர்கள் வைத்திருக்கக்கூடிய பெரும் நம்பிக்கையை இது எடுத்துக் காட்டுகின்றது. இரண்டு மாநாடுகள் சென்னையிலும், மூன்றாவது மாநாடு கோவையிலும் நடத்தப்பட்டன. இம்மாநாடுகள் முதலீட்டாளர்களிடையே மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றன.

"நிதி நுட்பக் கொள்கை", "ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை" போன்ற துறை சார்ந்த கொள்கைகளைத் தமிழ்நாடு அரசு சமீபத்தில் வெளியிட்டுள்ளது. இதுவரை 109 திட்டங்களுக்குப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டுள்ளன. இவற்றில், உறுதி செய்யப்பட்ட ரூ.56,229 கோடி முதலீட்டில் 1,74,999 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும். இந்தத் திட்டங்கள், பரவலாக மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

"பரவலான வளர்ச்சியே பார்போற்றும் வளர்ச்சி, சமச்சீரான வளர்ச்சியே சிறப்பான வளர்ச்சி" என்று நான் சொன்னேன். அவையே செயல் வடிவம் ஆகி வருகிறது.

முதலீடுகளை ஈர்த்திட, மாநிலத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று, இத்தகைய திட்டங்களுக்கான துவக்க விழாக்களை நடத்தி, மாநிலம் முழுவதும் பரவலான மற்றும் சீரான தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவதுதான் எங்களுடைய இலக்கு, இந்த அரசினுடைய இலட்சியம்.

தென் மாவட்டங்களைத் தொழில்மயமாக்கிட, இந்த அரசு மிகப்பெரும் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. தமிழ்நாட்டின், தென் மாவட்டங்களாக இருக்கக்கூடிய தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர், இராமநாதபுரம், தேனி, சிவகங்கை ஆகிய மாவட்டங்களில், புதிய தொழிற்பூங்காக்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தென் மாவட்டங்களில், தொழில்முனைவோரை ஊக்குவிக்கக்கூடிய வகையில், தென்மாவட்டத் தொழிற் பூங்காக்களில் அமைக்கப்படும் தொழிற்சாலைகளுக்குச் சிறப்புச் சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன:

- ஊக்கத்தொகை அளிக்க நிர்ணயம் செய்திடும் முதலீட்டு வரம்பு குறைவாக நிருணயிக்கப்பட்டுள்ளது.
- தொழில் பூங்காக்கள் மற்றும் வளர்ச்சி மையங்களில், 50 விழுக்காடு மானியத்தோடு நிலம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.
- முத்திரைக் கட்டணத்திலிருந்து 100 விழுக்காடு விலக்கு அளிக்கப்படுகிறது.
- மேலும், ஆம்வே (Amway), போஷ் (Bosch), ஏடிசி டயர்ஸ் (ATC Tyres), பிரிட்டானியா (Brittannia), ஐடிசி லிமிடெட் (ITC Limited), சின்டெல் (Syntel) போன்ற நிறுவனங்கள், ஏற்கெனவே தென் மாவட்டங்களில் தங்கள் தொழிலகங்களை நிறுவி, தங்கள் வணிக உற்பத்தியினையும் தொடங்கி உள்ளன.

இத்தோடு சேர்த்து, தென் மாவட்டங்களுக்கென்று மேலும் பல சிறப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தூத்துக்குடி சிப்காட் தொழில் வளாகத்திலுள்ள தொழிற்சாலைகள் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளின் நீர் தேவையைப் பூர்த்தி

செய்யும் வகையில், நாளொன்றிற்கு 30 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்புத் திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் ஆலை அமைக்க சிப்காட் நிறுவனம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- தேனி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் தலா 150 ஏக்கர் பரப்பளவில் உணவுப் பூங்காக்கள் நிறுவிட சிப்காட் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கான, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கக்கூடிய பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

- விருதுநகர் மாவட்டம், இ.குமாரலிங்கபுரம், இ.முத்துலிங்கபுரம், துலுக்கப்பட்டி கிராமங்களில், ஒன்றிய அரசின் ஜவுளி அமைச்சகத்தின் மித்ரா (மெகா ஒருங்கிணைந்த ஜவுளிப் பகுதிகள் மற்றும் ஆடைப் பூங்காக்கள்) திட்டத்தின்கீழ் ஒரு மெகா ஜவுளிப் பூங்காவைச் சுமார் 1,000 ஏக்கர் பரப்பளவில், சிப்காட் நிறுவனம் அமைக்க உள்ளது. இதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கக்கூடிய பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

ஒவ்வொரு துறையையும் ஆய்வு செய்து, அத்துறைகளுக்குத் தேவையான திட்டங்களைத் தீட்டி, அவற்றைச் செயல்படுத்துவதற்கான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை, இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. எதிர்கால மாற்றங்களை எதிர்கொள்ளக்கூடிய வகையில், புதிய மற்றும் நவீன உட்கட்டமைப்பு முதலீடுகளுடன் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்திடத் தேவையான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம்.

அத்தகையத் திட்டங்களில் ஒன்றுதான் இன்று தொடங்கி வைக்கக்கூடிய திட்டமாகும்.

2021–2022ஆம் நிதி ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட உரையில், தமிழ்நாட்டில் ரூ.4,500 கோடி முதலீட்டை ஈர்க்கும் விதமாகவும், 3.5 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையிலும், அறைகலன்களுக்கான சர்வதேசப் பூங்கா அமைக்கப்படும் என்று நாம் அறிவித்திருந்தோம். அதை நடைமுறைப்படுத்தும் விதமாக இந்தச் சர்வதேச அறைகலன் பூங்காவிற்கு இன்றைக்கு அடிக்கல் நாட்டி வைப்பதில் நான் மிகுந்த பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நாங்கள் சொல்வதைச் செய்வோம்; செய்வதைத்தான் சொல்வோம்!

இன்றைய காலச் சூழலுக்கு இது மிகமிக அவசியமான திட்டம் ஆகும்.

உலக அளவில் அறைகலன் / மரச்சாமான்கள் சந்தையானது 2020–2025ஆம் ஆண்டிற்குள் 750–800 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்குப் பரந்து விரிந்திருக்கும் என்று வல்லுநர்களால் கணக்கிடப்படுகிறது. இந்தத் தொழிலில் சீனா, வியட்நாம் போன்ற நாடுகள் முன்னணியில் இருக்கின்றன. ஆனால் இந்தியாவின் பங்களிப்பு குறைவாக உள்ளது. இந்தக் குறையினைப் போக்கும் விதத்தில், தமிழ்நாடு அரசு இந்தப் பூங்காவை அமைத்துள்ளது.

உலகத்தரத்திற்கு இணையாக ஒரு சர்வதேச அறைகலன் பூங்காவை உருவாக்கிடவும், தமிழ்நாடு அரசு முன்வந்துள்ளது. இதற்காக, தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து 13 கிலோ மீட்டர் தொலைவில் தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி அமைந்துள்ள 1,156 ஏக்கர் நிலப்பரப்பு அடையாளம் காணப்பட்டுள்ளது.

அறைகலன்கள் தயாரிப்பில் 70 முதல் 80 விழுக்காடு மூலப்பொருள் தேவையை இந்தப் பூங்காவிலேயே பூர்த்தி செய்திடும் வகையில் முழுமையான சூழல் அமைப்பு இந்த சர்வதேச அறைகலன் பூங்காவில் உருவாக்கப்படவுள்ளது. சுருங்கச் சொன்னால், உலக அளவில், அறைகலன் உற்பத்தியில், தமிழ்நாட்டின் போட்டியிடும் திறன் வெகுவாக அதிகரிக்கும்.

அதற்கென 600க்கும் மேற்பட்ட முதலீட்டாளர்களை அணுகி, விநியோகச் சங்கிலியில் பெரும் பங்கு வகிக்கும் 25க்கும் மேற்பட்ட நிறுவனங்களுடன் நூற்றுக்கணக்கான உரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக, பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த ஒரு மிகப்பெரிய நிறுவனம் ரூ.430 கோடி முதலீட்டில், தங்களது கதவுகள் மற்றும் ஜன்னல்கள் உற்பத்தி ஆலையை இந்தப் பூங்காவில் நிறுவிட முன்வந்துள்ளது.

அதேபோல் பல வர்த்தக நிறுவனங்கள் ரூ.300 முதல் ரூ.750 கோடி முதலீட்டில் தங்களது திட்டங்களைத் துவக்கிடவும் ஆர்வத்தைத் தெரிவித்துள்ளது. இது உள்ளபடியே பெருமை அளிக்கக்கூடிய செய்தி. அவற்றுள் ‘ஹெட்டிக்’, ‘டெசனின்க்’ ஆகிய 2 நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும், தொழில் நிறுவனங்களை ஈர்க்கும் அரசாகவும் நமது அரசு செயல்பட்டு வருகிறது. தேர்தலுக்கு முன்பாக நாங்கள் சொன்னோம் ‘தமிழகம் மீட்போம்’ என்று நான் என்னுடைய பிரசாரத்தில் தொடர்ந்து சொன்னேன். இப்போது அந்தப் பணியில்தான் என்னை முழுமூச்சாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறேன். அனைத்துத் துறைகளிலும் ‘தமிழ்நாடு நம்பர் 1’ என்ற நிலையை நிச்சயமாக விரைவில் அடையப் போகிறது என்று என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவிக்கிற அதே நேரத்தில் இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். நிச்சயமாக இந்த நிகழ்ச்சி மிகப்பெரிய வெற்றியைப் பெறப்போகிறது விரைவில். அதற்கு ஓர் அடையாளம் சொல்ல வேண்டும் என்று சொன்னால், எப்பொழுதுமே எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும், அந்த நிகழ்ச்சிக்கு ஒரு minute to minute programme தயார் செய்வார்கள். Programme schedule ஒன்று தயார் செய்து என்னிடத்தில் ஒரு நகலைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சி 10 மணிக்குத் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் நாம் இந்த நிகழ்ச்சியை 9.45க்கே தொடங்கிவிட்டோம். ஆக நிகழ்ச்சியை அறிவித்ததற்கு முன்னாடியே நடத்தத் தொடங்கிவிட்டோம். நான் பேசுகிற நேரத்தையும் கூட கவனித்துப் பார்த்தேன். 10.44க்கு ஆரம்பித்து 10.56க்கு முடிக்க வேண்டும் என்று. ஆனால் நான் பேசத் தொடங்கியது 10.30க்கே பேச ஆரம்பித்து விட்டேன். ஆக எல்லாவற்றிலும் முன்கூட்டியே போய்க்கொண்டிருக்கிறோம். ஆகவே, இந்த fast, இந்த முன்கூட்டியே இருக்கக்கூடிய இந்த நிலை, நாம் ஈடுபட்டிருக்கக்கூடிய ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கக்கூடிய இந்த நிலையில் இருந்து வெற்றி பெறவேண்டும், வெற்றி பெறவேண்டும் என்று அன்போடு கேட்டு உங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒரு முறை என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

# தூத்துக்குடி மாவட்டத்தில்
# சீரமைப்புப் பணிகள்





**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 07.03.2022 அன்று தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழையால் பாதிக்கப்பட்ட சாலைகளைச் சீரமைத்திடும் வகையில், பிரையண்ட் நகர், மேற்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் ரூ.19.45 கோடி மதிப்பீட்டிலும், சுப்பையாபுரம், மாசிலாமணிபுரம் தெருக்களில் ரூ.14.50 கோடி மதிப்பீட்டிலும், மேக் கார்டன், குமரன் நகர், சத்தியா நகர், அம்பேத்கர் நகர் மற்றும் சுந்தரவேல்புரம் பகுதிகளில் ரூ.11.50 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

வடகிழக்குப் பருவமழையால் தூத்துக்குடி மாவட்டத்தில் பாதிக்கப்பட்டப் பகுதிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 02.12.2021 அன்று நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்து, சீரமைப்புப் பணிகளை விரைவாக மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார்.

அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தூத்துக்குடி மாவட்டம், பிரையண்ட் நகரில் வடகிழக்குப் பருவமழையால் பாதிக்கப்பட்ட சாலைகளைச் சீரமைக்கும் வகையில், தூத்துக்குடி சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ், ரூ.9.25 கோடி மதிப்பீட்டில், பிரையண்ட் நகர் மேற்கு பிரதான சாலையின் மேற்குப் பகுதி வடிகால் மற்றும் பிரையண்ட் நகர் மேற்குப் பகுதி தெருக்கள் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் இணைப்பு வடிகால் அமைக்கும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். வடிகால் அமைக்கும் பணியில் மொத்தம் 6.237 கிலோ மீட்டரில், 3.560 கிலோ மீட்டர் பணிகள் நிறைவடைந்துள்ளது.

தொடர்ந்து, ரூ.10.20 கோடி மதிப்பீட்டில், பிரையண்ட் நகர் மேற்கு பிரதான சாலையின் கிழக்குப் பகுதி பிரதான வடிகால் மற்றும் சிதம்பர நகர், பிரையண்ட் நகர் மத்திய பகுதி தெருக்கள் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் கட்டுமானப் பணிகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களிடம் கேட்டறிந்தார். வடிகால் அமைக்கும் பணியில் மொத்தம் 8.208 கிலோ மீட்டரில், 5.950 கிலோ மீட்டர் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளது.

மேலும், ரூ.14.50 கோடி மதிப்பீட்டில், சுப்பையாபுரம் முதல் மாநில நெடுஞ்சாலை–176 வரையிலான பிரதான வடிகால் மற்றும் சுப்பையாபுரம், மாசிலாமணிபுரம் தெருக்கள் முழுவதும் நடைபெற்று வரும் பிரதான வடிகால் அமைக்கும் பணிகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களிடம் கேட்டறிந்தார். வடிகால்

அமைக்கும் பணியில் மொத்தம் 8.460 கிலோ மீட்டரில், 2.600 கிலோ மீட்டர் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன.

அதனைத் தொடர்ந்து, ரூ.11.50 கோடி மதிப்பீட்டில், மேக் கார்டன், குமரன் நகர், சத்தியா நகர், அம்பேத்கர் நகர், சுந்தரவேல்புரம் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இப்பணியில் மொத்தம் 8.332 கிலோ மீட்டரில், 4.400 கிலோ மீட்டர் பணிகள் நிறைவடைந்துள்ளன.

மீதமுள்ள பணிகளை மழைக்காலத்திற்கு முன்பாக விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதோடு, சாலைப் பணிகள் நடைபெறும்போது தொடர்ச்சியாக ஆய்வு மேற்கொண்டு சாலையின் தரத்தினை உறுதி செய்யுமாறு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, அப்பகுதி மக்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகளைச் சீரமைத்திட விரைந்து நடவடிக்கை மேற்கொண்டதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, கோரிக்கை மனுக்களையும் அளித்தார்கள்.








மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 07.03.2022 அன்று, கன்னியாகுமரியில் வடகிழக்குப் பருவ மழையால் பாதிக்கப்பட்டப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சீரமைப்புப் பணிகளைப் பார்வையிட்டு, மதுரை விமான நிலையம் செல்லும் வழியில், ஆரல்வாய்மொழி பகுதியில் உள்ள தேநீர்க் கடையில் தேநீர் அருந்தினார்.



## கன்னியாகுமரி மாவட்டத்தில்

# சீரமைப்புப் பணிகள்



**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 07.03.2022 அன்று, கடந்த ஆண்டு பெய்த வடகிழக்குப் பருவமழையால் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்டப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட சாலைகளை ரூ.26 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்ட பணிகள், பேயங்குழி இரட்டைக்கரை கால்வாயிலிருந்து தண்ணீர் ஏற்றுவதற்காக ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் ராட்சத இரும்புக் குழாய்கள் அமைக்கப்பட்ட பணிகள், குமாரகோவில் – பத்மநாபபுரம் புத்தனார் கால்வாய் அணைக்கட்டுப் பகுதியில் உடைப்பு ஏற்பட்ட இடங்களில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட சீரமைப்புப் பணிகள் ஆகியவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

வடகிழக்குப் பருவமழையால் கன்னியாகுமரி மாவட்டத்தில் பாதிக்கப்பட்டப் பகுதிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கடந்த 15.11.2021 அன்று நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்து, சீரமைப்புப் பணிகளை விரைவாக மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார்.

அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகளைச் சீரமைப்பதற்காகக் குடிநீர் அபிவிருத்தி திட்டம் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தின்கீழ், ரூ.10 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட 12.59 கி.மீ. நீளத்திற்கான 19 சாலைப் பணிகள், மூலதனமானிய நிதி திட்டத்தின்கீழ், ரூ.16 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட 40 சாலைப் பணிகள் மற்றும் 25 சிப்பங்கள் மூலம் சாலை அமைக்கும் பணிகள் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

அதனைத் தொடர்ந்து, பேயங்குழி, இரட்டைக்கரை கால்வாயில் உடைப்பு ஏற்பட்டதன் காரணமாகக் குளங்களில் நீர் அளவு மிகவும் குறைந்து, விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மிகவும் பாதிப்படைந்த நிலையில், தமிழ்நாடு மாநிலப் பேரிடர் நிதியிலிருந்து ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் 3 ராட்சத இரும்புக் குழாய்கள் வழியாகத் தண்ணீர் கொண்டு செல்வதற்கான பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் முடிவடைந்து பொதுமக்கள், விவசாயிகள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டதை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

பின்னர், குமாரகோவில் – பத்மநாபபுரம் புத்தனார் கால்வாய் அணைக்கட்டு பகுதியில் உடைப்பு ஏற்பட்டுள்ள L.S 21/170 km, L.S 22/600 km ஆகிய பகுதிகளில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டுப் பொதுமக்கள், விவசாயிகள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டதை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.








# 2022ஆம் ஆண்டிற்கான "அவ்வையார் விருது"

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 08.03.2022 அன்று தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் பெண்கள், குழந்தைகளுக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி, 2022ஆம் ஆண்டிற்கான அவ்வையார் விருதினைத் திருமதி கிரிஜா குமார்பாபு அவர்களுக்கு வழங்கிச் சிறப்பித்தார்.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மூலம் பெண்களுக்கான சேவையில் சிறந்து விளங்கும் பெண்மணிகளைக் கௌரவிக்கும் வகையில் ''அவ்வையார் விருது'' தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது மகளிர் அதிகாரம், மதநல்லிணக்கம், மொழி, கலை, அறிவியல், ஊடகவியல், நிருவாகம் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கி, சேவை மனப்பான்மையுடன் தொண்டாற்றியவர்களுக்கு அவர்களின் சேவையைப் பாராட்டி 8 கிராம் தங்கப்பதக்கமும், ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலையும், சால்வையும், பாராட்டுப் பத்திரமும் அளிக்கப்படுகின்றன.

அவ்வகையில், 2022ஆம் ஆண்டிற்கான ''அவ்வையார் விருது'' திருமதி கிரிஜா குமார்பாபு அவர்களுக்கு, பெண்கள், குழந்தைகளுக்கு அவர் ஆற்றிய சேவையைப் பாராட்டித் தமிழ்நாடு அரசால் வழங்கப்படுகிறது. அவர் இந்தியக் குழந்தைகள் நலச்சங்கம், இளைஞர் நீதிக் குழுமம், பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தலைத் தடுத்தல் குழு மற்றும் மருத்துவ நெறிமுறை ஆலோசனைக்குழு ஆகிய குழுக்களில் உறுப்பினராகப் பணியாற்றிச் செய்த சேவைகளுக்கும், யுனிசெப் நிறுவனத்துடன் இணைந்து ஆற்றிய பணிகளுக்கும், பயிற்சியாளராகப் பல சமூகப் பணியாளர்களை உருவாக்கிய பெருமையையும் பாராட்டி இவ்விருது வழங்கப்படுகிறது.

**மார்ச் 8 : உலக மகளிர் தினம்**



## தமிழ்ப் பெரும்புலவர் அவ்வைப் பெருமாட்டியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை

*உலக மகளிர் தினத்தை முன்னிட்டு, 08.03.2022 அன்று, சென்னை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள தமிழ்ப் பெரும்புலவர் அவ்வைப் பெருமாட்டியாரின் திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அன்னாரது திருவுருவப்படத்திற்கு மாண்புமிகு சமூக நலன் – மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி என். கயல்விழி செல்வராஜ், மாண்புமிகு சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சென்னை மாநகராட்சி துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் திரு.மகேசன் காசிராஜன் இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் இ.ஆ.ப., ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.*



# குடியரசு திருநாள் விருதாளர்களுக்கு விருதுகள்...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 08.03.2022 அன்று தலைமைச் செயலகத்தில், குடியரசு திருநாள் விழாவில் கலந்துகொள்ள இயலாத வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கம், திரு. நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தித் திறனுக்கான விருது, காந்தியடிகள் காவலர் பதக்கம் ஆகிய பதக்கங்கள் / விருதிற்குத் தேர்வு செய்யப்பட்டவர்களுக்குப் பதக்கங்களையும், விருதினையும் வழங்கிச் சிறப்பித்தார்.

ஒவ்வொரு ஆண்டும் இந்தியக் குடியரசு திருநாள் கொண்டாட்டத்தின்போது, சென்னை, மெரினா கடற்கரையில் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றிவைத்துச் சிறப்பிப்பார். இவ்விழாவில், வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கம், காந்தியடிகள் காவலர் பதக்கம், திரு.நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தித் திறனுக்கான விருது, மத நல்லிணக்கத்திற்கான கோட்டை அமீர் விருது போன்ற விருதுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கிச் சிறப்பிப்பார்.

இந்த ஆண்டு நடந்து முடிந்த குடியரசு தின விழாவில், கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக விழாவில் கலந்துகொள்ள இயலாத விருதாளர்களான, சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. வீ.முத்துகிருஷ்ணன், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த செல்வன் ச.லோகித், கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த மருத்துவர் கே.அசோகன், திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி சி.சுதா (எ) பேச்சியம்மாள் ஆகியோருக்கு வீர தீரச் செயலுக்கான அண்ணா பதக்கத்திற்கான சான்றிதழ், தலா 1 இலட்சம் ரூபாய்க்கான காசோலை, பதக்கம் ஆகியவற்றை வழங்கிச் சிறப்பித்தார்.

மேலும், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. செ.ராமசாமி அவர்களுக்குத் திரு.சி.நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தித் திறனுக்கான விருதிற்கான 5 இலட்சம் ரூபாய்க்கான காசோலை மற்றும் பதக்கம் ஆகியவற்றையும்;

வேலூர் மண்டல மத்திய நுண்ணறிவுப் பிரிவுக் காவல் ஆய்வாளர் திரு. மா.குமார் அவர்களுக்கும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் திரு. ச.சிதம்பரம் ஆகியோருக்குக் காந்தியடிகள் காவலர் பதக்கத்திற்கான சான்றிதழ், தலா 40 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை, பதக்கங்களையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்.

## செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வு...




மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தலைமையில், தஞ்சாவூர் மண்டலத்திற்குட்பட்ட மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் 08.03.2022 அன்று சென்னையில் நடைபெற்றது.

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் தனது தலைமையுரையில், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளைப் பொதுமக்களிடையே கொண்டு செல்லும் பாலமாகச் செயல்பட்டுச் சிறப்பாகப் பணி மேற்கொள்ள வேண்டும் எனவும்,

அனைத்துத்துறைகள் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்கள் அரசின் சாதனைகள் குறித்து மக்கள் முழு அளவில் அறிந்துகொள்ள தமிழரசு இதழ் மிகவும் பயனுள்ளதாக உள்ளது. எனவே, தமிழரசு சந்தா இலக்கினை முழுமையாக எய்திட வேண்டுமெனவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நிகழ்ச்சிகள், விழாக்கள் தொடர்பான செய்திகள், புகைப்படங்கள், நேரலைக் காட்சிகள் மற்றும் அரசாணைகள் இவைகளை அந்தந்த மாவட்டங்களில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களின் சமூக ஊடகக் கணக்குகளில் பதிவேற்றம் செய்து பொதுமக்கள் அதிகளவில் திட்டங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மாவட்டங்களில் உள்ள மணிமண்டபங்கள், சிலைகள் நல்ல முறையில் பராமரித்திட வேண்டும். நினைவகங்கள் குறித்துச் சாலைகளில் முன்கூட்டியே பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் பெயர்ப் பலகைகள் அமைக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.




# "பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருது"

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 08.03.2022 அன்று தலைமைச் செயலகத்தில், 2020–2021ஆம் ஆண்டிற்கான பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருதிற்குத் தேர்வு செய்யப்பட்ட திரு.செ.மூர்த்தி, திரு.கோ.பொன்னு புதியவன், திருமதி பி.லட்சுமி தேவி ஆகியோருக்கு விருதுகளையும், பரிசுத் தொகைகளையும் வழங்கிச் சிறப்பித்தார்.

உழவர்களின் நலன் காத்திட வேளாண்மைத் துறையினை, வேளாண்மை – உழவர் நலத்துறை எனப் பெயர் மாற்றம் செய்து, உழவர்களின் வருவாயைப் பெருக்கிட வேளாண்மை – உழவர் நலத்துறைக்கு எனத் தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்து, தமிழகத்தில் உள்ள வேளாண் பெருங்குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

தற்போது நடைமுறையில் பயன்படுத்தும் நெல் இரகங்களில் அத்தியாவசியத் தாதுக்கள் போதுமான அளவு கிடைக்காததால், விவசாயிகள் மருத்துவக்குணம் அதிகம் நிறைந்த பாரம்பரிய நெல் இரகங்களை மீட்டெடுப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

பாரம்பரிய நெல் இரகங்களைப் பாதுகாக்கும் பொருட்டு, பாரம்பரிய நெல் இரகங்களைப் பாதுகாத்துப் பயிரிடும் விவசாயிகளை ஆதரவளித்து ஊக்குவித்திடும் விதமாக "பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருது" தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது.

அந்த வகையில், 2020–2021ஆம் ஆண்டிற்கான "பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருது", கருப்புக் கவுணி இரகம் சாகுபடி செய்து எக்டருக்கு 10,672.5 கிலோ அதிக மகசூல் பெற்று மாநில அளவில் முதல் இடம் பெற்ற நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த திரு.செ.மூர்த்தி அவர்களுக்கு விருதுடன் பரிசுத்தொகையாக ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலையும், வாசனைச் சீரகச் சம்பா இரகம் சாகுபடி செய்து எக்டருக்கு 10,200 கிலோ மகசூல் பெற்று இரண்டாம் இடம் பெற்ற திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த திரு.கோ.பொன்னு புதியவன் அவர்களுக்கு விருதுடன் பரிசுத்தொகை 75 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையும், ஆத்தூர் கிச்சிலி சம்பாச் சாகுபடி செய்து எக்டருக்கு 10,024.875 கிலோ மகசூல் பெற்று மூன்றாவது இடம் பெற்ற திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி பி.லட்சுமிதேவி அவர்களுக்கு விருதுடன் 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்.

மேலும், வேளாண்மை – உழவர் நலத்துறையில் காலியாக உள்ள 17 தோட்டக்கலை உதவி இயக்குநர், 162 தோட்டக்கலை அலுவலர், 361 வேளாண்மை அலுவலர் ஆகிய பணியிடங்களுக்குத் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாகத் தேர்வு செய்யப்பட்டவர்களுக்குப் பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 6 நபர்களுக்குப் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.






# 9,831 இரண்டாம் நிலைக் காவலர்கள் பணி நியமனம்

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 08.03.2022 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக 9,831 இரண்டாம் நிலைக் காவலர்கள், 1,200 தீயணைப்புக் காவலர்கள், 119 சிறைகள், சீர்திருத்தப் பணிகள் துறை காவலர்கள் ஆகிய பணியிடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்டவர்களுக்குப் பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்குப் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

காவல்துறை என்பது குற்றங்களைத் தடுக்கும் துறையாகவும், தண்டனை பெற்றுத்தரும் துறையாகவும் மட்டும் அல்லாமல், குற்றங்கள் நடக்காத சூழ்நிலையை உருவாக்கும் துறையாகச் செயல்பட வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மாநிலத்தின், அமைதியைப் பேணிப் பாதுகாத்து, சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் முக்கியப் பணிகளை ஆற்றி வரும் காவல்துறையின் பணிகள் சிறக்க பல்வேறு திட்டங்களைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

7.5 கோடி மக்கள் வாழும் தமிழ்நாட்டில் 1,13,000 காவல்துறை அலுவலர்களும், ஆளிநர்களும் பணிபுரிந்து வருகிறார்கள். மாநிலத்தில் சட்டம் ஒழுங்கைச் சிறப்பாகப் பேணிப் பாதுகாத்திட காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை ஆகிய துறைகளில் காலியாகவுள்ள பணியிடங்களைத் தமிழ்நாடு அரசு விரைந்து நிரப்பி வருகிறது.

அந்த வகையில், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக 9,831 இரண்டாம் நிலைக் காவலர்கள், 1,200 தீயணைப்புக் காவலர்கள், 119 சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை காவலர்கள் ஆகிய பணியிடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த 9,831 இரண்டாம் நிலைக் காவலர்களில், 6,140 நபர்கள் சிறப்புக் காவல் படையிலும், 3,691 நபர்கள் ஆயுதப்படையிலும் தேர்வாகியுள்ளனர். இதில், 2,948 பெண் காவலர்கள், 3 திருநங்கைகள் ஆகியோரும் அடங்குவர். மேலும், 119 சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் தேர்வாகியுள்ளவர்களில் 12 பெண் சிறைக்காவலர்களும் அடங்குவர். காவல்துறையின் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படுவதால், துறையின் புலனாய்வுத் திறன் மற்றும் செயல்திறன் மேலும் சிறப்பாக மேம்படும். ●



# செயின்ட்-கோபைன் - சிப்காட் நகர்ப்புர வனம்




**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 09.03.2022 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூரில், செயின்ட்–கோபைன் நிறுவன வளாகத்தில் ரூ.500 கோடி மதிப்பீட்டில் 200 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் செயின்ட்–கோபைன் நிறுவனத்தால் நிறுவப்பட்டுள்ள மிதவை கண்ணாடிப் பிரிவு (Float Glass), ஒருங்கிணைந்த ஜன்னல் பிரிவு மற்றும் செயின்ட் கோபைன் – சிப்காட் நகர்ப்புர வனம் ஆகியவற்றைத் தொடங்கிவைத்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1998ஆம் ஆண்டு ஸ்ரீபெரும்புதூர் தொழில் வளாகத்தில் செயின்ட்–கோபைன் நிறுவனத்திற்கு அடிக்கல் நாட்டி, செப்டம்பர் 2000ஆம் ஆண்டு உற்பத்தியைத் தொடங்கி வைத்தார். ஸ்ரீபெரும்புதூரில் 177 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்நிறுவனம், ரூ.3,750 கோடிக்கும் மேலாக முதலீடு செய்துள்ளது. ஸ்ரீபெரும்புதூரில் அமைந்துள்ள இவ்வளாகம், இந்நிறுவனத்தால் அதிகபட்ச முதலீடு மேற்கொள்ளப்பட்ட ஆலையாகத் திகழ்கிறது. தமிழ்நாடு முழுவதும் இந்நிறுவனம் சுமார் ரூ.4,700 கோடி முதலீட்டினைச் செய்து, நேரடியாக 2,000 நபர்களுக்கும், மறைமுகமாக 2,500 நபர்களுக்கும் வேலைவாய்ப்பை வழங்கி வருகிறது.

இந்த வளாகத்தில், கண்ணாடி, டின்டட் கண்ணாடி, முகம் பார்க்கும் கண்ணாடி, சூரிய ஆற்றல் கண்ணாடி, லாக்வெர்டு கண்ணாடி, இன்சுலேட்டட் உறுதியான கண்ணாடி, மேற்பூச்சு உள்ள கண்ணாடி, பாதுகாப்புக் கண்ணாடி, தீப்பிடிக்காத, குண்டு துளைக்காத, வெடிகுண்டு தாக்குதலைச் சமாளிக்கும் வகையிலான கண்ணாடிகள் தயாரிக்கப்படுகின்றன. மதிப்பு கூட்டப்பட்ட 90 சதவிகித கண்ணாடிகள் இந்த வளாகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது.

**மிதவை கண்ணாடிப் பிரிவு**

இந்த மிதவைக் கண்ணாடிப் பிரிவு அதிகபட்ச உற்பத்தி, நவீனத் தொழில்நுட்பம், பிரத்தியேகமான வடிவமைப்பு 4.0 ஆகிய சிறப்புத் தன்மைகளை உள்ளடக்கியது. நவீனக் கட்டமைப்புகளுக்கேற்ற கண்ணாடிகள், ஆட்டோமொபைல் துறைக்கேற்ற கண்ணாடிகள் மற்றும் சூரிய மின் உற்பத்திக்கான கண்ணாடிகளைத் தயாரிக்கிறது.

**ஒருங்கிணைந்த ஜன்னல் பிரிவு**

இந்த ஒருங்கிணைந்த ஜன்னல் பிரிவானது முழுவதும் டிஜிட்டல் மற்றும் தானியங்கி முறையில் செயல்படும். 10,000 சதுரமீட்டர் பரப்பளவில் ஆண்டுக்கு 1 இலட்சம் ஜன்னல்களை இந்த ஆண்டு இறுதிக்குள் உற்பத்தி செய்யும் திறன் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது. இது முழுவதும் சிறந்த புத்தாக்க, ஆராய்ச்சி மற்றும் சோதனைக்குட்படுத்தப்பட்ட யுபிவிசி ஜன்னல் சார்ந்த பொருள்கள், குறிப்பாக எதிரொலி கேட்காத, சூரிய மற்றும் வெப்பம் கடத்தாத பாதுகாப்பானவையாகத் தயாரிக்கப்படுகிறது.

**செயின்ட் – கோபைன் சிப்காட் நகர்ப்புர வனம்**

சுமார் 3 இலட்சம் சதுரடி பரப்பளவில் ஏறக்குறைய 60,000 மரங்கள் கொண்டதாக இவ்வனம் உருவாக்கப்பட்டுள்ளது. இது அரசு மற்றும் தனியார் பங்களிப்பில் மேற்கொள்ளப்பட்ட திட்டமாகும். இத்திட்டம் தமிழ்நாடு அரசின் பசுமை இலக்கை எட்டுவதற்கும், மாநிலத்தின் பசுமைப் பகுதி அளவை 33 சதவிகிதம் உயர்த்தவும் உதவுகிறது.






# "சமத்துவ சமூகமே - நமது அரசினுடைய குறிக்கோள்"

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை மற்றும் வனத்துறை அலுவலர்கள் மாநாட்டின் முதல் நாள் கூட்டம், **10.03.2022** அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இம்மாநாட்டில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

முதலில், மாநாட்டிற்கு வருகை புரிந்தோரைத் தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார்.



பின்னர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று ஆற்றிய தொடக்க உரை:–

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, தலைமைச் செயலாளர் அவர்களே, காவல்துறைத் தலைமை இயக்குநர் அவர்களே, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்களே, அரசுத் துறைச் செயலாளர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்களே, மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்களே, மாவட்ட வனத்துறை அதிகாரிகளே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு இந்தப் புதிய அரசு அமைந்த பிறகு நடைபெறக்கூடிய முதலாவது மாவட்ட ஆட்சியர், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள், மாவட்ட வனத்துறை அதிகாரிகள் மாநாடு, இந்த மாநாடு. எனவே, உங்கள் அனைவரையும் ஒருசேர இந்த மாநாட்டின் மூலமாகச் சந்திப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்றுப் பத்து மாதங்கள் ஆகியிருக்கின்றன. இரண்டு கொரோனா அலைகளை வெற்றிகரமாக எதிர்கொண்டு அதற்கு முற்றுப்புள்ளியும் வைத்திருக்கிறோம்! அதற்கு உங்களுடைய ஒத்துழைப்புதான் முக்கியமான காரணமாக அமைந்தது. ஊரடங்கைச் செயல்படுத்துவது; மக்களின் வாழ்வாதாரமும் அடிப்படைத் தேவைகளும் பாதிக்காத வகையிலே, அரசு எடுத்த நடவடிக்கைகளை, மாவட்ட நிருவாகம் சிறப்பாகச் செயல்படுத்தியிருக்கிறது. தடுப்பூசி செலுத்துவது எனும் ‘மாபெரும் மக்கள் இயக்கம்’ வெற்றி காணக்கூடிய அளவிலே உழைத்தது நீங்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறபோது, நீங்கள் அளித்த உழைப்பு மெச்சத்தக்கது, பாராட்டுக்குரியது. வரலாறு காணாத கனமழையால் பல்வேறு மாவட்டங்களில் வெள்ளப் பாதிப்புகள் ஏற்பட்டபோது, அந்தந்த மாவட்ட நிருவாகத்தைச் சார்ந்தவர்களும் இரவு பகல் பாராது பணியாற்றியிருக்கிறீர்கள். இவற்றுக்கெல்லாம் பாராட்டுக்களை மனதாரத் தெரிவித்துக்கொள்கிறேன். நாங்கள் பொறுப்பேற்றபோது மாநில நிருவாகம் எந்த நிலையிலிருந்தது என்பது உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும்.

சவால்கள் ஒருபக்கம் இருந்தாலும் இன்னொரு பக்கத்தில் மாபெரும் பல சாதனைகளையும் நாம் செய்திருக்கிறோம். நேர்மையான, வெளிப்படையான, மக்கள் விரும்புகின்ற அரசு நிருவாகத்தை நாம் அனைவரும் இணைந்து அளித்து வருகிறோம். நீங்களும் இந்தப் பணியிலே பங்குதாரர்களாக இருந்திருக்கிறீர்கள் என்ற முறையில், என்னுடைய பாராட்டுக்களை மீண்டும் மீண்டும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஐந்நூற்றுக்கும் அதிகமான வாக்குறுதிகளைப் பொதுமக்களுக்கு நாங்கள் வழங்கியிருக்கிறோம். அவற்றுள் 70 விழுக்காட்டிற்கும் அதிகமான வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளில் தற்போது ஈடுபட்டு இருக்கிறோம்.

‘ஸ்டாலினின் 7 உறுதிமொழிகள்’ என்று ஏழு தொலைநோக்குக் குறிக்கோள்களை அறிவித்தோம். அவற்றுக்கான செயல்திட்டங்களையும் வகுத்து நிறைவேற்றி வருகிறோம். அந்தக் குறிக்கோள்களை அடைய மாநிலப் பொருளாதார ஆலோசனைக் குழுவை அமைத்தோம்; மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவை உருவாக்கினோம்; நிதிநுட்பக் கொள்கையை வகுத்தோம்; ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கையை உருவாக்கினோம்; தமிழ்நாடு மாநிலக் குழந்தைகளுக்கான கொள்கையை வெளியிட்டோம்; வேளாண்மைக்கு எனத் தனி நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்தோம்; கொள்கை அரசையும், மக்கள் நலச் சேவை அரசையும் ஒருசேர நடத்த வேண்டுமென்ற இலட்சியத்தை வகுத்தோம்.

இப்படி, இந்த ‘திராவிட மாடல்’ அரசின் முன்னுரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அரசு நிருவாகச் சக்கரத்தைச் சரியான திசையில், மக்கள் பயனடையக்கூடிய திசையிலே திருப்பினோம்.

இந்தியாவுக்கே முன்னோடித் திட்டங்களாக விளங்கக்கூடிய

★ ‘மக்களைத் தேடி மருத்துவம்’

★ ‘இல்லம் தேடிக் கல்வி’

★ ‘இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48’

இப்படி மக்கள் நலனுக்காக நாம் தீட்டியுள்ள அனைத்துத் திட்டங்களும் கடைக்கோடியில் வாழக்கூடிய மனிதரையும் சென்றடையத் தேவையான நடவடிக்கைகளை இந்தப் பத்து மாதங்களில் எடுத்துத் தமிழ்நாட்டின் நிருவாகத்தை இந்திய அளவிலே தலைநிமிரச் செய்திருக்கிறோம். அதற்கு அதிகாரிகளாகிய நீங்கள் அளித்த ஒத்துழைப்புக்கு மீண்டும் பாராட்டுக்களை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோருடன் முதன்முறையாக மாவட்ட வன அதிகாரிகளையும் இணைத்து ஒருங்கிணைந்த மாநாடாக இந்த மாநாடு நடைபெறவிருக்கிறது. இதனுடைய முக்கிய நோக்கம், இன்று உள்ள காலநிலை மாற்றம்! மனித சமுதாயத்தின் வளர்ச்சியில் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை ஆகியவற்றின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்குத்தான் இந்த ஒருங்கிணைந்த மாநாடு நடத்தப்படுகிறது.



இத்தகைய மாற்றம் வர வேண்டும் என்பதற்காகத்தான் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை என்று பெயர் சூட்டியிருக்கிறோம். தமிழ்நாட்டைப் பசுமை நிறைந்த மாநிலமாக மாற்றுவதற்கு இதுவொரு மிக முக்கியமான முன்னெடுப்பு.

தற்போது, நமது தமிழ்நாட்டில் 24 விழுக்காடாக இருக்கும் மொத்த பசுமைப் பரப்பினைக் குறைந்தபட்சம் 33 விழுக்காடாக 10 ஆண்டுக்குள் உயர்த்திட வேண்டும். இந்த இலக்கை அடைய ஒட்டுமொத்த மாவட்ட நிருவாகமும் இணைந்து ஒரே திசையில் பயணிக்க வேண்டும்.

புதிய முதலீடுகள் வருவதற்கும், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைப்பதற்கும், அதன் வழியாக நாம் விரும்பும் ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம் எனும் இலக்கினை அடைந்து மாநிலத்தின் முன்னேற்றத்தை உறுதிசெய்யவும் சட்டம் ஒழுங்கு மிக மிக முக்கியமாகும்! தமிழ்நாட்டில் எப்போதும் சட்டம், ஒழுங்கு சீராக இருப்பதை மாவட்ட நிருவாகம் ஒருங்கிணைந்து கண்காணிக்க வேண்டும்! சட்டம் ஒழுங்கு விஷயத்திலே நான் சமரசம் செய்துகொள்ள மாட்டேன். அதை நீங்கள் அனைவரும் உணர்ந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

குறிப்பாக, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், போதைப் பொருள் குற்றங்கள், பொருளாதாரக் குற்றங்களை இந்த அரசு ஒருபோதும் அனுமதிக்காது. மத நல்லிணக்கத்திற்கு ஊறுவிளைவிக்கக்கூடிய வகையில் யார் செயல்பட்டாலும், அவர்கள் மீது தயவுதாட்சண்யமின்றி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். சமுதாயத்தில் அமைதி நிலவுவதை உறுதிசெய்திடக்கூடிய வகையில் சாதி மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ள பகுதிகளில் மிகுந்த கவனத்துடன் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் காவல்துறை ஈடுபட்டு வருகிறது. நாசக்கார சக்திகள் எந்த வடிவிலும் தலைதூக்க நாம் அனுமதித்துவிடக் கூடாது.

எல்லோரும் ஓரினம், எல்லோரும் ஓர் குலம் என்ற சமத்துவச் சமூகமே நமது அரசினுடைய குறிக்கோள்! கட்டப்பஞ்சாயத்து, அடிதடி, மோசடி, நில அபகரிப்பு போன்ற பொதுமக்களைப் பாதிக்கக்கூடிய செயல்களில் ஈடுபடுவோர் யாராக இருந்தாலும் அவர்களை ஒடுக்குவதில் காவல்துறை எந்தவித பாரபட்சமும் காட்டக்கூடாது. மாநிலத்தில் சட்டம் ஒழுங்கிற்கும் பொது அமைதிக்கும் குந்தகம் விளைவிக்கக்கூடிய சமூகவிரோத சக்திகளை, கூலிப்படைகளை, இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும். நீங்கள் உருவாக்கும் அமைதியில்தான் அனைத்தும் அடங்கி இருக்கிறது.

சாலை விபத்துகள் அதிகம் நடைபெறும் மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு இருப்பது எனக்கு மிகுந்த கவலையை அளிக்கிறது. அவற்றைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

நமது அரசு ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்பே ‘உங்கள் தொகுதியில் ஸ்டாலின்’ முன்னெடுப்பைத் தொடங்கி அதில் பெறப்பட்ட மனுக்களுக்குத் தீர்வுகாண ஆட்சிப் பொறுப்பேற்றதும் தனித் துறையை அதற்காக நான் தொடங்கினேன். தற்போது உருவாக்கப்பட்டுள்ள “உங்கள் தொகுதியில் முதலமைச்சர்” என்ற துறையிலே, தங்களது குறைகளை, தேவைகளை மனுக்களாகக் கொடுத்துள்ள மக்களின் குரல் காது கொடுத்துக் கேட்கப்பட வேண்டும். அந்தத் துறையில் பெறப்பட்ட மனுக்களை ஆய்வு செய்து பொதுவான கோரிக்கைகள் மற்றும் தனிநபர் சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் எனத் தரம் பிரித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உறுதிசெய்திட வேண்டும்.

மாவட்ட அளவில் தீர்க்கப்பட வேண்டிய வட்ட அளவில் முடிக்கப்பட வேண்டிய, வட்டார அளவில் களையப்பட வேண்டிய, சிற்றூர் அளவில் செய்து முடிக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை உரிய காலத்தில் செய்யாமல் இருப்பதன் காரணமாக, பெரும்பாலான மக்கள் கண்ணீரோடும், கவலைகள் நிறைந்த இதயத்தோடும் தீர்வினை எதிர்பார்த்துத் தலைமைச் செயலகத்திற்கு மனுக்களை அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். அவற்றைக் கருணையோடு பரிசீலனை செய்து விரைவாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நமது அரசின் திட்டங்களால் பயன்பெறும் பயனாளிகள் குறித்துத் துறைவாரியாகத் தொகுக்கப்பட வேண்டும்.

அதேபோல், பல தலைமுறைகளுக்குப் பயன்படக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள எனது கனவுத் திட்டமாக இருக்கக்கூடிய ‘நான் முதல்வன்’ திட்டத்தைக் கடந்த மார்ச் 1ஆம் தேதி தொடங்கி வைத்துள்ளேன். மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் தனித்துவத் திறன்களை மேம்படுத்தி அவர்களுக்குச் சிறப்பான எதிர்காலத்தை ஏற்படுத்தித்தரக்கூடிய இந்த உன்னதமானத் திட்டத்தில் உங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் என்று அனைத்து மாவட்ட ஆட்சியர்களையும், காவல்துறைக் கண்காணிப்பாளர்களையும் இந்தத் தருணத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

- மாணவர்கள், இளைஞர்கள் ஆகிய அனைவருக்கும் மாவட்டத்தின் தலைமை வழிகாட்டியாக நீங்கள் திகழ வேண்டும்.



- தமிழ்நாட்டு மாணவர்களை, இளைஞர்களை ஊக்கப்படுத்தினால் அனைவரும் முதலிடத்தை அடைவார்கள்.
- மாவட்ட அளவில் உள்ள அதிகாரிகளின் செயல்பாடுகளை பொறுத்தே தமிழ்நாடு நம்பர் 1 என்ற நிலையை அடையும்.

மாணவர்கள், இளைஞர்கள் ஆகிய அனைவருக்கும் மாவட்டத்தின் தலைமை வழிகாட்டியாக நீங்கள் திகழ வேண்டும் என்கிற என்னுடைய விருப்பத்தை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் இந்த உயரத்தை அடைய யாரோ ஒருவர் தூண்டுதலாக வழிகாட்டியாக அமைந்திருப்பார்கள். அதேபோல், நீங்களும் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு, இளைஞர்களுக்கு வழிகாட்டிகளாக மாறி ஊக்கப்படுத்தினால் அனைவரும் முதலிடத்தை அடைவார்கள்.

தமிழ்நாடும் 'நம்பர்1' என்ற நிலையை அடையும். எனது கனவுத் திட்டத்தை உங்களை நம்பி நான் ஒப்படைக்கிறேன். நமது அரசின் சார்பில் தீட்டப்படக்கூடிய மக்கள் நலன் சார்ந்த திட்டங்களின் வெற்றி என்பது உங்களைப் போன்ற மாவட்ட அளவில் உள்ள அதிகாரிகளின் செயல்பாடுகளைப் பொறுத்தே அமையும் என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமேயில்லை. எனவே, நீங்கள் அனைவரும் நேர்மையாக, ஒளிவுமறைவற்ற, வெளிப்படைத் தன்மையோடு, முழு அர்ப்பணிப்பு உணர்வோடு செயல்பட வேண்டும். அப்படிச் செயல்படும் உங்களுக்கு இந்த அரசு என்றென்றும் உறுதுணையாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் உறுதிபடத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாள்தோறும் என்னுடைய கவனத்துக்கு வந்த பல விஷயங்கள் குறித்து நான் பேச விரும்பினாலும் மாநாட்டின் முதல் நாளான இன்று உங்கள் கருத்துக்களை முழுமையாக நான் கேட்க விரும்புகிறேன். மாவட்ட அளவில் உள்ள உண்மையான நிலவரங்களை அறிந்துகொள்ள நான் காத்திருக்கிறேன். ஆகவே, உங்களுடைய கருத்துக்களைத் தெளிவாக நீங்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உங்களுடைய மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் அரசுத் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும், நீங்கள் தயக்கமின்றி உங்களது கருத்துக்களை எடுத்துச் சொல்லுங்கள். அவற்றை மேலும் சிறப்பாகச் செயல்படுத்துவதற்குத் தேவையான ஆலோசனைகளையும் தெரிவியுங்கள்.

உங்கள் மனதில் தோன்றக்கூடிய புதிய எண்ணங்களை, திட்டங்களுக்கான ஆலோசனைகளை, மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய முன்னெடுப்புகளை விளக்கமாக இங்கே தெரிவிக்க வேண்டும். புதிய முன்னெடுப்புகளுக்கு நமது அரசு முழு ஒத்துழைப்பை அளிக்கும் என்று சொல்லி என் உரையை இந்த அளவோடு நிறைவு செய்கின்றேன்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை மற்றும் வனத்துறை அலுவலர்கள் மாநாட்டில் 10.03.2022 அன்று முற்பகல் கூட்டம் நிறைவின்போது ஆற்றிய உரை :**

மாவட்ட ஆட்சித் தலைவர்களும், காவல்துறை கண்காணிப்பாளர்களும் மற்றும் அலுவலர்களும் நமது மாநிலத்தில் தற்போது நிலவி வரக்கூடிய சட்டம்–ஒழுங்கு சூழல் குறித்து, அவற்றை மேலும் மேம்படுத்துவதற்கான பல்வேறு ஆலோசனைகளை, இந்தப் பணியில் நீங்கள் சந்தித்துக் கொண்டிருக்கும் பல்வேறு சவால்கள் குறித்தும் சுருக்கமாக, அதே நேரத்தில் தெளிவாகவும் எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள்.

சட்டம்–ஒழுங்கு என்பது காவல்துறையின் பணி மட்டுமல்ல. மேலும், இது ஒரு துறையை மட்டும் பாதிக்கக்கூடிய விஷயம் மட்டுமல்ல. நமது மாநிலத்தினுடைய மக்களுடைய வாழ்க்கைத்தரம், பொருளாதார முன்னேற்றம், அடுத்த தலைமுறையினருடைய கல்வி, வேலைவாய்ப்பு என நமது சமுதாயத்தின் ஒவ்வொரு பரிணாமத்தையும் நிர்ணயிக்கக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை இந்தத் தருணத்தில் உங்களுக்கெல்லாம் மீண்டும் வலியுறுத்திக் கூற நான் விரும்புகிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர்களையும், காவல்துறைக் கண்காணிப்பாளர்களையும் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது,

★ உங்கள் மாவட்டத்தில் சட்டம்–ஒழுங்கு தொடர்பான மாதாந்திரக் கூட்டத்தை மிகுந்த கவனத்துடன் தவறாமல் நீங்கள் நடத்திட வேண்டும்.

★ கடந்த இரண்டு ஆண்டுகளாக கோவிட் பிரச்சினையால் இந்தக் கூட்டங்கள் முறையாக நடத்தப்படவில்லை. எனவே, இந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

★ மேலும், வாரந்தோறும் சட்டம்–ஒழுங்கு குறித்து நுண்ணறிவுப் பிரிவைச் சார்ந்த தகவல்கள் குறித்துக் கலந்தாலோசனையும் நீங்கள் தவறாமல் நடத்த வேண்டும்.

★ என்னுடைய அடுத்த ஆலோசனை என்னவென்று கேட்டால், நீங்கள் உங்கள் மாவட்டத்தில் Dash Board ஒன்றை உருவாக்கிக்கொள்ள வேண்டும். மாதந்தோறும் நடைபெறுகிற சட்டம்–ஒழுங்கு தொடர்பானக் கூட்டத்தில் எடுக்கப்படக்கூடிய முடிவுகள் முறையாக நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பது குறித்து அடுத்து வரும் கூட்டங்களில் ஆராய்ந்து முழுமையாக அதற்கானத் தீர்வு காண வேண்டும்.

★ சட்டம்–ஒழுங்கு பிரச்சினைகளும், குற்றங்களும் நிகழ்ந்து முடிந்த பின்பு அவற்றைத் தீர்ப்பதற்கும், புலனாய்வு செய்வதற்கும் எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகளை விட, அவை நிகழாமல் தடுப்பதற்கான முயற்சிகள்தான் மக்களுக்கு மிகுந்த பயனை அளிக்கும். எனவே, நமது வெற்றி என்பது சட்டம்–ஒழுங்கு பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதிலோ, குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலோ இருப்பதைவிட, அவை, மக்களைப் பாதிக்காத வகையில் தடுப்பதில்தான் இருக்கிறது என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

நான் ஆட்சிக்கு வந்தவுடன், தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்பதைச் சொல்லால் மட்டுமல்ல, செயலாலும் தொடர்ந்து பலமுறை நான் செய்தும் காட்டியிருக்கிறேன், அதையெல்லாம் நீங்கள் நன்கு அறிவீர்கள். இதை நான் மீண்டும் சொல்வதற்குக் காரணம், வருங்காலத்திலும் இந்த நிலை தொடர வேண்டும், தொடர்வதை நீங்கள் உறுதி செய்ய வேண்டும். நான் உங்களுக்கு இறுதியாகச் சொல்ல விரும்புவது, **இந்த ஆட்சியினுடைய மதிப்பீடு என்பது சட்டம்–ஒழுங்கினைப் பராமரிப்பதில்தான் உள்ளது என்பதை நீங்கள் அனைவரும் முழுமையாக உணர்ந்து செயல்பட வேண்டும்** என்று உங்கள் அனைவரையும் மீண்டும் ஒருமுறை கேட்டுக்கொண்டு, இந்த அளவோடு இந்த உரையை முடித்துக்கொள்கிறேன்.








# காவல்துறை அலுவலர்கள் மாநாடு 2022

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில், 10.03.2022 அன்று தலைமைச் செயலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை மற்றும் வனத்துறை அலுவலர்கள் மாநாடு நடைபெற்றது.

மாநாட்டின், முதல் நாள் பிற்பகல் நடைபெற்ற காவல்துறை அலுவலர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை :

அனைவருக்கும் வணக்கம்.

காவல்துறை அமைச்சரவையில் எனது கட்டுப்பாட்டில் இருக்கின்ற துறை, நாம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு பல்வேறு இடர்களை எதிர்கொண்டபோதிலும், சிறப்பாகப் பணியாற்றிய காவல்துறையினருக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே நான் சொன்னதுபோல, இது, 'சமூக வலைத்தள யுகம்', இந்தச் சமூக வலைத்தளத்தில், எல்லோருடைய கைகளிலும் செல்போன் வந்துவிட்டது. காவல்துறையின் பெரிய கவலையாகவும் பணியாகவும் இருக்கப்போவது, சமூக வலைத்தளங்களால் ஏற்படும் பிரச்சினைகளைத் தடுப்பதும், அதன்மேல் உடனடி நடவடிக்கை எடுப்பதும்தான்.








இன்னும் சொல்லவேண்டுமென்றால், நாட்டில் ஏற்படுகிற சாதி, மத மோதல்களுக்கும், உள்நாட்டுப் பாதுகாப்புக்கு இடையூறு ஆகியவற்றுக்கும், தொடக்கப்புள்ளியாக இருப்பது, இந்தச் சமூக வலைத்தளம்தான். இங்குப் பல்வேறு தலைப்புகளில் பேசுபவர்கள், களத்தில் ஆற்ற வேண்டியப் பணிகளோடு, ஆன்லைனில் ஆற்ற வேண்டியப் பணிகள் குறித்தும் உங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாநாட்டின்போது, சிறப்பாகப் பணியாற்றிய காவல்துறை அலுவலர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விருதுகளை வழங்கிப் பாராட்டினார்.



**காவல்துறை அலுவலர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய நிறைவுரை :**

அனைவருக்கும் வணக்கம்.

இன்றைய மாலை அமர்வில் பேசிய அனைத்து மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்களும், காவல் ஆணையர்களும், உயர் அதிகாரிகளும், உங்கள் கருத்துகளைத் தெளிவாக எடுத்துச் சொன்னீர்கள். அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உங்கள் கருத்துக்கள் அனைத்தும் உரிய பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவையான இனங்களில் உரிய நடவடிக்கையும் எடுக்கப்படும் என்பதை முதற்கண் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



நமது மாநிலம் ஒரு அமைதியான வாழ்வினை ஒவ்வொரு சராசரிக் குடும்பத்திற்கும், தொழில் நிறுவனத்திற்கும், பல்வேறு வணிக அமைப்புகளுக்கும், கல்வி அமைப்புகளுக்கும் வழங்கி, நாட்டிற்கே ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. இதற்குக் காரணம், இங்கு நிலவும் அமைதியான சட்டம்–ஒழுங்கு நிலைமைதான். இதனை முன்வைத்துத்தான் மக்கள் ஒரு அரசினை, அங்கு நடக்கின்ற ஆட்சியினைப் பற்றிய மதிப்பீட்டைச் செய்கிறார்கள்.

இதர அரசுத் துறைகளுக்கும், காவல்துறைக்கும் உள்ள இந்தப் பெரிய வேறுபாட்டினை நீங்கள் உணர வேண்டும். இதனை எப்போதும் நெஞ்சில் நிறுத்தி நீங்கள் செயல்பட வேண்டும். குறிப்பாக, ஓரிரு விஷயங்களை உங்களுக்கு இத்தருணத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். சட்டம்–ஒழுங்குப் பிரச்சினைகளில் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள், கள நிலவரத்திற்கு ஏற்ப, சட்ட வரம்பிற்குட்பட்டு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அதை அவர்களாகவே மேற்கொள்ள வேண்டும். இதற்குத் தனியாக மேலிடத்திலிருந்து ஆணை வர வேண்டுமென்று எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை, காத்திருக்கவும் கூடாது.



அடுத்து, உயர் அலுவலர்கள் சட்டம்–ஒழுங்குப் பிரச்சினைகள் ஏற்படும் நேரங்களில், நேரடியாகக் களத்திற்குச் சென்று, பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். இது சார்–நிலை அலுவலர்களுக்குத் தெம்பும், தைரியமும் அளிப்பதாக அமையும். மக்களின் ஆதரவும் இதனால் நிச்சயமாக உங்களுக்குக் கிடைக்கும்.

இன்னொரு முக்கியமான விஷயத்தையும் இங்குக் குறிப்பிட வேண்டுமென்று நினைக்கிறேன். அது, சார்–நிலைக் காவலர்கள் அவர்களது அலுவல் ரீதியான பிரச்சினைகள் மற்றும் தேவைகளை உணர்ந்து, அவர்களை ஊக்குவித்து, நீங்கள் உங்களது குழுவை அமைத்துக்கொள்ள வேண்டும். ஆங்கிலத்தில் Team Building என்று இதனைக் குறிப்பிடுவார்கள். அப்போதுதான் நீங்கள் காவல் கண்காணிப்பாளராக மட்டுமல்லாமல், ஒரு லீடராகவும் அவர்களின் முழு ஒத்துழைப்பைப் பெறக்கூடியவர்களாகவும் விளங்க முடியும்.



அரசின் நோக்கங்கள் எல்லாம் ஒன்றே ஒன்றுதான். அது, மக்கள் நலம், சமுதாய நல்லிணக்கம், குற்றங்கள் குறைந்த ஒரு வாழ்க்கை முறை, இதனைக் கொண்டுவர வேண்டியது உங்களது கரங்களில்தான் உள்ளது. அதனை நீங்கள் செயல்படுத்திட வேண்டுமென்று உங்களை எல்லாம் இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, இந்த அளவோடு மாலை அமர்வு நிகழ்ச்சியை முடித்துக்கொள்கிறோம்.




# வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டியாகச் செயல்பட வேண்டும்

**மா**வட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை மற்றும் வனத்துறை அலுவலர்கள் மாநாட்டின் இரண்டாம் நாளான 11.03.2022 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கான மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய தொடக்க உரை.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு உயர் அதிகாரிகளே, மாவட்ட ஆட்சித் தலைவர்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

தொடக்கத்திலே நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்கள் விளக்கமாக, விரிவாக இந்தக் கூட்டத்தினுடைய நோக்கத்தைப் பற்றி, இதில் எப்படி உங்களுடைய கருத்துக்களை எடுத்துவைக்கவேண்டும் என்பதைப் பற்றியும், நாம் ஆற்ற வேண்டியப் பணிகள் குறித்தும் இங்கே விளக்கமாக, விரிவாக எடுத்து வைத்திருக்கிறார்கள்.



எனவே, நான் அது குறித்து அதிகம் உங்களிடத்திலே பேச வேண்டிய அவசியம் இல்லை. இருந்தாலும், தொடக்க உரையாக, சுருக்க உரையாக என்னுடைய உணர்வை உங்களிடத்தில் நான் வெளிப்படுத்த விரும்புகிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தங்களுடைய மாவட்டங்களில் நிறைவேற்றப்படக்கூடியத் திட்டங்கள் குறித்து, கள நிலவரத்தை விரிவாக நீங்கள் இங்கே எடுத்துரைக்கலாம். இந்த அரசினுடைய திட்டங்களின் பயன் மக்களுக்குச் சென்றடைகிறதா என்பதை உறுதி செய்வது குறித்து அனைவரும் தங்களுடைய கருத்துக்களில் அதை இணைத்துத் தெரிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுக்கும், உங்களுக்கும் அதாவது, **எங்களைப் போன்ற அரசியல்வாதிகளுக்கும், உங்களைப் போன்ற அதிகாரிகளுக்கும் மக்கள்தான் எஜமானர்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆகவே, ஒரு ரூபாய் செலவு செய்தால், அந்த ஒரு ரூபாய் சிந்தாமல், சிதறாமல் கடைக்கோடி மக்களுக்கும் சென்றடைய வேண்டும். அதுதான் சிறந்த நிருவாகத்திற்கு எடுத்துக்காட்டாக அமைந்திட முடியும்.** ஒவ்வொரு மாவட்டத்திலும் நிறைவேற்றப்பட வேண்டிய புதிய திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் இருந்தால், நீங்கள் இங்கே கூறலாம். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு விதமான பொருட்கள் கிடைக்கிறது. அது மஞ்சளாக இருக்கலாம், இயற்கை வளங்கள் அதிகமாக இருக்கலாம். அவற்றை எப்படி மார்க்கெட் செய்வது, அதிலிருந்து எப்படி அரசிற்கு வருமானத்தைப் பெருக்குவது என்பது குறித்தும், விவசாயிகள், தொழிலாளர்கள், சிறுதொழில், பெருந்தொழில் உள்ளிட்ட அனைவருக்கும் பயனளிக்கக்கூடிய திட்டங்கள் என்னென்ன என்பது குறித்த கருத்துக்களையெல்லாம் நீங்கள் இங்கே தெரிவிக்கலாம் எனக் கேட்டு, நேர்மையான நிருவாகம், வெளிப்படையான நிருவாகம் என்பதை மனதில் வைத்துக் கொண்டு, உங்களுடைய ஆலோசனைகளைச் சுதந்திரமாக நீங்கள் கூறலாம் என்று கேட்டு, அந்த வகையில் உங்களுடைய கருத்துக்களைக் கேட்பதற்கு நான் ஆர்வமாக இருக்கிறேன் என்பதை மட்டும் இங்கே எடுத்துச்சொல்லி, என்னுடைய தொடக்க உரையை இத்தோடு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள் இரண்டாம் நாள் கூட்ட நிறைவில் ஆற்றிய உரை:

அனைவருக்கும் வணக்கம்.

இன்று காலை முதல் நீங்கள் தெரிவித்திருக்கக்கூடிய நல்ல கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் கள ஆய்வில் சந்திக்கும் சில குறிப்பிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நீங்கள் அரசிடம் கோரப்படும் உதவி ஆகிய அனைத்தையும் கவனத்தோடு கேட்டேன்.

அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் சிறந்த முறையிலே தங்கள் மாவட்டங்களில் அரசின் திட்டங்களை மக்களுக்குக் கொண்டுசென்று சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறீர்கள், இதற்காக உங்கள் அனைவருக்கும் முதற்கண் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் ஒவ்வொருவரும் பேசும்பொழுது குறிப்பிட்ட ஒரு பிரச்சினையையும் அதற்கான தீர்வுகளையும் தெரிவித்திருக்கிறீர்கள். அவற்றை, சம்பந்தப்பட்ட துறை தலைவர்களும் அரசுச் செயலாளர்களும் கவனமுடன் கருத்தில்கொண்டு தலைமைச் செயலாளருடன் ஆலோசித்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மக்களுக்குப் பல்வேறு நலத்திட்டங்களைப் பல்வேறு துறைகள் மூலமாக நிதிகளை ஒதுக்கி அரசு செயல்படுத்தினாலும், அது சில குறிப்பிட்ட பகுதிகளில் தேவையான தாக்கத்தினை ஏற்படுத்தவில்லை என்று நமக்குத் தெரிய வருகிறது. எனவே, நீங்கள் எந்தெந்தத் துறைகளில், எந்தெந்த திட்டங்களைச் செயல்படுத்துவதில் உங்கள் மாவட்டம் சற்றுப் பின்தங்கி உள்ளதோ அவற்றில் நீங்கள் கூடுதல் கவனம் செலுத்தி உங்கள் மாவட்டத்தை மாநிலத்தின் முன்னோடி மாவட்டங்களில் ஒன்றாக ஆக்கிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்களாகிய நீங்கள் உங்கள் மனதில் கொள்ளவேண்டிய ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அதாவது மாவட்ட நிருவாகத்தின் முன்னுரிமைகள் – Priorities என்று சொல்வார்கள் – மாநில அரசின் முன்னுரிமைகளோடு ஒன்றியதாக இருக்கவேண்டும். மாநில அரசின் பரந்துபட்ட நோக்கமாக இருக்கக்கூடிய “inclusive growth” என்னும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியானது திட்டச் செயலாக்கத்திலும் வெளிப்பட வேண்டும். குறிப்பாக, **விளிம்புநிலை மனிதர்கள், சிறுபான்மையினர், பட்டியலின பழங்குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள் ஆகியவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் நீங்கள் முன்னுரிமை அளிக்க வேண்டும்.**

மாற்றுத்திறனாளிகள் துறையில் புதிய அடையாள அட்டை வழங்கும் பணிகளுக்கு நீங்கள் முக்கியத்துவம் அளிக்கவேண்டும். விடுபட்டுள்ள மாற்றுத்திறனாளிகளைக் கண்டறிய வேண்டும். இன்று காலை சிவகங்கை மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததுபோல, ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒருங்கிணைந்த சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு அன்றைய தினமே அடையாள அட்டை வழங்க ஏற்பாடு செய்யவேண்டும். அதுமட்டுமல்ல, பிற துறைகள் மூலமாக அவர்களுக்கு வழங்கப்படும் திட்டங்களை ஒன்றிணைத்து அங்கேயே அதற்கான முடிவுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

நல்ல திட்டங்களையும், வளர்ச்சிப் பணிகளையும் நீங்கள் மேற்கொள்ளும் அதே சமயத்தில், மக்களை

> ***“விளிம்புநிலை மனிதர்கள், சிறுபான்மையினர், பட்டியலின பழங்குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள் ஆகியவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.”***

உடனடியாகப் பாதிக்கக்கூடிய சில குறிப்பிட்ட அடிப்படை அரசுப் பணிகளிலும், உதாரணமாக, பட்டா மாறுதல், சான்றிதழ்கள் வழங்குதல், ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், அதிலும் குறிப்பாக நீர்நிலைப் புறம்போக்குகளில் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் போன்றவற்றில் நீங்கள் தீவிரக் கவனம் செலுத்த வேண்டும்.

நான் முன்பே தெரிவித்தபடி, "Inspection" என்று சொல்லக்கூடிய நேரடி ஆய்வுகள், ஆரம்பச் சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், பள்ளிகள், மாணவர் விடுதிகள், அங்கன்வாடிகள், நியாயவிலைக் கடைகள் ஆகியவற்றை நீங்கள் கட்டாயம் தொடர்ந்து நேரம் கிடைக்கின்றபோதெல்லாம் ஆய்வு செய்யவேண்டும். அப்போதுதான் மக்களுக்கு, மாணவர்களுக்கு, எளியோர்களுக்கு என்ன வகையான சேவை எந்தத் துறையால் என்ன தரத்தில் வழங்கப்படுகிறது என்பதை நீங்கள் உணர முடியும், குறைபாடுகள் இருந்தால் அதையும் திருத்த முடியும்.

நம் மாநிலத்தில் குழந்தைகளிடையே ஊட்டச்சத்துக் குறைபாடு காணப்படுகிறது. உதாரணமாக, தருமபுரி மாவட்டத்தில் ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தைகள் 36 சதவிகிதம் என்று ஒரு புள்ளிவிபரம் சொல்கிறது. ICDS என்னும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தை நீங்கள் கவனமுடன் செயல்படுத்த வேண்டும். தமிழ்நாடு பொருளாதார அளவில் இந்தியாவில் இரண்டாவது இடத்தில் இருந்தாலும் ஊட்டச்சத்துப் பட்டியலில் 19ஆவது இடத்தில் உள்ளது என்பதை நான் மிகுந்த வருத்தத்துடன் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதனைச் சரிசெய்யவேண்டியது நம் அனைவரின் கடமையாகும்.

**அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் ஓர் இணைப்புப் பாலமாக விளங்கும் நீங்கள், உங்கள் மாவட்டத்தை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்லும் ஒரு வழிகாட்டியாகச் செயல்பட வேண்டும்.** பேரிடர் காலங்களில் மக்களைக் காப்பதற்கும், அந்த நேரத்தில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை முன்னதாகவே திட்டமிட்டுப் பணிகளை மேற்கொள்ளவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, இறந்தவர்களின் உடல்களை மயானங்களுக்கு எடுத்துச்செல்ல ஒரு சிறிய நடைபாலம் இல்லை என்ற நிலை கடந்த வெள்ளத்தின்போது தொலைக்காட்சி வாயிலாகச் சில மாவட்டங்களில் நாம் பார்த்தோம், வேதனைப்பட்டோம். அதே காரணத்தால், பள்ளிக் குழந்தைகள் இடுப்பளவு தண்ணீரில் பள்ளிக்குச் செல்லும் நிலையையும் பார்த்தோம். இதுபோன்ற இடங்களை நீங்கள் பட்டியலிட்டு அக்குறைகளைப் போக்க வேண்டும் அதுதான் முக்கியமான முழுமையான நல்ல நிருவாகமாக அமைந்திட முடியும்.

அடுத்தபடியாக, இரண்டு முக்கியத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான அரசாணைகள் சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக **"அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்"**, வேளாண்மைத் துறையின் மூலம் **"கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்"**, இந்த இரண்டு பெரும் திட்டங்களும் இலட்சக்கணக்கான கிராம மக்களைச் சென்றடையும் திட்டங்களாக அமைந்திருக்கின்றன. அதே சமயம், பல்வேறு துறைகளின் தேவைகளை ஒன்றிணைத்து நிறைவேற்றவேண்டிய திட்டமும் ஆகும். இந்த இரு திட்டங்களையும் நீங்கள் முன்னுரிமைக் கொடுத்து முன்னெடுத்து வெற்றிபெறச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இத்தருணத்தில் மற்றுமொரு விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். அது உங்கள் மாவட்டத்தின் ஆண்டுக் கடன் திட்டம் என்னும் "Annual Credit Plan" முறையாகச் செயல்படுத்துவதை நீங்கள் கண்காணித்து, மாதாந்திர வங்கியாளர் கூட்டத்தை நடத்திக் கல்விக் கடன், சுயஉதவிக் குழுக்களுக்கான கடன், விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடன், தொழில் முனைவோர்களுக்கான கடன் ஆகியவை முறையாக மாவட்டத்தில் அனைத்துப் பகுதிகளிலும் திட்ட இலக்கின்படி வழங்கப்படுகிறதா என்பதை உறுதிசெய்ய வேண்டும்.

இப்படி ஒவ்வொரு திட்டத்தினையும் நீங்கள் நுணுக்கமாகக் கண்காணித்து, துறைகளை ஒருங்கிணைத்துச் செயல்படுத்துவதன் மூலம் இலட்சக்கணக்கான குடும்பங்கள் பலன் பெறுவதோடு மாநிலமும் மேம்படும். முழுமனதோடு, முழு அர்ப்பணிப்பு உணர்வோடு நீங்கள் அனைவரும் இம்முன்னேற்றப் பணியில் ஈடுபடுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அவ்வாறு நீங்கள் பணியாற்ற உங்களுக்கு இந்த அரசு எல்லா வகையிலும் உதவியாக இருக்கும் என்பதை இத்தருணத்தில் தெரிவித்து, என் உரையை நிறைவு செய்கிறேன்.



*தமிழ்நாட்டில் ஒருமுறை மட்டும் பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக்கிற்கு விதிக்கப்பட்ட தடையை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அமைக்கப்பட்ட மாநில உயர்மட்ட செயல்குழுவின் முதல் கூட்டம், குழுவின் தலைவர் தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தலைமைச் செயலகத்தில் 05.03.2022 அன்று நடைபெற்றது.*




# அரசியலும், அரசு இயலும் இணைந்து நமக்கான வளமான தமிழ்நாட்டை அமைப்போம்

மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல் துறை, வனத்துறை அலுவலர்கள் மாநாட்டின் இறுதி நாளான 12.03.2022 அன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய தொடக்க உரை.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு உயர் அதிகாரிகளே! அரசுத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகளே! உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

மாநில முன்னேற்றத்திற்கு நிலையான வளர்ச்சி எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது உங்கள் அனைவருக்கும் நன்கு தெரியும். அதேபோல், சுற்றுச்சூழல் பற்றிய அக்கறையும் உங்கள் அனைவருக்கும் அதிகமாக இருக்கும் என நான் உளமார நம்புகிறேன்.

இந்த அரசைப் பொறுத்தவரைக்கும், தொழில் வளர்ச்சி, சுற்றுச்சூழல் இரண்டையும் ஒரே தராசில் இருக்கக்கூடிய இரு தட்டுக்கள் போலவே கருதுகிறது. இன்று புவி வெப்பமாகுதல் நாட்டு அளவில் அல்ல, உலக அளவில் அதிகமாகப் பேசப்படுகின்றன. அதற்காக இலக்குகள் நிருணயிக்கப்படுகின்றன. வனப்பரப்பை அதிகப்படுத்துவது, பசுமைச் சூழலை உருவாக்குவது இன்றைய மனித குலத்திற்கு மட்டுமல்ல, நம் வருங்காலத் தலைமுறைக்கும் அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றன.

என்னைப் பொறுத்தவரை எதிர்க்கட்சியாக இருந்தபோதும் சரி, சுற்றுச்சூழலை மனதில் வைத்துக்கொண்டு அப்போதே நாங்கள் மரக்கன்றுகள் எல்லாம் நட்டோம் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். அதை மனதில் வைத்துக்கொண்டு தான், இந்த அரசு பொறுப்பேற்றவுடன் முதலில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை என்கின்ற பெயரை இதற்காகச் சூட்டினோம். அத்துடன் நிற்காமல் பிளாஸ்டிக்கை ஒழிக்க மீண்டும் மஞ்சப்பை திட்டத்தைத் துவக்கிவைத்தோம். மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தில் நேர்மையான, வெளிப்படையான அனுமதி முறைக்கு வித்திட்டிருக்கிறோம்.

இப்போது முதல் முறையாக மாவட்ட ஆட்சித் தலைவரோடு சேர்ந்து மாவட்ட வன அலுவலர் மாநாட்டையும் நடத்திக்கொண்டிருக்கிறோம். இன்றைக்கு சுற்றுச்சூழல் தாக்கம் மதிப்பீடு வரைவு அறிக்கை 2020 குறித்த பல்வேறு விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. ஆகவே, தொழில், சுற்றுச்சூழல் இரண்டும் சமுதாயத்தினுடைய சம நண்பர்கள் என்ற அளவிலே முன்னெடுத்துச் செல்லத் தேவையான ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை, தொழில் துவங்க அனுமதிக்கப்படும் அனுமதிகளை இன்னும் விரைவுபடுத்தும் ஆலோசனைகளை நீங்களெல்லாம் இங்கே வழங்கிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். உங்கள் கருத்துக்களை அறிந்துகொள்ள நான் மிகுந்த ஆர்வமாக இருக்கிறேன் என்பதை மட்டும் என்னுடைய தொடக்க உரையாகச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய நிறைவுரை:**

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! தலைமைச் செயலாளர் அவர்களே! அரசுச் செயலாளர்களே! மாவட்ட ஆட்சியர்களே! வனத்துறை உயர் அதிகாரிகளே, அரசுத் துறை உயர் அலுவலர்களே, ஊடகம் மூலமாக இணைந்திருக்கும் காவல்துறை இயக்குநர் அவர்களே! காவல்துறை உயர் அலுவலர்களே, மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்களே! உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

கடந்த மூன்று நாட்களாக நடைபெற்ற, மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறைக் கண்காணிப்பாளர்கள், வனத்துறை அதிகாரிகள் மாநாடு மிகுந்த மனநிறைவை அளிப்பதாக அமைந்திருக்கிறது.

எல்லோரும் மனம் திறந்து பல்வேறு கருத்துக்களைச் சொல்லி இருக்கிறீர்கள். அரசுக்குப் பல்வேறு ஆலோசனைகளை வழங்கியிருக்கிறீர்கள்.

தனிப்பட்ட முறையில் சொல்றதா இருந்தா, இந்த ஆட்சி சரியான திசையை நோக்கித்தான் சென்று

கொண்டு இருக்கிறது என்பதை உங்கள் மூலமாக நான் அறிந்து கொண்டேன்.

இந்த ஆட்சி மக்களோட பல்வேறு தேவைகளை நிறைவேற்றி வரக்கூடிய, அந்த அடிப்படையிலே, உங்களோட கருத்துகளின் மூலமாக நான் அறிந்து கொண்டு இருக்கிறேன். நாங்கள் உருவாக்கிய திட்டங்கள் மக்களுக்குப் பயனளிக்கும் திட்டங்களாக அமைந்திருக்கின்றன என்பதை உங்களோட எண்ணங்கள் மூலமாக நான் தெரிந்துகொண்டேன்.

சுருக்கமாகச் சொல்வதாக இருந்தால் உங்களின் மூலமாகத் தமிழ்நாட்டின் முழு நிலைமையை நான் அறிந்து கொண்டு இருக்கிறேன்.

எனவே, அரசின் சார்பில் மட்டுமல்ல, தனிப்பட்ட முறையிலும் உங்கள் அனைவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலமைச்சர் நாற்காலியில் அமர்ந்திருப்பதால், எல்லாம் என்னால்தான் அப்படி என்று நினைக்கின்ற அளவிற்கு நான் நிச்சயமாக இருக்க மாட்டேன், இருக்கவும் இல்லை.

என்னைத் தொடர்ந்து அமைச்சர்கள் இருக்கிறார்கள், துறைகளின் செயலாளர்கள் இருக்கிறார்கள், மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் ஆகிய நீங்களும் இருக்கிறீர்கள், நாம் அனைவரும் சேர்ந்ததுதான் இந்த அரசு.

இத்தனை உயிர்கள் சேர்ந்துதான், அரசுக்கு நாம் உயிர்கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். நாம் அனைவரும் சேர்ந்துதான் மக்களுக்கு உயிராய், உணர்வாய் இருந்து வருகிறோம்.

மக்கள், நம்மை நம்பி ஆட்சிப் பொறுப்பை ஒப்படைச்சிருக்காங்க. மக்கள், நம்மை நம்பி அதிகாரத்தையும் ஒப்படைச்சிருக்காங்க. மக்கள், நம்மை நம்பிதான் கோட்டையை ஒப்படைச்சிருக்காங்க.

கடைக்கோடி மனிதனோட கவலையையும் தீர்க்குற அரசா ஓர் அரசு அமையணும்; அப்படித்தான் இந்த அரசு அமைஞ்சிருக்கு. அத்தகைய அரசுக்கு உறுதுணையா இருக்கக்கூடிய மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறைக் கண்காணிப்பாளர்கள், மாவட்ட வன அலுவலர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்கிறேன்.

இது நமது அரசு என்ற எண்ணத்தோடு, திறந்த மனத்தோடு, நீங்க உங்க கருத்துகளை இந்த மூன்று நாட்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள்.

சில முக்கியமான ஆலோசனைகளை மட்டும், நான் இங்க நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கேன்.

அரசோட முக்கிய திட்டங்களைச் செயல்படுத்துறது குறித்தும், சட்டம் ஒழுங்கைக் காப்பது குறித்தும், உங்களோட ஆலோசனைகள் அதிகமாக அமைந்திருந்தன.

சட்டம் ஒழுங்குப் பிரச்சினை அவ்வப்போது ஏற்படுவதாகவும், அதனைக் கட்டுப்படுத்தி விடுவதாகவும் காவல்துறை இயக்குநர் அவர்கள் சொன்னார்.

கட்டுப்படுத்துவது பாராட்டுக்குரியதுதான். ஆனா, சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று உங்கள் எல்லோரையும் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், சட்டம் ஒழுங்கு காவல்துறைக் கூடுதல் இயக்குநர் அவர்கள் பேசும்போது, குற்றங்கள் குறைந்துள்ளதைப் பற்றிக் குறிப்பிட்டார். அதோடு அதன் விழுக்காட்டையும் எடுத்துச் சொன்னார்.

குற்றங்களோட விழுக்காட்டைக் குறைப்பது அல்ல, குற்றங்களே நடக்காத சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பதுதான் உங்கள் எல்லாரையும் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது.

சாதி மோதல்கள் குறித்து நெல்லை மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் இங்கே விரிவாகப் பேசினார்.

சாதி மோதல்களை – சட்டம் ஒழுங்கு பிரச்சினையாக மட்டும் பார்க்காதீர்கள் என்று நான் கேட்டுக்கிறேன். ஏனென்றால் அது சமூக ஒழுங்குப் பிரச்சினை.

கிராமங்களில் இந்தப் பிரச்சினை அதிகமாக உருவாவதாக எஸ்.பி. அவர்கள் இங்கே பேசும்போது சொன்னார்.

படிக்காத இளைஞர்களால் மட்டுமல்ல, படித்து முடித்துவிட்டு வேலை கிடைக்காமல் ஊரில் இருக்குற ஒரு சிலராலும், இதுபோன்ற மோதல்கள் உருவாகக் கூடிய சூழ்நிலை உருவாகிறது.

இதுபோன்ற இளைஞர்களைக் கண்டறிந்து மனமாற்றம் செய்யணும். அவர்களுக்கு வேலைவாய்ப்பை








மாற்றுத்திறனாளிகளுக்காகச் சிறப்பாகப் பணி புரிந்தமைக்காக 2021ஆம் ஆண்டிற்கான விருது சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ப. மதுசூதன் ரெட்டி, இ.ஆ.ப., அவர்களுக்கு வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

உருவாக்கித் தரணும். ஆக்கபூர்வமான வழிகளில், விளையாட்டுப் போட்டிகளில், ஊர்க்காவல் படைகளில் என அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும்.

பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்துச் செயல்படுறதா நெல்லை எஸ்.பி. சொன்னார். அதேபோல் மற்ற மாவட்ட நிர்வாகமும் செயல்படணும்.

* இதேபோல் மத மோதல்கள் குறித்து, கன்னியாகுமரி மாவட்டக் கண்காணிப்பாளர் பேசினார்.

மத மோதல்கள் குறித்துக் கோவையில் இயங்குவதைப் போல சிறப்புப் பிரிவு அனைத்து மாவட்டங்களிலும் அமையணும்னு அவர் சொன்ன ஆலோசனை நிச்சயமாக பரிசீலிக்கப்படும். ஒரு காலத்துல மதம் என்பது, மதம் சம்பந்தப்பட்டதா மட்டுமே இருந்தது. இப்போது அது அரசியல் நோக்கமுள்ளதாகச் சிலரால் மாற்றப்பட்டு விட்டது.

எனவே, அரசியல் உள்நோக்கத்தோடு மத மோதல்களைத் திட்டமிட்டு உருவாக்குகிறார்கள், இதைத் தடுத்தாக வேண்டும்.

சாதி மோதல்களுக்கும், மதப் பிரச்சினைகளுக்கும் சமூக வலைத்தளங்கள் முக்கியமான காரணமாக இருக்குறதா எல்லோரும் சொன்னீர்கள். அது உள்ளபடியே முழுமையான உண்மைதான்.

இது நவீனத் தொழில்நுட்ப யுகம். இந்தத் தொழில் நுட்பத்தை நல்லதுக்கும் பயன்படுத்தலாம், அழிவுக்கும் பயன்படுத்தலாம். சாதி, மத வக்ரம் பிடிச்சவங்க அழிவுக்குப் பயன்படுத்தி, சமூகத்துல குழப்பம் ஏற்படுத்தப் பாக்குறாங்க. இவங்கள முளையிலேயே நாம் களையெடுக்க வேண்டும். இப்படிப்பட்ட பதிவுகளைப் போடுறவங்க மேல உடனடியாக நடவடிக்கை எடுத்தாக வேண்டும். சோஷியல் மீடியா சென்டருக்கு புதிய அலுவலகம் தேவை என்ற, திருவள்ளூர் எஸ்.பி.யின் கோரிக்கையை நிச்சயமாக நிறைவேற்றுவோம்.

ஒன்றிய அரசில் இருப்பதைப் போல ‘National Media Analytics Center’, ‘Social Media Lab’ - ஆகியவற்றை உருவாக்க வேண்டும் என்று சொன்னார்.

சோஷியல் மீடியா மூலமா நடக்குற இந்த வன்மங்களுக்கு, எல்லா வகையிலும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். தனியா ஒரு ஆலோசனைக் கூட்டத்தைக் காவல்துறை அதிகாரிகள் நடத்தி, அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலூர் மாவட்டக் கண்காணிப்பாளர் பேசும்போது, கைதிகளை வீடியோ கான்பரன்ஸ் மூலமாக ஆஜர் செய்தால் நேரமும் மிச்சம், செலவும் மிச்சம் என்று சொன்னார். அதனைச் செயல்படுத்தலாம். நல்ல யோசனை.

நாகை ஆட்சியரும், கண்காணிப்பாளரும் சொன்ன சுருக்குமடி வலை பிரச்சினை குறித்து, அரசு அதிகாரிகள் மட்டத்துல முழுமையான ஆய்வு நடத்தி இதுகுறித்துத் தீர்வு காணப்பட வேண்டும்.

போக்சோ வழக்குகள் அதிகமாகி வருவது குறித்து நாகை மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் பேசினார். அங்கு மட்டுமல்ல, பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் இதுபோல் செய்திகள் வெளியாகின்றன.

ஏதோ இப்போதுதான் அதிகம் நடக்கிறது என நினைக்க வேண்டாம், இப்போதுதான் துணிச்சலாக வந்து புகார்களைத் தருகிறார்கள். இதற்கு உரிய நீதி கிடைக்கச் செய்வது உங்கள் தலையாய கடமையாகும். குறிப்பாக, இத்தகைய வழக்குகளில் தாமதங்கள் இருக்கக் கூடாது என்று நான் எதிர்பார்க்கிறேன்.

தொழில் நிறுவனங்கள் அதிகம் இருக்கும் பகுதிகள்ல ரவுடிகள் அதிகம் இருக்குறதா தாம்பரம் ஆணையரும், காஞ்சிபுரம் எஸ்.பி.யும் சொன்னார்கள். அத்தகைய இடங்கள்ல சட்டம் ஒழுங்கைக் காக்க வேண்டியது மிகமிக முக்கியம். அதேபோல், தொழிற்சாலைகளில் பணிபுரியும் உள்ளூர் மற்றும் வெளி மாநிலத் தொழிலாளர்களின் விவரங்களை வருவாய்த் துறை, காவல்துறை மற்றும் தொழிலாளர் நலத்துறை இணைந்து டாக்குமென்ட் செய்ய வேண்டும்.

அமைதியான மாவட்டங்களில்தான், அதிகமான நிறுவனங்கள், தொழில்கள் தொடங்க முன்வருவார்கள். கல்குவாரிகளால் ரவுடிகள் வளர்கிறார்கள்னு தாம்பரம் ஆணையர் குறிப்பிட்டுச் சொன்னார். கல்குவாரி தொழிலால் ரவுடிகள் வளர மாட்டாங்க. தொழில் போட்டி காரணமாக அப்படி உருவாகலாம். அவங்களுக்கு அதிகாரிகள் உடந்தையாக இருக்கக் கூடாது. அதேபோல், ரவுடிகளில் வடசென்னை, மத்திய சென்னை, என்று பிரிவினை செய்வதும் தவறானது. ரவுடிகளை இடம், சாதி, மதம் என்று அடையாளப்படுத்தக் கூடாது. குடிசைப் பகுதியில் கஞ்சா விற்பனை நடக்குறதா அமைச்சர்




முதலமைச்சரின் உதவி மையம் மூலம் 'முதல்வரின் முகவரி துறை'யில் பெறப்பட்ட மனுக்களுக்கு உரிய முறையில் ஆய்வு செய்து குறைதீர்வு நடவடிக்கை சிறப்பாக மேற்கொண்டதற்காக 2022ஆம் ஆண்டிற்கான விருது திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு. சிவராசு அவருக்கு வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

சேகர் பாபு அவர்கள் பேசுகின்றபோது இங்கே சொன்னார். இதுபோன்ற அடையாளப்படுத்தல்கள் கூடாது.

ரவுடிகளைக் கட்டுப்படுத்த, 'வெளிச்சம்', 'உதயம்', 'விடியல்' ஆகிய திட்டங்களை அமல்படுத்தி வருவதாக தாம்பரம் ஆணையர் சொன்னார். அதனை மற்றவர்களும் பின்பற்றலாம்.

சிறார் திருமணங்களைத் தடுக்கணும்னு தஞ்சாவூர் எஸ்.பி. சொன்னார்.

சில குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும்தான் அது நடக்கிறதுன்னு நினைக்கிறேன். அதனையும் முழுமையாக தடுக்க சமூகநலத்துறையும், மாவட்ட ஆட்சியர்களும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

State-wide sexual offenders registry - உருவாக்கி சம்பந்தப்பட்டவர்களை காலப் போக்கில் எந்தப் பணிகளுக்கும் சென்று விடாமல் தடுக்க வேண்டும் என்றும் அவர் சொன்னது சரியானதுதான்.

தவறு செய்த யாரும் தண்டனையில் இருந்து தப்பி விடக் கூடாது.

கடலூர் வெள்ளப் பாதிப்புகள் குறித்தும், அது இனி ஏற்படாமல் செய்ய வேண்டிய பணிகள் குறித்தும் அரசுக்கு அறிக்கை அனுப்பி இருப்பதாகக் கடலூர் மாவட்ட ஆட்சியர் சொன்னார்.

இனி அத்தகைய வெள்ளச் சூழல் ஏற்படாத வகையில் திட்டங்களைத் தீட்டியாக வேண்டும். சாலை விபத்துக்கள் குறைக்கப்பட வேண்டும். உயிரிழப்புகள் தவிர்க்கப்பட வேண்டும். இதற்கு மாவட்ட ஆட்சியர்களும், காவல் கண்காணிப்பாளர்களும் முன்னுரிமை அளிக்க வேண்டும். அதேபோல், பட்டாசு மற்றும் தீ விபத்துக்களைத் தடுப்பதிலும், அதனுடைய பாதிப்புகளைக் குறைப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

போதைப் பொருள்களைக் கட்டுப்படுத்துறது குறித்து, நாமக்கல் எஸ்.பி. உள்பட பலரும் பேசினார்கள்.

பள்ளி மற்றும் கல்வி நிறுவனங்கள் அருகே தீவிரக் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். NSS மற்றும் NCC மாணவர்களுடன் இணைந்து, போதைப் பொருளுக்கு எதிரான செயல்பாடுகளைக் காவல்துறை மேற்கொள்ளலாம்.

காவல்துறை நுண்ணறிவுப் பிரிவுக் கூடுதல் இயக்குநர் அவர்கள் பேசும்போது. உள்நாட்டுப் பாதுகாப்பு குறித்துப் பல்வேறு தகவல்களைக் கூறினார். கடலோர மாவட்டங்களைக் கண்காணிப்பதும், தடை செய்யப்பட்ட இயக்கத்தினர் நம் மாநிலத்துக்குள் ஊடுருவி விடாமல் தடுப்பதும் மிகமிக முக்கியமானதாகும். அதேபோல், மத அடிப்படைவாதம் குறித்தும் இங்குக் கவலை தெரிவிக்கப்பட்டது. இப்படி ஒட்டுமொத்தமாக எல்லாரும் அமைதியை நிலைநாட்டுவதற்காகப் பேசி இருக்கிறீர்கள். அச்சமில்லாத தமிழ்நாட்டை உருவாக்கப் பேசி இருக்குறீங்க.

குற்றவாளிகளுக்குத் தண்டனை மட்டும் பெற்றுத் தரும் துறையாக இல்லாமல். குற்றவாளிகள் உருவாகாமல் தடுக்குற துறையாக காவல்துறை மாறவேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன், விரும்புகிறேன். உங்களோட எண்ணம் அதற்கேற்ற வகையில் வெற்றிபெற வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

அதேபோல், அரசுத் துறைகளின் சார்பில் நடைபெற்று வரும் திட்டங்கள் குறித்து, அரசுத் துறைச் செயலாளர்கள், மாவட்ட ஆட்சியர்கள் விரிவாக விளக்கினார்கள்.

ஒரே மாதிரியான கருத்தைச் சொல்லாமல், ஒவ்வொருவரும் ஒரு துறையைப் பற்றிச் சொன்னது மிகச் சிறப்பாக இருந்தது.

சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை, மக்களைத் தேடி மருத்துவம், நமக்கு நாமே, சமத்துவபுரம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், அனைத்துக் கிராம வேளாண் வளர்ச்சித் திட்டம், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம், பாதாளச் சாக்கடைத் திட்டம், நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டம், கலைஞர் வீட்டுவசதித் திட்டம் ஆகிய முக்கிய திட்டங்கள் குறித்து ஆட்சியர்கள் அனைவரும் விவரங்கள் அளித்தீர்கள்.

உங்களோட நிர்வாக எல்லைக்குள் இத்திட்டங்களை முழுமையாகவும், விரைவாகவும் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சிச் செயல்பாடுகள் குறித்து, கோவை மாவட்ட ஆட்சியர் பேசினார். பல்வேறு முன்னெடுப்புகள், கோவை மாநகராட்சியில் நடந்து வருவதையும் அவர் குறிப்பிட்டார். சிறுவாணி தண்ணீர் குறித்து அரசு விரைவில் முடிவுகள் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ‘முனிசிபல் அட்மினிஸ்ட்ரேஷன் அலுவலர்கள்’ நியமனம் குறித்தும் ஆலோசித்து முடிவெடுப்போம்.

திருச்சி மாவட்ட ஆட்சியர் பேசும்போது ‘முதல்வரின் முகவரி’ திட்டத்தைப்பற்றி பேசினார். வருவாய், ஊரக வளர்ச்சி, காவல்துறை ஆகிய மூன்று துறை தொடர்பான மனுக்கள்தான் 80 விழுக்காடு வருவதாகச் சொன்னார். இந்த மூன்று துறையும், மாவட்டங்களில் முறையாகச் செயல்பட்டால், மனுக்கள் வருவது நிச்சயம் குறையும். இதனை, இந்த மூன்று துறையைச் சேர்ந்தவங்களும் உன்னிப்பாகக் கவனிக்கணும்.

மாற்றுத்திறனாளிகள் நலன் குறித்துப் பேசிய மாவட்ட ஆட்சியர், அவர்களுக்கான தனியான வேலை வாய்ப்புகளை உருவாக்கணும்னு சொன்னார்.

புதியதாக அவர்களுக்காகத் தனியான வேலைவாய்ப்புகள் உருவாக்குறதவிட, இருக்குற வேலைவாய்ப்புகளில் எதில் எல்லாம் அவர்களைப் பங்கெடுக்கச் செய்ய முடியுமோ, அதில் எல்லாம் அவர்களை பங்கெடுக்கக் கூடிய சூழ்நிலையை நீங்கள் ஏற்படுத்தித்தர வேண்டும்.

நில அபகரிப்புகள், ஆக்கிரமிப்புகள் குறித்து சென்னை மாவட்ட ஆட்சியர் உள்பட பலரும் பேசினார்கள். நீர் நிலைகளில் குடியிருப்போருக்குப் பட்டா வழங்குவது குறித்து இங்கு பெரிய விவாதமே நடந்தது. நீர் இருந்தாலும், இல்லை என்றாலும் அது நீர் நிலைதான். எனவே, அது ஆக்கிரமிப்பு என்பதில் நீதிமன்றம் உறுதியாக இருக்கிறது. நீர்நிலைகளைப் பராமரிக்காத காரணத்தால், வெள்ளக் காலங்களில் நாம் அடையும் பாதிப்புகளைத் தொடர்ந்து பார்த்துக்கொண்டு இருக்கிறோம். எனவே, நீர்நிலை ஆக்கிரமிப்பு என்பதை நாம் மிகுந்த கவனத்துடன் அணுக வேண்டும்.

மாநிலத்தின் வனப் பரப்பினை 33 சதவிகிதத்திற்கு உயர்த்துவது குறித்துப் பல்வேறு நல்ல ஆலோசனைகளைச் சொன்னீர்கள். அதை எல்லாம் நடைமுறைப்படுத்த இந்த அரசு உரிய நிதி ஒதுக்கீடு செய்யும்.

வனத் தீயினைக் கட்டுப்படுத்த வனத் துறையின் வீரர்களுக்கு உரிய தீத் தடுப்புக் கருவிகள் வழங்கப்படுவதோடு, துரதிருஷ்டவசமாக அதில் அவர்கள் உயிரிழக்க நேர்ந்தால், முதலமைச்சர் பொதுநிவாரண நிதியிலிருந்து அவர்களுக்கு ரூ.25 இலட்சம் வழங்கப்படும்.

வன விலங்குகள் சிகிச்சைக்காகக் கால்நடைப் பராமரிப்புத் துறையில் தனி அலகு ஏற்படுத்திப் பயிற்சிகள் அளிக்கப்படும்.

கொரோனா காலத்தில் பெற்றோரை இழந்தவங்களுக்கு இழப்பீடு என்பது உடனடியாக வழங்கப்படணும். இதில் எந்தக் காரணத்தைக் கொண்டும் காலதாமதம் வேண்டாம் என உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 12.03.2022 அன்று, தலைமைச் செயலகத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை, வனத்துறை அலுவலர்கள் மாநாடு நடைபெறுவதையொட்டி, நாமக்கல் கவிஞர் மாளிகை முன்பு மரக்கன்றினை நட்டார்.

வருவாய்த் துறையும் தகவல் தொழில்நுட்பத் துறையும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று சொல்லப்பட்டதை உள்ளபடியே நான் வரவேற்கிறேன்.

மாநகராட்சிகளிலும், நகராட்சிகளிலும், பகுதி சபை, வார்டு சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு மக்களின் குறைகள் களையப்படும்.

குழந்தைத் திருமணங்கள் இருப்பதாக விழுப்புரம் ஆட்சியர் இங்குத் தகவல் தந்தார். குழந்தைத் திருமணத்தை அனுமதிக்கக் கூடாது. அது தொடர்பாக அந்தக் குழந்தைகளே தகவல் தந்தார்கள் என்பது மகிழ்ச்சிக்குரியதாகும். ரத்தசோகை, சத்துக்குறைவான குழந்தைகளைக் கண்டறிய வாட்ஸ்அப் குழு தொடங்கி இருப்பதாக அவர் சொன்னது உள்ளபடி அது வரவேற்கத்தக்கது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் அமல்படுத்தப்பட்ட பண்ணைக் குட்டைகள், பசுமைக் குன்றுகள் திட்டத்தை மற்ற மாவட்டங்களும் பின்பற்றலாம்.

வளர்ப்பவர்களே ஆடு, கோழிகளை இடைத்தரகர்கள் இன்றி விற்க உழவர் சந்தைகள் போன்ற அமைப்புகள் ஏற்படுத்தப்படும்.

இந்திராகாந்தி ஆவாஸ் யோஜனா திட்டத்தின்கீழ் 30 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட வீடுகளைச் சரிசெய்து தர வேண்டும் என்ற தருமபுரி ஆட்சியரின் கோரிக்கையை, நிதித்துறையின் பரிசீலனைக்கு நிச்சயமாக அதுவும் நிறைவேற்றப்படும்.

புதியதாகத் தொடங்கப்பட்ட கல்லூரிகளுக்கு உடனடியாக இடம் பார்த்துக்கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறு, குறு நிறுவனங்களைப் புதிதாக உருவாக்குவதில் உள்ள சிக்கல்களைச் சேலம் மாவட்ட ஆட்சியர் கார்மேகம் கூறினார்.

சிறு, குறு நிறுவனங்களை அதிகமாக உருவாக்குறதுல அனைவரும் அக்கறை செலுத்த வேண்டும், அதுதான் சாமானியர்களுக்கு வேலைவாய்ப்பைத் தரும் துறை என்பதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

பருவ மழையினால் ஏற்பட்ட சேதங்களைச் சரிசெய்ய அரசின் சார்பில் தரப்பட்ட தொகை குறைவாக இருக்கிறது என்று நீர்வளத்துறைச் செயலாளர் சொன்னார். நிச்சயமாக அதுவும் பரிசீலிக்கப்பட்டுத் தேவைப்படக்கூடிய நிதியை வழங்குவோம்.

அரசுத்துறைகள் முழுமையாகக் கணினிமயமாக்கப்பட வேண்டும். அனைத்து மின்னணு சேவை மையங்களும் ஆய்வு செய்யப்பட்டு அவற்றின் செயல்பாடுகள் மேம்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஆதிதிராவிடர் மாணவர் விடுதிகள் சீர்திருத்தப்பட வேண்டும். பல இடங்களில் மிக மோசமானதாக இருப்பதாக தொடர்ந்து புகார்கள் வருகின்றன. அனைவரும் அதனை போய்ப் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விடுதிகளில் மாணவர்கள் தங்கும் எண்ணிக்கையை அவ்வப்போது உறுதிசெய்வதோடு, சென்னை போன்ற மாநகரங்களில் தேவைக்கேற்ப கட்டமைப்புகள் விரிவுபடுத்தப்படும்.

‘நமக்கு நாமே’, ‘சமத்துவபுரம்’, ‘தொகுதி மேம்பாட்டு நிதி’, ஆகிய திட்டங்களைச் செயல்படுத்த மாவட்ட ஆட்சியர்கள் ஒத்துழைப்பு அவசியம்னு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறைச் செயலாளர் பேசும்போது குறிப்பிட்டுச் சொன்னார்.

பட்டா மாறுதல் போன்ற வருவாய்த்துறை இனங்களில் சுணக்கம் ஏற்படாத வண்ணம் விரைவில் நடவடிக்கை எடுக்கத் தேவையான கண்காணிப்புகள் மேற்கொள்ளப்படும். தேங்கியுள்ள பணிகளை விரைந்து முடிக்கணும்னு சொன்னார். அந்த மூன்று திட்டங்களை மட்டுமல்ல, அனைத்துத் திட்டங்களையும் செயல்படுத்த மாவட்ட ஆட்சியர்கள் ஒத்துழைக்கணும்.

உங்கள் தொகுதியில் முதலமைச்சர், மக்களைத் தேடி மருத்துவம், வேளாண்மை நிதிநிலை அறிக்கை, இல்லம் தேடிக் கல்வி, நான் முதல்வன் இது போன்றத் திட்டங்களில் அதிக கவனத்தை நீங்கள் செலுத்தவேண்டும். கல்வியும், சுகாதாரமும் இந்த அரசின் இரு கண்கள்! சாலை வசதி, மின்சாரம், உணவுப் பொருள் வழங்கல் ஆகியவை அடுத்த இலக்கு! இவற்றில் எந்தத் தடங்கலும் இருக்கக் கூடாது. இதற்காகவே நாம் இருக்கிறோம்.

கோடிக்கணக்கான மக்களோட வாழ்க்கை சம்பந்தப்பட்டது இது. கோடிக்கணக்கான பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள திட்டங்கள் இவை. இவை அனைத்தையும் நிறைவேற்றும் பொறுப்பு உங்களின் இரண்டு கைகளுக்குத்தான் இருக்கிறது. ஒவ்வொரு திட்டமும் எந்த மாதிரி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நாள்தோறும் நீங்கள் கண்காணித்தால் போதும், அந்தத் திட்டம் மிகச் சிறப்பாகச் செயல்படத் தொடங்கிவிடும்.

அனைவரும் dashboard உருவாக்கி வைத்துக்கொள்ளுங்கள். நாள்தோறும் அதை நான் பார்க்கிறேன். நீங்களும் உங்களது dashboard–இல் உங்களது பணிகளைச் செதுக்கி வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் செய்த பணிகளும் இருக்கட்டும். செய்ய வேண்டிய பணியும் இருக்கட்டும். எந்த உயரத்தை அடைவதாக இருந்தாலும் ஒவ்வொரு படியாகத்தான் ஏற வேண்டும். ஒவ்வொரு நாளும் அனைத்துத் திட்டங்களையும் உயரத்துக்கு நகர்த்துவோம். அதன் மூலமாக ஒட்டுமொத்த தமிழ்நாட்டையும் உயர்த்துவோம்.

எனக்கு நீங்க ஒத்துழைப்புத் தாங்கனு நான் கேட்கல; உங்களோட கனவுகளை நிறைவேற்ற என்னை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். அரசியல் என்ற சொல்லில் அரசு இருக்கிறது. அரசியலும், அரசு இயலும் இணைந்து நமக்கான வளமான தமிழ்நாட்டை அமைப்போம். இது உங்களால் மட்டும்தான் முடியும்.

முன்பு இருந்ததைவிடக் கடந்த மூன்று நாட்களில் நான் அதிகமான உற்சாகத்தோடு இருக்கிறேன். உங்கள் ஒவ்வொருவர் பேச்சும் எனக்கு டானிக்கை, சக்தியைக் கொடுத்திருக்கிறது, ஒரு உற்சாகத்தைக் கொடுத்திருக்கிறது, ஊக்கத்தைக் கொடுத்திருக்கிறது.

ஒருவரை ஒருவர் நாம் புரிந்துகொள்ள இந்த மூன்று நாள் மாநாடு அடித்தளம் அமைத்துள்ளது. இதனை மிகச் சிறப்பாக ஒருங்கிணைத்த தலைமைச் செயலாளர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பட்டிமன்றங்களின் நடுவராக இருந்தவர் என்பதால் அனைவருக்கும் பேச அனுமதியும் கொடுத்து, குறிப்பிட்ட நேரத்தில் முடிக்கவும் வைத்தார் தலைமைச் செயலாளர் அவர்கள்.

அதேபோல், காவல்துறை இயக்குநருக்கும் நன்றி. பங்கேற்ற துறையின் செயலாளர்கள், மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் அனைவருக்கும் நன்றி. அமைச்சர்கள் அனைவருக்கும் நன்றி.

இந்தக் கூட்டத்தில் திட்டமிடுதல்கள் குறித்து அதிகம் பேசினோம். அடுத்து நடக்கக் கூடிய கூட்டத்தில் சாதனைகளைப் பற்றி அதிகம் பேசுவோம். அந்த வகையில் அது அமைய வேண்டும் என்று கேட்டு, மீண்டும் உங்கள் அனைவருக்கும் நன்றி கூறி, என் உரையை நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், சிறந்த சேவைக்காக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நினைவுப் பரிசுகளை வழங்கிப் பாராட்டினார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை, வனத்துறை அலுவலர்கள் மாநாடு நிறைவு நாளான 12.03.2022 அன்று, தலைமைச் செயலகத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அரசுத்துறைச் செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்களுடன் உணவருந்தினார்.



## மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதிக்கு வாழ்த்து

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்
தலைமை நீதிபதியாகப் பதவிப் பிரமாணம்
எடுத்துக் கொண்ட நீதியரசர்
திரு. முனீஸ்வர் நாத் பண்டாரி அவர்களுக்கு
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
பொன்னாடை மற்றும் புத்தகங்கள் வழங்கி
வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.
(சென்னை ஆளுநர் மாளிகை–14.02.2022)



## கின்னஸ் உலகச் சாதனை படைத்த மாணவனுக்கு வாழ்த்து

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை
24.02.2022 அன்று தலைமைச் செயலகத்தில்,
ஒரு நிமிடத்தில் 42 புத்தகங்களின்
ஆசிரியர்கள் பெயரைச் சொல்லி
கின்னஸ் உலகச் சாதனை படைத்த
மூன்றாம் வகுப்பு மாணவன்
செல்வன் வி. வருண் ஸ்ரீராம் சந்தித்து
வாழ்த்துப் பெற்றார்.





## விருதாளருக்கு வாழ்த்து...

**ப**ட்டியல் – பழங்குடியின மக்கள் உரிமைகளுக்காகத் தொடர்ந்து பணியாற்றிவரும் செயற்பாட்டாளர் ‘எவிடென்ஸ்’ கதிர் (எ) ஆரோக்கியசாமி வின்சென்ட் ராஜ் அவர்களுக்கு ஐரோப்பிய கவுன்சிலின் ரவுல் வாலன்பெர்க் விருது அறிவிக்கப்பட்டுள்ளதை அறிந்து மகிழ்கிறேன். அவரது பணி சிறப்புறத் தொடர வாழ்த்துகிறேன்!

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
(சமூக வலைத்தளப் பதிவு – 19.01.2022)

## சமுதாய விழிப்புணர்வு நாடகத்தில் நடித்த

# சிறார்களுக்கு வாழ்த்து

தந்தை பெரியார் பெயரல்ல; கருத்தியல்!
தலைமுறைகள் கடந்து மானுடச் சமுதாயம்
பகுத்தறிவோடும் சுயமரியாதையோடும்
வாழ்வதற்கான வழிகாட்டி!
கொள்கை உரத்தோடு தொலைக்காட்சி
நிகழ்ச்சியில் பங்கெடுக்கும்
பெரியார் பிஞ்சுகளை வாழ்த்தி மகிழ்ந்தேன்.
இது பெரியார் மண்! கலைக்கு இடமுண்டு;
களைகளுக்கு அல்ல.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் (24.02.2022)



தனியார் தொலைக்காட்சி நிறுவன நிகழ்ச்சிகளில் சமுதாய விழிப்புணர்வு குறித்து நடத்தப்பட்ட தந்தை பெரியார் நாடகத்தில் பங்கேற்ற சிறார்கள் துவாஷிகா, இளந்தமிழ் (தந்தை பெரியார்), உதய்பிரியன் (பத்திரிகையாளர்), ஆலம் (உதவி கேட்பவர்) மற்றும் குறத்தி நாடகத்தில் பங்கேற்ற சாத்விக் (குறவன் வேடம்), தாரிகா லட்சுமி (குறத்தி வேடம்), ஸ்ரீ ராம் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.



## மனிதநேயம் குறித்துப் பேட்டியளித்த

# மாணவனுக்குப் பாராட்டு

யாரையும் வெறுக்காமல் அன்பு செலுத்த வேண்டும் எனச் சிறுவன் அப்துல் கலாம் பேசிய காணொளிக் கண்டு நெகிழ்ந்தேன். நேரில் அழைத்துப் பாராட்டினேன். சாதி, மதப் பாகுபாடுகளைக் கற்பிக்காமல் சிறுவனின் மனதில் அன்பையும் மனிதநேயத்தையும் விதைத்த அவரது பெற்றோரும் ஆசிரியர்களும் பாராட்டுக்குரியர்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் (24.02.2022)

## குடியிருப்பு ஒதுக்கீடு...

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 26.02.2022 அன்று தலைமைச் செயலகத்தில், இணையதள தொலைக்காட்சிக்கு மனிதநேயம், மதநல்லிணக்கம் குறித்துப் பேட்டியளித்த பள்ளி மாணவன் ஏ. அப்துல்கலாம் பெற்றோருக்குத் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சென்னை, கலைஞர் கருணாநிதி நகர், சிவலிங்கபுரம் திட்டப் பகுதியில் குடியிருப்பு ஒதுக்கீடு செய்து அதற்கான ஆணையினை வழங்கினார்.

கடந்த 24.02.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இணையதள தொலைக்காட்சிக்கு மனிதநேயம், மதநல்லிணக்கம் குறித்துப் பேட்டியளித்த பள்ளி மாணவன் ஏ. அப்துல்கலாம் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அப்போது அம்மாணவனின் பெற்றோர் திருமதி ஆ.தில்ஷாத்பேகம் மற்றும் திரு. அ.அஸ்மத்துல்லாஹ் ஆகியோர் தாங்கள் குடியிருந்த சென்னை, பட்டினப்பாக்கம், சீனிவாசபுரத்தில் இருந்த வீடு வர்தா புயலால் இடிந்து விட்டதாகவும், அதனை மீண்டும் கட்டுவதற்குத் தங்களிடம் போதிய பொருளாதார வசதியில்லை எனவும், எனவே குடியிருக்க வீடு ஒன்று வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்கள்.

அப்பெற்றோரின் வேண்டுகோளைக் கனிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் சென்னை, கலைஞர் கருணாநிதி நகர், சிவலிங்கபுரம் திட்டப் பகுதியில் ஒரு குடியிருப்பை ஒதுக்கீடு செய்து அதற்கான ஆணையினை வழங்கினார். ஒதுக்கீட்டு ஆணையினைப் பெற்றுக் கொண்ட மாணவன் ஏ. அப்துல்கலாமின் பெற்றோர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொண்டனர்.



# வெற்றிகள் குவியட்டும்...

**சூ**ப்பர் கம்ப்யூட்டரையே தோற்கடித்த – தான் பார்த்து வியந்த உலகின் சிறந்த சதுரங்க ஆட்டக்காரரான கார்ல்சனை வீழ்த்தி ஒட்டுமொத்த உலகையே திகைப்பில் ஆழ்த்தியுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 16 வயது கிராண்ட் மாஸ்டர் ஆர்.பிரக்ஞானந்தாவிற்கு எனது மனமார்ந்த பாராட்டுகள். மேன்மேலும் வெற்றிகள் குவியட்டும்.



– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
(சமூக வலைத்தளப் பதிவு – 22.02.2022)






## வாழ்த்து...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை 28.01.2022 அன்று தலைமைச் செயலகத்தில், கடந்த ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் மத்திய பிரதேச மாநிலம் போபாலில் நடைபெற்ற தேசிய பில்லியர்ட்ஸ் மற்றும் ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப் போட்டிகளில் 2 தங்கப் பதக்கங்கள் மற்றும் 1 வெள்ளிப் பதக்கம் வென்ற ஆர்.அனுபமா, தங்கப் பதக்கம் வென்ற பி.ஸ்னேத்ரா பாபு, ஸ்ரீ கிருஷ்ணா ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

## சந்திப்பு...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை 07.01.2022 அன்று தலைமைச் செயலகத்தில், பாண்டிச்சேரியில் நடைபெற்ற அகில உலக யோகாசனப் போட்டியில் கலந்து கொண்டு பதக்கங்களை வென்ற திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் எஸ்.யூ.தர்ஷனா, என்.பாலகிருஷ்ணன், டி.திவ்யஸ்ரீ, எஸ்.கார்த்திகேயன், எஸ்.எஸ்.தேவிஸ்ரீ, என்.அனிதா, என்.தரணிதரன் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.





## வாழ்த்து...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை 07.02.2022 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களின் பெயர்களையும் தமிழில் தலைகீழாக வேகமாக எழுதி, International Book of Records, Asia Book of Records, India Book of Records 2022 ஆகிய சாதனைப் புத்தகங்களில் இடம்பெற்ற சென்னையைச் சேர்ந்த மாணவன் செல்வன் எம்.ஆர்.நவஜித் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.




பிப்ரவரி 21 : உலகத் தாய்மொழி நாள்



## அனைவருக்கும் சமமான இந்தியாவைக் காண உறுதியேற்போம்

உலகத் தாய்மொழி நாளில், தங்கள் மொழிகளைப் பாதுகாக்கவும் உரிமைகளை நிலைநாட்டவும் போராடிய தியாகியருக்கு எனது வணக்கத்தைச் செலுத்துகிறேன்.

அவர்களது தியாகத்திலிருந்து பெறும் உணர்வெழுச்சி கொண்டு, ஒற்றை மொழியின் ஆதிக்கம் இன்றி, அனைத்து மொழிகளும் சமமாக நடத்தப்படும் அனைவருக்கும் சமமான இந்தியாவைக் காண நாம் அனைவரும் உறுதியேற்போம்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்




**19**99ஆம் ஆண்டு முதல் பிப்ரவரி திங்கள் 21ஆம் நாள் உலகத் தாய்மொழி நாளாக யுனெஸ்கோ நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டு ஆண்டுதோறும் ''உலகத் தாய்மொழி நாள்'' கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்வகையில் தமிழ் மொழியின் சிறப்பை இளைய தலைமுறையினர் அறிந்துகொள்ள வேண்டும் எனும் உயரிய நோக்கில் ஒவ்வொரு ஆண்டும் ''உலகத் தாய்மொழி நாள்'' தமிழ் வளர்ச்சித்துறையால் கொண்டாடப்பட்டு வருகிறது.

இவ்வாண்டு, உலகத் தாய்மொழி நாள் 21.02.2022ஆம் நாளன்று சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைந்துள்ள ஊடக அரங்கில் நடைபெற்றது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின் அரசுச் செயலாளர் திரு.மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று உரையாற்றினார். தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரன் அவர்கள் விழாச் சிறப்புரை ஆற்றினார். அவர்தம் சிறப்புரையில் மொழியின் சிறப்பு குறித்தும், ஒருவர் தம் தாய்மொழியைத் தற்போதைய காலத்திற்கேற்றவாறு பல்வேறு மொழிகளிலிருந்தும் கருவிகளின் துணைக்கொண்டு மொழிகளுக்கான விவரங்களை மொழிபெயர்த்து அறிந்துகொள்ள தற்போதைய கணினித் தொழில்நுட்பம் மிகவும் பேருதவியாக உள்ளது என எடுத்துரைத்தார்.

அதனைத் தொடர்ந்து, ''தாய்மொழி நாள் சில பதிவுகள்'' என்ற தலைப்பில் பேரா. முனைவர் வ.ஜெயதேவன் அவர்களின் தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கத்தில் முனைவர் உலகநாயகி பழனி அவர்கள் தமிழ்மொழி மேலும் தழைத்தோங்க இறவாத புகழுடைய நூல்களை எழுதுதல் வேண்டும் எனவும், பிற நாட்டு நல்லறிஞர் நூல்கள் தமிழில் மொழிபெயர்த்தல் வேண்டும் எனவும், தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவச்செய்தல் வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். மாநிலக் கல்லூரி முதல்வர் முனைவர் இரா.இராமன் அவர்களின் கருத்துரையில் ''சாகும்போதும் தமிழ் படித்துச் சாகவேண்டும் என் சாம்பலிலும் தமிழ் மணந்து வேகவேண்டுமென'' உணர்வுப்பூர்வமாகத் தமிழ் மொழியின் இனிமை, வளமை குறித்துத் தனது கருத்தினை வழங்கினார். சென்னை வானொலி நிலைய மேனாள் இயக்குநர் கவிஞர் செ.கமலநாதன் அவர்தம் கருத்துரையில் மலையாள மொழியின் சிறந்த பாடலாசிரியரும் பத்மபூஷன் விருது, சாகித்திய அகாடமி விருது ஆகிய விருதுகளைப் பெற்றவருமான ஓஎன்பி குருப் என்பவர் பாரதியின் தமிழ் மண்ணில் பிறந்தவர்களை மிகவும் போற்றுதலுக்கும், வணங்குவதற்கும் உரியவர்கள் எனத் தெரிவித்ததாகவும் கூறினார்.

அதனைத் தொடர்ந்து ''இதனாலே பேணலாம் தாய்மொழியை...!'' என்ற தலைப்பில் வழக்குரைஞர் பாலசீனிவாசன் அவர்கள் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. இக்கவியரங்கில் செல்வி கி.ஸ்ருதிலட்சுமி, செல்வி ஜெ.மீனாட்சி, திருமதி அரி.ரேகா, திரு.நல்ல.அறிவழகன் ஆகியோர் பங்கேற்றுக் கவிபாடினர்.

முன்னதாகத் தமிழ் வளர்ச்சித்துறை (ம) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் (கூ.பொ.) முனைவர் ப.அன்புச்செழியன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். முடிவில் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் (நிருவாகம்) திரு.ம.சி.தியாகராசன் அவர்கள் நன்றியுரையாற்றினார்.




# தமிழக மக்களிடையே அமோக வரவேற்பைப் பெற்ற குடியரசு தின அலங்கார ஊர்திகள்

**செ**ன்னையில் 26.01.2022 அன்று நடைபெற்ற குடியரசு நாள் விழாவில் செய்தித்துறை சார்பில் விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்களிப்பை வெளிப்படுத்தும் வகையில் தமிழகச் சுதந்திரப் போராட்ட வீரர்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்கும் மூன்று அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மாநிலம் முழுவதும் உள்ள மக்கள் கண்டுகளிக்கின்ற வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 26.01.2022 அன்று அந்த ஊர்திகளைச் சென்னை, தீவுத்திடலில் கொடியசைத்துத் தொடங்கிவைத்தார்.

முதற்கட்டமாக, 28.01.2022 அன்று, கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை ஆகிய மாவட்டங்களில் இவ்வூர்திகள் காட்சிப்படுத்தப்பட்டன. மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த அலங்கார ஊர்திகளை வரவேற்றனர். பொதுமக்கள் பெருந்திரளாகப் பார்வையிட்டுப் பயன்பெற்றனர்.

மேலும், மதுரைக்குச் செல்லும் வழியில், புதுக்கோட்டைக்கு வந்த அலங்கார ஊர்தியினை, மாவட்ட எல்லையான மேலப்பச்சகுடி பகுதியில் மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு.எஸ்.இரகுபதி அவர்கள், மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலைமாற்றத்துறை மற்றும் இளைஞர் நல விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் ஆகியோர் வரவேற்றனர்.



திருச்சி, மன்னார்புரம் மேம்பாலம் இறங்கு பகுதியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது.

திருப்பூர் மாவட்டத்திற்கு வந்துசேர்ந்த அலங்கார ஊர்தியினைச் செங்கப்பள்ளி பேருந்து நிறுத்தம் அருகில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மலர்தூவி வரவேற்றார்.

01.02.2022, 02.02.2022 ஆகிய நாட்களில் திருப்பூர், பெருமாநல்லூர் பேருந்து நிலையத்தில் காட்சிப்படுத்தப்பட்ட அலங்கார ஊர்தியினைப் பொதுமக்கள் பெருந்திரளாகப் பார்வையிட்டுப் பயனடைந்தனர். சிறப்புக் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.




01.02.2022 அன்று, தூத்துக்குடி மாவட்டத்திற்கு வந்துசேர்ந்த அலங்கார ஊர்தியினை மாண்புமிகு சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி. கீதாஜீவன் அவர்கள் எட்டயபுரம் விளாத்திகுளம் விலக்கில் மலர்தூவி வரவேற்றார். தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரி அருகேயுள்ள அறிவியல் பூங்கா பகுதியில் காட்சிப்படுத்தப்பட்ட அலங்கார ஊர்தியினை



மாணவ, மாணவிகள், பொதுமக்கள் திரளாகப் பார்வையிட்டுப் பயனடைந்தனர்.

பின்னர், 02.02.2022 அன்று மாலையில் கோரம்பள்ளம் பகுதிக்கு வந்துசேர்ந்த அலங்கார ஊர்தியினை மாண்புமிகு மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் கலைநிகழ்ச்சிகளுடன் மலர்தூவி வரவேற்றார்.



03.02.2022 அன்று, சேலம் பேருந்து நிலையம் அருகில் உள்ள மாநகராட்சித் திடலில் காட்சிப்படுத்தப்பட்ட அலங்கார ஊர்தியிலுள்ள தியாகிகள் சிலைகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார். நாள்முழுவதும் கலைநிகழ்ச்சிகளுடன் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாணவ, மாணவிகள், பொதுமக்கள் பெருந்திரளாகக் கலந்துகொண்டு அலங்கார ஊர்தியினைப் பார்வையிட்டுப் பயனடைந்தனர்.





திருநெல்வேலி மாவட்டத்திற்கு 03.02.2022 அன்று, வந்தடைந்த அலங்கார ஊர்திக்கு உத்தம பாண்டியன்குளம் கிராமத்தில், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு.மு.அப்பாவு அவர்கள், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் அவர்கள், சட்டமன்ற



உறுப்பினர்கள் ஆகியோர் கலை நிகழ்ச்சிகளுடன் மலர்தூவி வரவேற்றனர்.

திருநெல்வேலி புதிய பேருந்து நிலையம் அருகே காட்சிப்படுத்தப்பட்ட அலங்கார ஊர்தியிலுள்ள திருவுருவச்சிலைகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார். பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர், பொதுமக்கள் அலங்கார ஊர்தியினைப் பார்வையிட்டுப் பயனடைந்தனர்.



04.02.2022 அன்று, வள்ளியூர் பேருந்து நிலையம் அருகே வந்துசேர்ந்த அலங்கார ஊர்தியினை மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு.மு. அப்பாவு அவர்கள் மலர்தூவி பார்வையிட்டார்.

04.02.2022 அன்று, நாமக்கல் மாவட்டத்திற்கு வந்துசேர்ந்த அலங்கார ஊர்தியினை மாவட்ட எல்லையான மல்லூரில் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் மரு. மா.மதிவேந்தன் அவர்கள் தலைமையில் சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது. மேலும், நாமக்கல் பூங்காச் சாலைப் பகுதியில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் வரவேற்பு அளிக்கப்பட்டது.



05.02.2022 அன்று, கரூர் மாவட்ட எல்லையான தவிட்டுப்பாளையம் அருகே பாலத்துறை மேம்பாலத்தில் மங்கள வாத்தியங்கள் முழங்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. 06.02.2022 அன்று, திருவள்ளுவர் மைதானத்தில் காட்சிப்படுத்தப்பட்ட அலங்கார ஊர்தி அருகில் நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சிகள் மற்றும் மாறுவேடப் போட்டிகள் நடத்தப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டன.



கன்னியாகுமரிக்கு 05.02.2022 அன்று வந்துசேர்ந்த அலங்கார ஊர்திக்கு மகாதானபுரம் சந்திப்பில் மாண்புமிகு தகவல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.த.மனோ தங்கராஜ் அவர்கள் தலைமையில் மேளதாளங்கள் முழங்க சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. கன்னியாகுமரி காந்தி நினைவு மண்டபம் அருகே காட்சிப்படுத்தப்பட்ட அலங்கார ஊர்திக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டதுடன் இரு தினங்கள் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.



06.02.2022 அன்று, திருச்சி மாவட்டம் சத்திரம் பேருந்து நிலையம் வந்துசேர்ந்த அலங்கார ஊர்திக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. 07.02.2022, 08.02.2022 ஆகிய நாட்களில் மக்கள் பார்வைக்குக் காட்சிப்படுத்தப்பட்டு, பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.



07.02.2022 அன்று, விருதுநகர் மாவட்டத்திற்கு வந்துசேர்ந்த அலங்கார ஊர்தியினை மாவட்ட எல்லையில் மாண்புமிகு வருவாய்த்துறை மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்கள், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்கள் ஆகியோர் மலர்தூவி வரவேற்றனர்.



அதனைத்தொடர்ந்து, வெங்கடாச்சலபுரம் ஜங்ஷன், ஆர்.ஆர். நகர் ஆகிய இடங்களில் பொதுமக்கள் பார்வைக்குக் காட்சிப்படுத்தப்பட்டது.

பின்னர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வந்த அலங்கார ஊர்தியினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மலர்தூவி வரவேற்றார்.

08.02.2022 அன்று, தஞ்சாவூர் மாவட்டம், மேலவஸ்தா சாவடிக்கு வந்துசேர்ந்த அலங்கார ஊர்தியினை மங்கள வாத்தியங்கள் முழங்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தப்பாட்டம், மயிலாட்டம், காளையாட்டம், சிலம்பாட்டம், புலியாட்டம், கரகாட்டம் மற்றும் மேளதாளத்துடன் இரண்டு ஊர்திகளும் புதிய பேருந்து நிலையத்திற்குக் கொண்டுவரப்பட்டு, பொதுமக்களின் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டது. பொதுமக்கள் மாணவ, மாணவிகள் ஊர்திகளைப் பார்வையிட்டதுடன் செல்பி எடுத்து மகிழ்ந்தனர்.



08.02.2022 அன்று, தேனி மாவட்டம் பங்களாமேடு பகுதிக்கு வந்துசேர்ந்த அலங்கார ஊர்திக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் கிராமிய கலைநிகழ்ச்சிகளுடன் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இங்குக் காட்சிப்படுத்தப்பட்ட அலங்கார ஊர்தியினை

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்களும், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியரும் பார்த்து ரசித்தனர்.



09.02.2022 அன்று, திண்டுக்கல் மாவட்டம் வந்துசேர்ந்த அலங்கார ஊர்தியினை, ரவுண்டான அருகேயுள்ள அங்குவிலாஸ் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் பொதுமக்களின் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டு, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.ஐ.பெரியசாமி அவர்கள் அலங்கார ஊர்தியினை வரவேற்று மலர்தூவி வரவேற்றார். பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அலங்கார ஊர்தியினைப் பார்வையிட்டார். பள்ளி மாணவர்களின் சார்பில் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.




10.02.2022 அன்று, தருமபுரி மாவட்டம் வந்துசேர்ந்த அலங்கார ஊர்தியினை, நல்லம்பள்ளி அருகே பாகலஹள்ளி லட்சுமி நாராயண பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் பொதுமக்கள் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் மலர்தூவி சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து கலைப் பண்பாட்டுத்துறையின் சார்பில் கரகாட்டம் உள்ளிட்ட பல்வேறு கலைநிகழ்ச்சிகள், பள்ளி–கல்லூரி மாணவ, மாணவிகள் பங்கேற்ற கலைநிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள், கருத்துரைகள் நடத்தப்பட்டன.



10.02.2022 அன்று, திருவாரூர் மாவட்டத்திற்கு வந்துசேர்ந்த அலங்கார ஊர்திகளை மாவட்ட எல்லையான வடுவூர் கிராமத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மலர்தூவி வரவேற்றார்.

மன்னார்குடி, தேரடித் திடலில் காட்சிப்படுத்தப்பட்ட அலங்கார ஊர்திகளை மாண்புமிகு உணவு மற்றும் உணவு பொருள்வழங்கல்துறை அமைச்சர் திரு. அரா.சக்கரபாணி அவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார். கலைப் பண்பாட்டுத்துறையின் சார்பில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.





11.02.2022 அன்று, அரியலூர் பேருந்து நிலையத்திற்கு வந்தடைந்த அலங்கார ஊர்திகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் மலர்தூவி சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டு, பொதுமக்கள், மாணவ, மாணவியர்களின் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து மாணவ, மாணவியர்களின் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.



11.02.2022 அன்று மாலை, கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் ஒன்றியம், ஜெகதாப் ஊராட்சி, தேசிய நெடுஞ்சாலை சந்திப்பில் வந்துசேர்ந்த அலங்கார ஊர்தியினை, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில், மாவட்ட நிருவாகம் சார்பில் மேளதாளங்கள், கரகாட்டம், ஒயிலாட்டம், மயிலாட்டம், சிலம்பாட்டம் உள்ளிட்ட தமிழகப் பாரம்பரிய நாட்டுப்புற நடனங்களுடன் அலங்கார ஊர்திக்கு மலர்தூவி சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. மேலும், ஜெகதாப் ஊராட்சியில் பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவிகளின் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டது. 12.02.2022 அன்று, புதிய பேருந்து நிலையத்தில் அலங்கார ஊர்தி காட்சிப்படுத்தப்பட்டது. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள் அலங்கார ஊர்திக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.



12.02.2022 அன்று, பெரம்பலூர் மாவட்ட எல்லையான குன்னம் பகுதிக்கு வந்துசேர்ந்த அலங்கார ஊர்திக்கு மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினர். தொடர்ந்து பெரம்பலூர் பாலக்கரை அருகே பொதுமக்கள் பார்வையிடும் வகையில் அலங்கார ஊர்திகள் நிறுத்தப்பட்டுக் காட்சிப்படுத்தப்பட்டன. அதனைத்தொடர்ந்து பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. "விடுதலைப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கு" என்ற தலைப்பில் உரையாடல் நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.



12.02.2022 அன்று, திருப்பத்தூர் மாவட்ட எல்லையான நாட்றாம்பள்ளி வட்டம், வெலகல்நத்தம் தேசிய நெடுஞ்சாலை சந்திப்பிற்கு வந்துசேர்ந்த அலங்கார ஊர்தியினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் மலர்தூவி வரவேற்றனர். இதனைத் தொடர்ந்து கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவியர் கண்டு மகிழ்ந்தனர். 13.02.2022 அன்று, நாட்றாம்பள்ளி, வாணியம்பாடி மற்றும் ஆம்பூர் இந்து மேல்நிலைப்பள்ளி அருகே தேசிய நெடுஞ்சாலை ஆகிய இடங்களில் காட்சிப்படுத்தப்பட்ட அலங்கார ஊர்தியின் முன்பாக பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவியர் செல்பி எடுத்து மகிழ்ந்தனர்.



13.02.2022 அன்று, கடலூர் மாவட்டம், விருதாச்சலம் அடுத்த பரவலூர் கிராமத்திற்கு வந்து காட்சிப்படுத்தப்பட்ட அலங்கார ஊர்திக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து மாணவர்கள் காந்தியடிகள், பாரதியார் போன்ற தேசத்தலைவர்களின் வேடமணிந்து பார்வையாளர்களைக் கவர்ந்தனர். பல்வேறு கலைநிகழ்ச்சிகளைப் பொதுமக்கள் கண்டு ரசித்தனர்.



14.02.2022 அன்று, கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை, சுங்கச்சாவடியில் காட்சிப்படுத்தப்பட்ட அலங்கார ஊர்திக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. ஊர்தி வரவேற்பினைத் தொடர்ந்து மாணவ, மாணவியரின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.



15.02.2022 அன்று, மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.க.பொன்முடி அவர்கள் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பெருந்திட்ட வளாக நுழைவுவாயில் அருகில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த அலங்கார ஊர்திக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்ற மாணவ, மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிசுகளை வழங்கினார்.



அதனைத்தொடர்ந்து, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் தேசிய நெடுஞ்சாலை ஆரியாஸ் உணவகம் அருகே வந்துசேர்ந்து காட்சிப்படுத்தப்பட்ட அலங்கார ஊர்திகளை, மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

14.02.2022 அன்று, வேலூர் மாவட்ட எல்லையான பள்ளிகொண்டான் அடுத்த கூத்தம்பாக்கம் தேசிய நெடுஞ்சாலை வந்தடைந்த அலங்கார ஊர்தியினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் மலர்தூவி வரவேற்றார். அங்கு காட்சிப்படுத்தப்பட்ட ஊர்திகளைப் பொதுமக்கள் கண்டு ரசித்து மகிழ்ந்தனர்.



15.02.2022 அன்று வேலூர் மாவட்டம், காட்பாடி ஒன்றியம், மேல்பாடி ஊராட்சி வள்ளிமலைப் பகுதிக்கு வருகைதந்த அலங்கார ஊர்தியை மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் மலர்தூவி வரவேற்றுக் கலைநிகழ்ச்சிகளைப் பார்வையிட்டார்.



15.02.2022 அன்று, ராணிப்பேட்டை மாவட்ட எல்லையான சீக்கராஜபுரம் பகுதிக்கு வந்துசேர்ந்த அலங்கார ஊர்திக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் மங்கள வாத்தியம் முழங்க மலர்தூவி உற்சாக வரவேற்பு அளித்தார். அதனைத்தொடர்ந்து, கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.



16.02.2022 அன்று, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள் ராணிப்பேட்டை முத்துக்கடை பேருந்து நிறுத்தத்தில் வந்துசேர்ந்த அலங்கார ஊர்திக்கு மலர்தூவி வரவேற்றுப் பார்வையிட்டார்.



16.02.2022 அன்று, செங்கல்பட்டு மாவட்டம், வெண்பாக்கத்தில் உள்ள அரசு தொழிற்பயிற்சி மையத்தில் காட்சிப்படுத்தப்பட்ட அலங்கார ஊர்திக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.



17.02.2022 அன்று, திருவண்ணாமலை நகராட்சி ஈசானிய மைதானத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த அலங்கார ஊர்தியினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் மற்றும் மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு.கு.பிச்சாண்டி அவர்கள் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.



அதனைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தி அலங்கார ஊர்தியினைப் பார்வையிட்டார். பின்னர், மாணவ, மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

17.02.2022 அன்று, காஞ்சிபுரம் மாவட்ட எல்லைக்கு வந்துசேர்ந்த அலங்கார ஊர்தியை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மலர்தூவி வரவேற்றார். அதனைத்தொடர்ந்து, வாலாஜாபாத் ஒன்றிய அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்ட அலங்கார ஊர்திகளை மாவட்ட ஆட்சியர் அவர்கள் பார்வையிட்டு, கலைநிகழ்ச்சிகளைத் தொடங்கிவைத்தார். அதனைத் தொடர்ந்து பள்ளி மாணவ, மாணவியர் பங்குகொண்ட, நாட்டுப்பற்றை விளக்கக்கூடிய நாடகங்கள் மற்றும் இசை நிகழ்ச்சிகள், கிராமிய கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.



தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் காட்சிப்படுத்தப்பட்ட விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்களிப்பைப் போற்றும் வகையில் வடிவமைக்கப்பட்ட அலங்கார ஊர்திகள் இறுதியாகச் சென்னை, மெரினா கடற்கரையில், விவேகானந்தர் இல்லம் எதிரே 20.02.2022 அன்று, பொதுமக்கள் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டது. மெரினா கடற்கரையில் காட்சிப்படுத்தப்பட்ட ஊர்திகளை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள் ஆகியோர் மலர்தூவி மரியாதை செய்து பார்வையிட்டார்கள்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 21.02.2022 அன்று, தலைமைச் செயலகத்திலிருந்து செல்லும் வழியில், இந்திய விடுதலைப் போரில் தமிழகச் சுதந்திரப் போராட்ட வீரர்களின் பங்களிப்பைப் போற்றுகின்ற வகையில் வடிவமைக்கப்பட்டு, சென்னையில் நடைபெற்ற குடியரசு நாள் விழாவில் கலந்துகொண்ட விடுதலைப் போரில் தமிழகம் என்ற மூன்று அலங்கார ஊர்திகளைச் சென்னை மெரினா கடற்கரை, காமராசர் சாலை, விவேகானந்தர் இல்லம் அருகே, பொதுமக்கள் கண்டுகளிக்கும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதை, திருவல்லிக்கேணி – ரேக்ஸ் மெட்ரிகுலேசன் பள்ளி, இ.வி.இ. மெட்ரிகுலேசன் பள்ளி, என்.கே.டி. தேசிய ஆண்கள் பள்ளி, மயிலாப்பூர் – பி.எஸ். பள்ளி ஆகிய பள்ளிகளின் மாணவ, மாணவியர்கள் கண்டுகளித்துக் கொண்டிருந்ததைக் கண்டு, தனது வாகனத்தை நிறுத்தச் சொல்லி அங்கிருந்த மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடி, அலங்கார ஊர்திகள் முன்பு மாணவச் செல்வங்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார். மேலும், அலங்கார ஊர்திகளைக் காணவந்த பொதுமக்களிடமும் கலந்துரையாடினார்.





மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அலங்கார ஊர்திகள் குறித்து மாணவ, மாணவியர்களிடம் கலந்துரையாடியபோது, இந்திய விடுதலைப் போரில் ஆங்கிலேயர்களைத் தீரமுடன் எதிர்கொண்ட தமிழகச் சுதந்திரப் போராட்ட வீரர்களின் வரலாற்றைப் பற்றி அறிந்துகொள்ள இது ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது என்று மாணவ, மாணவியர் தெரிவித்தார்கள்.

மேலும், பள்ளி மாணவ, மாணவியர்கள் அனைவரும் முகக்கவசங்கள் அணிந்து, அரசு வகுத்துள்ள கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றிப் பள்ளிக்குச் சென்று, நன்றாகப் படிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

சென்னையில் மெரினா கடற்கரையில் பொதுமக்கள் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்பட்ட அலங்கார ஊர்திகளை 22.02.2022 அன்று பொதுமக்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் குடும்பத்தினருடன் சென்று பார்வையிட்டனர். சுதந்திரப் போராட்ட வீராங்கனை கடலூர் அஞ்சலையம்மாளின் வாரிசுகளான ஆயிரம் விளக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன், முன்னாள் மாநில திட்டக்குழுத் துணைத் தலைவர் பேராசிரியர் மு. நாகநாதன் மற்றும் குடும்பத்தினர் பார்வையிட்டனர்.



நாள்தோறும் பொதுமக்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளும் பெருந்திரளாக இந்த அலங்கார ஊர்திகளைப் பார்வையிட்டனர்.

சமூக வலைத்தளங்கள் மூலம் பொதுமக்கள், மாணவர்கள் உட்பட பல்வேறு தரப்பினர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு விடுத்த கோரிக்கையை ஏற்று, 20.02.2022 முதல் 23.02.2022 வரை காட்சிப்படுத்தப்படவிருந்த அலங்கார ஊர்திகளை மேலும் ஒரு வார காலத்திற்குக் காட்சிப்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார். அதனடிப்படையில், சென்னை மெரினா கடற்கரைப் பகுதியில் 28.02.2022 வரை காட்சிப்படுத்தப்பட்ட அலங்கார ஊர்திகளைப் பொதுமக்களும், பள்ளி மாணவ, மாணவிகளும், சுற்றுலாப்பயணிகளும் கண்டுகளித்துப் பயனடைந்தனர்.

## ஏப்ரல் 14 :
## டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாள்



# மாமனிதர்

அம்பேத்கர் அவர்கள் அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக, கலங்கரை விளக்கமாக, அவர்களைக் கைதூக்கி விடுகின்ற காவலராகத் தோன்றியவர்.

அத்தகைய மாமேதை ஒடுக்கப்பட்ட சமுதாயத்திற்காக உழைத்துக்கொண்டே இருந்தவர். இன்றைக்கு இந்தியத் தரணியிலே நடமாடிக் கொண்டிருக்கின்ற அரசியல் சாசனத்தைத் தயாரித்துத் தந்த மூலகர்த்தா. நேருவினால் மாமனிதர் என்று போற்றப்பட்டவர் அம்பேத்கர்.

சுதந்திரத்தை யாரும் தேவையில்லை என்று கூறியது கிடையாது. வருகின்ற சுதந்திரம் பெயரளவிலே இருத்தல் ஆகாது. சுதந்திரம் கிடைக்க வேண்டும், அது யாருக்குக் கிடைக்க வேண்டும். விரல் விட்டு எண்ணக்கூடிய சில சீமான்கள், கோமான்கள், மிட்டா மிராசுகள், குட்டிக் குபேரர்கள் அவர்களுக்கல்ல சுதந்திரம். அவர்கள் மேனாமினுக்கிகளாக வாழ அல்ல, சுதந்திரம்.

இந்த நாட்டிலே நாயோடு போரிடுகிறார்களே சோற்றுக்கு, அவர்களுக்குத் தேவை சுதந்திரம். அந்த ஏழை மனிதனுக்குத் தேவை சுதந்திரம். இன்னமும் தொட்டால் தீட்டு, அருகில் வராதே, ஆலயத்தில் நுழையாதே, அர்ச்சகராக இருக்க உனக்கு என்ன தகுதி என்று கேட்கப்படுகின்றதே கேள்வி, அந்தக் கேள்வி இருக்கிற வரையில் இந்தியா சுதந்திரம் பெற்றுவிட்டதாக என்னால் நம்ப இயலாது.

எனவே, சுதந்திரம் என்றால் முழுமையானதாக, பரிபூர்ணத்துவம் வாய்ந்ததாக இருந்திட வேண்டுமென்று விரும்பியவர்களிலே ஒருவர்தான் புரட்சித்தலைவன் அம்பேத்கர்.

சோவியத் நாட்டிலே ஒரு புரட்சித்தலைவன் தோன்றினான் மாவீரன் லெனின். அதைப்போல் ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்காகத் தோன்றிய புரட்சித்தலைவர்தான் அம்பேத்கர்.

–முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்கள்

(வடஆற்காடு அம்பேத்கர் மாவட்டம் தொடக்க விழா உரையிலிருந்து – 30.09.1989)

## ஏப்ரல் 17 :
## தீரன் சின்னமலை அவர்களின் பிறந்தநாள்



# ஓடாநிலைக் கோட்டை மன்னன்

இந்திய விடுதலைப் போராட்ட வீரர், தமிழகத்தில் ஆங்கிலேயக் கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியை எதிர்த்து கருப்ப சேர்வையுடன் இணைந்து போரிட்ட, கொங்கு நாட்டில் ஓடாநிலைக் கோட்டை கட்டி ஆண்ட தீரன் சின்னமலை 17.04.1756 அன்று பிறந்தார்.

திப்புவிடம் நன்மதிப்புப் பெற்றிருந்த தீரன் சின்னமலை, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை வேரறுக்க, திப்புப் படையினருடன் கைகோர்த்தார். கொங்கு மண்டலத்தில் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்த தீரன் சின்னமலை, பயிற்சி பெற்ற இளைஞர் படையுடன் மைசூர் போர்களில் திப்பு சுல்தானின் படையினருடன் ஆங்கிலேயரை எதிர்த்து வெற்றி வாகை சூடினார். சின்னமலையில் கொங்குப்படை. சித்தேஸ்வரம், மழவல்லி, ஸ்ரீரங்கப்பட்டினம் பகுதிகளில் திப்புவுடன் கூட்டணி அமைத்துத் திறம்படப் போரிட்டார் சின்னமலை.

திப்புவின் மரணத்துக்குப்பின், அரச்சலூர் அருகே ஓடாநிலையில் கோட்டைக் கட்டிய சின்னமலை, ஆங்கிலேயரை எதிர்ப்பதற்காகச் சிவன்மலை அருகே இளைஞர்களுக்கு ஆயுதப்பயிற்சி அளித்தார். பிரெஞ்சு நாட்டவர்களுடன் இணைந்து பீரங்கிகளைத் தயார் செய்யும் பணியில் முழுவீச்சாக இறங்கினார். திப்புவின் படையில் முக்கிய வீரராக அறியப்பட்ட தூண்டாஜிவாக், பரமத்தி அப்பாச்சி, விருப்பாச்சி கோபால நாயக்கர் ஆகியோருடன் இணைந்து 1800ஆம் ஆண்டு கோவைக் கோட்டையைத் தகர்க்கத் திட்டமிட்ட முயற்சி தோல்வியில் முடிந்தது.

1801ஆம் ஆண்டில் பவானி காவிரிக் கரையில் நடைபெற்ற போரில் ஆங்கிலேயப் படைகளைத் துவம்சம் செய்தார். 1802இல் சென்னிமலைக்கும், சிவன்மலைக்கும் இடையே நடந்த போரிலும், 1804இல் அரச்சலூரில் உள்ள கர்னல் ஹாரிஸின் ஆங்கிலேயப் படையையும் வென்று வரலாற்று வெற்றிகளைப் பதிவு செய்தார் சின்னமலை.

சின்னமலையைச் சிக்க வைக்கத் திட்டமிட்ட ஆங்கிலேய அரசு, அவரின் சமையல்காரர் மூலம் வலைவிரித்தது. இறுதியாக அவரது சகோதரர்களுடன் கைது செய்யப்பட்டார் தீரன் சின்னமலை. சங்ககிரியில் உள்ள மலைக்கோட்டைக்கு அழைத்துச் செல்லப்பட்ட தீரன் சின்னமலை 1805ஆம் ஆண்டு தூக்கிலிடப்பட்டார்.

## பிப்ரவரி 19 : தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே.சா. அவர்களின் பிறந்தநாள்



"பொதியமலைப் பிறந்தமொழி வாழ்வறியும்
காலமெலாம் புலவோர் வாயில்
துதியறிவாய்! அவர் நெஞ்சில் வாழ்த்தறிவாய்
இறப்பின்றித் துலங்கு வாயே!"

– என்று கவி பாரதி பாட்டில் போற்றிய பைந்தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாதய்யர் அவர்கள், பண்டைத் தமிழக மக்களின் மாண்புகளை இன்று பாரறியப் பறைசாற்றி நிற்கின்ற பத்துப்பாட்டு நூல்களையும், பதிற்றுப்பத்து, புறநானூறு, ஐங்குறுநூறு, பரிபாடல் ஆகிய நான்கு எட்டுத்தொகை நூல்களையும், சேர இளவல் யாத்த சிலப்பதிகாரத்துடன் சீவக சிந்தாமணி, மணிமேகலை ஆகிய செந்தமிழ்க் காப்பியங்களையும் இன்னபிற இலக்கிய இணைக்கணப் பனுவல்களையும் தேடிப்பிடித்துக் கறையான்களிடமிருந்து காப்பாற்றி, ஓலைச் சுவடிகளிலிருந்து உருமாற்றி உரைவகுத்து அச்சு நூல்களாக அவற்றை ஆக்கித் தந்த அளப்பரும் பணிகளை ஆற்றியமையால்தான் இன்று நாம் அந்நூல்களையெல்லாம் காண முடிகிறது; தமிழர்தம் பண்பாட்டு மரபுகளைக் கண்டுகளிக்க முடிகிறது. தமிழ்க்கவி இன்பத்தைச் சுவைக்க முடிகிறது.



– முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்கள்

## தமிழ்த்தாத்தா



தமிழ்த் தொன்மையின்
அடையாளங்களான சங்க
இலக்கியங்கள்; சமணம்,
பவுத்தக் காப்பியங்கள் உள்ளிட்ட
எண்ணற்ற பழந்தமிழ் நூல்களின்
ஏட்டுச்சுவடிகளை அலைந்து
திரிந்து அச்சிலேற்றித் தமிழ்ப்
பதிப்பு வரலாற்றில் நிலைபெற்றிட்ட
தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்களின்
பிறந்தநாளில் அவர்தம்
தொண்டைப் போற்றுகிறேன்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே.சா. அவர்களின் 168ஆவது பிறந்தநாளையொட்டி 19.02.2022 அன்று, சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அன்னாரது திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.



## பிப்ரவரி 18 : சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர் அவர்களின் பிறந்தநாள்

சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர் அவர்களின் 163ஆவது பிறந்தநாளையொட்டி, 18.02.2022 அன்று சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.



சிந்தனைச்சிற்பி ம. சிங்காரவேலரை நினைவுகூரும் வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், அன்னாரின் பிறந்தநாளை அரசு விழாவாகக் கொண்டாட அறிவித்தார். சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு 'சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மாளிகை' என்று பெயர் சூட்டினார். அவ்வளாகத்தில் அன்னாரின் திருவுருவச் சிலையைத் திறந்துவைத்தார். மீனவர் வீட்டுவசதி திட்டத்திற்குச் 'சிங்காரவேலர் நினைவு மீனவர் வீட்டுவசதித் திட்டம்' எனப் பெயர்சூட்டி பெருமை சேர்த்தார்.

ஏப்ரல் 27 :
சர்.பிட்டி. தியாகராயர் அவர்களின் பிறந்தநாள்



# வெள்ளுடை வேந்தர்

**நீ**திக்கட்சியின் நிறுவனர்களுள் ஒருவரும், திராவிட இயக்கத்தில் மூத்த தலைவர்களில் ஒருவராகவும் போற்றப்படும் வெள்ளுடை வேந்தர் சர்.பிட்டி.தியாகராயர் 27.04.1852 அன்று பிறந்தார். இவர் வழக்கறிஞராகவும், தொழிலதிபராகவும் திகழ்ந்தார்.

1905ஆம் ஆண்டு இங்கிலாந்து இளவரசர் 5ஆம் ஜார்ஜ் சென்னை வந்தபோது, நகராண்மைத் தலைவராக இருந்த சர்.பிட்டி.தியாகராயர், இளவரசரை வெள்ளுடை அணிந்து வரவேற்க அப்போதைய கவர்னர் ஒப்புதல் அளித்தார்.

1916ஆம் ஆண்டு பிராமணரல்லாத சாதியினரின் நலனுக்காகக் குரல் கொடுக்க டாக்டர் டி.எம்.நாயருடன் சேர்ந்து நீதிக்கட்சியைத் தொடங்கினார். சர்.பிட்டி. தியாகராயர் நீதிக்கட்சியின் தலைவராகச் சிறப்பாகக் கட்சியை வழிநடத்தினார். தியாகராயரின் கொள்கை விளக்க அறிக்கை, மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியமையால் பொதுமக்கள் நீதிக்கட்சியின் கொள்கைகளுக்கும், திட்டங்களுக்கும் பேராதரவு தந்தனர். நீதிக்கட்சி இந்தியாவுக்கு விடுதலை வேண்டும் என்று வலியுறுத்தியது. அதே நேரத்தில் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் ஆகியோருக்கு முழு உரிமையும், பாதுகாப்பும் வேண்டும் என்று கோரியது.

சர்.பிட்டி.தியாகராயர் அவர்களின் தன்னலமற்ற விடாமுயற்சியால் நீதிக்கட்சி மக்களின் நம்பிக்கையைப் பெற்றது. 1921ஆம் ஆண்டு நடைபெற்ற சென்னை மாநில சட்டமன்றத் தேர்தலில் நீதிக்கட்சி அறுதிப்பெரும்பான்மைப் பெற்று ஆட்சி அமைக்க முன்வந்தது. அப்போதைய ஆங்கிலேய ஆளுநர் வெலிங்டன் பிரபு அவர்கள் நீதிக்கட்சியின் தலைவராக விளங்கிய தியாகராயரை ஆட்சி அமைக்க வருமாறு அழைப்பு விடுத்தார். ஆனால், முதலமைச்சர் பதவியை ஏற்க விரும்பாமல் கடலூர் வழக்கறிஞர் சுப்பராயலு ரெட்டியாரை முதலமைச்சராகப் பொறுப்பேற்கச் செய்தார்.

1909ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் நாள் ராவ் பகதூர் பட்டம் பிரிட்டிஷ் அரசால் சர்.பிட்டி.தியாகராயருக்கு வழங்கப்பட்டது. 1919ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் நாள் திவான் பகதூர் பட்டமும் வழங்கப்பட்டது. சர்.பிட்டி. தியாகராயர் 28.04.1925 அன்று இயற்கை எய்தினார்.

ஏப்ரல் 29 :
பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்தநாள்



# கவிதைச் சுரங்கம்

**பா**ளைச்சிரிப்பு, பசு நெய்யின் நறுமணம், வாளைமீன் துள்ளல், வரிப்புலியின் கனல் பார்வை எல்லாமே இணைந்திட்ட கவிதைச் சுரங்கமே பாரதிதாசன்.

பாற்கடலைப் பற்றிப் புராணங்கள் பகர்ந்திடக் கேட்டிருக்கிறோம். பாரதிதாசனோ, பாற்கடலாகவே பரந்து விரிந்து, தமிழ்மண்ணின் நெஞ்சமெல்லாம் நிறைந்து நின்றார்.

அந்தக் கடலிலே உவமையழகு, உணர்ச்சித் துடிப்பு, புதுமை நோக்கு, புரட்சி வெடிப்பு அனைத்துமே அலைகளாகப் பொங்கியெழுந்து சீறிப்பாய்ந்தன. சிலம்பமும் ஆடின. அவருடைய உருவமே மிடுக்கானது. அந்த உள்ளத்திலிருந்து வெடித்துக் கிளம்பிய சொல்லாட்சியோ, எல்லாவற்றையும்விட மிடுக்கானது. இழிதகைமையை, ஈனச்செயல்களை மிதித்துத் துவட்டக் கூடியது.

திருவாரூரில் தமிழ் மாணவர் மன்றம் என்னும் ஓர் அமைப்பினை உருவாக்கி என்னாலியன்ற தொண்டினை இயற்றி அதன் ஓராண்டு நிறைவு விழாவினை நான் நடத்திய காலை, அதனை வாழ்த்திடும் முகத்தான் அவர் வரைந்தனுப்பிய வீரங்கொப்பளித்திடும் வரிகள் இன்றைக்கும் என் இதயத்திலே ஈரங்காய்ந்திடாமல் எழுச்சியை, இனமொழி, நாட்டுப்பற்றினைச் சூடேற்றிய வண்ணம் உள்ளன.

பகுத்தறிவுப் புரியின் காவலர்களாக அவரது பழைய கவிதை வரிகளை நிறுத்தி வைத்துவிட்டு அவர் போய்விட்டார். பாரதிதாசன் என்பது இனி ஒரு தனி மனிதரின் பெயரல்ல. தமிழ் இன்பம் பொழிகின்ற கவிதைத் தொகுப்பின் பெயர். அந்தப் பாரதிதாசனை என்றென்றும் நம்மிடையே வைத்துப் போற்றுவோம்.

–முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்கள்







# தமிழரசு

## மாத வெளியீடு \ செய்தித்துறையின் வெளியீடு

**தமிழரசு (தமிழ்) மாத இதழ்**

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ.20 |
| ஆண்டுச் சந்தா | : | ரூ.240 |
| ஆயுள் சந்தா (அஞ்சல் கட்டணம் உட்பட) | : | ரூ.2,000 (10 ஆண்டுகள்) |

**தமிழரசு (ஆங்கிலம்) மாத இதழ்**

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ.20 |
| ஆண்டுச் சந்தா | : | ரூ.240 |
| ஆயுள் சந்தா (அஞ்சல் கட்டணம் உட்பட) | : | ரூ.2,400 (10 ஆண்டுகள்) |

**படிக்க! பயனடைய!! பாதுகாக்க!!!**

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், உரைகள், நிகழ்ச்சிகள், அரசின் மக்கள் நலத்திட்டங்கள் மற்றும் அரசாணைகளை முழுமையாக அறிந்து பயனடைய...

## இ–சேவை மையங்கள் வாயிலாக தமிழரசு சந்தாத் தொகை செலுத்தும் வசதி!



மேலும், தமிழரசு சந்தாத் தொகையினை வங்கி வரைவோலையாகவோ, பணவிடை மூலமாகவோ
**இணை இயக்குநர் (வெளியீடுகள்), தமிழரசு அலுவலகம்,**
**இராஜீவ் காந்தி சாலை, கானகம், தரமணி, சென்னை–600 113**
என்ற முகவரிக்குத் தங்களின் பெயர், கதவு எண், தெருப்பெயர்,
ஊர், மாவட்டம், அஞ்சல் குறியீட்டு எண் மற்றும்
கைப்பேசி எண் ஆகியவற்றைச் சரியாக எழுதி அனுப்பித்
தமிழரசு இதழைப் பெற்றுக்கொள்ளலாம்.

**தமிழரசு இதழுக்கு www.tamilarasu.org என்ற இணையதளத்தில் சந்தாத் தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.**




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்,
27.02.2022 அன்று, சென்னை, ஆழ்வார்பேட்டையில் தீவிர பல்ஸ் போலியோ சொட்டு மருந்து முகாமினைத் தொடங்கி வைத்தார்.

# தமிழரசு

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2021-2023
& WPP No. TN/PMG (CCR) 518/2021-2023

*Date of Publication : 2nd week of every month*
*Date of Posting : 27th - 30th of every month*




அலங்கார ஊர்தியைப் பார்வையிடும்
மாணவியர்களுடன் மாண்புமிகு முதல்வர்...

Published by Dr.V.P. JEYASEELAN, I.A.S., on behalf of Information and Public Relations Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor: Dr.V.P. JEYASEELAN, I.A.S.,